
சுவடி : 44
ஏடு : 12
நவம்பர்
2020
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**இரா.பச்சமலை**
**வாலாசா வல்லவன்**
**சா. குப்பன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
முனைவர் **முத்தமிழ்**
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**'சிந்தனையாளன்'**
பெரியார்-நாகம்மை அறக்கட்டளை
வளாகம்
மனை எண்.277/2
சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை,
பெரியார்-நாகம்மை நூலகம்
அம்பத்தூர், சென்னை - 600 050.
தொடர்புக்கு :
**94448 04980**
**86681 09047**
**95975 26990**
மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly
@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*

ஆசிரியவுரை

# தமிழ்நாடு நம்நாடு!
## தன்னுரிமை பெற்ற தமிழ்நாடு அமைந்திட
## உயர்த்திப் பிடிப்போம் தமிழ்நாட்டுக் கொடியை!



**த**ந்தை பெரியார் அவர்கள்தான் இந்திய ஒன்றிய வரலாற்றில் முதன்முதலாக 1.6.1930-இல் சேலத்தில் “இந்தியா ஒரு நேஷனா?” என்கிற ஆழமான ஒரு கேள்வியை எழுப்பி, “மற்ற நாட்டார்கள் தங்கள் நாட்டை ஒரு நாடாக்கி, நம் நாட்டையும் அதோடு சேர்க்கப் பார்க்கிறார்கள்” என்கிற எச்சரிக்கைமணியை ஒலித்தார்.

இது, இந்தியாவிலுள்ள மொழித் தேசங்களுக்கு விடுதலையோ, தன்னுரிமையோ அல்லது மாநில சுயாட்சி என்கிற பெயரிலோ அரசியல் உரிமைகளைக் கோருகிற எல்லா அமைப்புகளும் கட்சிகளும் இன்றும் ஆழமாகச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய மிகப் நுட்பமான செய்தி.

ஏனெனில், கி.பி. 1801-இல் தான் கன்னியாகுமரி முதல் காசுமீர் வரை உள்ள நிலப்பரப்பு இந்தியா என்னும் ஓர் ஆட்சிப்பரப்பாக ஆக்கப்பட்டது. கி.மு. 320 முதல் இப் பெரிய நிலப்பரப்பில் எண்ணற்ற நகர அரசுகள், சிற்றரசுகள், பேரரசுகள் இருந்தன. அசோகர் ஆட்சிக்காலம் (கி.மு. 273-232), அக்பர் ஆட்சிக் (கி.பி. 1556-1605) காலப் பேரரசுகளே பெரியவை. கடைசிப் பாண்டியர் அரசு கி.பி.1310-இல் அழிந்தது. அக் காலங்களில்கூடத் தமிழ்நாடு அவர்களின் ஆட்சிகளுக்கு உட்பட்டிருக்கவில்லை. அதுவரையில் சேர, சோழ, பாண்டியர்களின் ஆட்சிகளுக்கே தமிழகம் உட்பட்டிருந்தது.

கி.பி. 1600-இல் கிழக்கிந்தியக் குழுமம் என்கிற வணிக நிறுவனத்தின் வழியாக இந்தியாவுக்குள் நுழைந்த வெள்ளையர், 1801-இல்தான் ஒரு பெரிய நிலப்பரப்பைக் கைக்கொண்டனர். அப்பெரிய பரப்பில் மூன்றில் இரண்டு பங்கைத் தம் நேரடி ஆட்சியிலும், மூன்றில் ஒரு பங்கைத் தமக்குக் கட்டுப்பட்ட 562 சிற்றரசுகளின் ஆட்சியிலும் வைத்துக்கொண்டு 1801-இல், 'இந்தியா' என்னும் ஒற்றை ஆட்சிப் பரப்பை உண்டாக்கினர். கி.பி. 1801 வரையில் இந்தியா என ஒரு நாடு இல்லை.

இந்தியா என்கிற நிலப்பரப்பு 1858-இல் சிலோன் என்கிற இலங்கை, ஆப்கனிஸ்தானம், பர்மா, கிழக்கு வங்கம், சிந்து, வடமேற்கு எல்லை மாகாணம் (பாகிஸ்தான்) என்கிற பகுதிகளையும் கொண்டிருந்தது. 1919-க்குள் சிலோன், ஆப்கனிஸ்தான் இவை பிரிந்தன. 1935-இல் பர்மா (மியான்மர்) பிரிந்தது. மற்ற பகுதிகள் 1947-இல் பாகிஸ்தான் என்கிற ஒரே நாடாகப் பிரிந்தன. பல பகுதிகள் அப்படிப் பிரிந்த பிறகும் 1947-க்குப்பிறகு இருந்த மிச்சப் பகுதியை மட்டும் 'இந்தியா' என்றே அழைத்தனர். கோவா, டையூ, டாமன், புதுச்சேரி, மாகி, காரைக்கால் இவை சேர்க்கப்பட்ட பிறகும் 'இந்தியா' என்று அழைக்கப்படுகிறது.

வெள்ளையன் உருவாக்கிய இந்தியாவிற்கு - இந்திய மக்களுக்கு விடுதலை பெற்றுத் தருவதற்காகத் தான் காங்கிரசுக்கட்சி தோன்றியது. அந்த இந்தியாவில் ஒவ்வொரு மொழிவழி மாநில மக்களிடையேயும் நிலவிய மொழி

உணர்வு, தனித்த பண்பாடு, கலை, கலாச்சாரம், வரலாற்றுணர்வு போன்றவை மக்களிடையே இந்தியா - இந்தியர் என்கிற உணர்வெழுச்சி பெற்று வெள்ளை ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடத் தடையாக இருப்பதை நன்குணர்ந்த காங்கிரசுக் கட்சி, ஒவ்வொரு மாகாணத் திலுமிருந்த மொழித்தேசங்களின் அடிப்படையிலேயே காங்கிரசைக் கட்டியமைத்தது.

2.12.1923-இல், திருச்சி தெப்பக்குளம், நகராட்சிக் கட்டடத்தில் திரு.வி.க தலைமையில் நடைபெற்ற காங்கிரசுக் கூட்டத்தில், தமிழ்நாடு மாநிலக் காங்கிரசுக் கமிட்டிக்குத்தான் பெரியார் ஈ.வெ.ரா முதலாவது தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

‘‘மாநிலங்களுக்குத்தான் அதிகபட்ச அதிகாரங்கள், எஞ்சிய அதிகாரங்கள்தான் இந்திய ஒன்றிய அரசுக்கு இருக்கும்’’ என்று 1920 முதல் 1947-இல் பாகிஸ்தான் பிரிகிறவரை பேசிவந்த காங்கிரசு, சுதந்தர இந்தியாவுக் கான அரசமைப்புச்சட்டத்தை உருவாக்கும்பொழுது, காங்கிரசுப் பார்ப்பனர்களின் சூழ்ச்சியால் அதற்கு நேரெதிரான - மொழித்தேசங்களைச் சிதைத்து அழித் தொழித்திடத் தேவையான - முற்றதிகாரம் கொண்ட ஒரு இந்தியாவை அமைப்பதற்கான அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிக்கொண்டது.

இந்தியாவுக்கான கொடியை இந்திய விடுதலை அறிவிப்புக்கு முன்பாகவே, இந்தியாவிலிருந்த எந்த ஒரு மாகாண அரசையும் மக்களையும் கருத்துக் கேட்காமலேயே, 22.7.1947-இல், ஜவகர்லால் நேரு அரசமைப்புச் சட்ட அவையில் வெளியிட்டு, ‘‘நான் முன்வைக்கிற இந்தக் கொடி பேரரசின் கொடியோ, ஏகாதிபத்தியத்தின் கொடியோ, யாரையும் ஆதிக்கம் செலுத்தும் கொடியோ அல்ல. இது, எல்லா மக்களுக்கும் சுதந்தரம் அளிக்கிற சுதந்திரத்தின் அடையாளமான கொடி’’ என்று அறிவித்தார். அப்போதே மாநிலங்களுக் கான கொடியைப் பற்றி அறிவித்திருக்க வேண்டும். நேருவோ, காங்கிரசோ, வேறு எந்தக் கட்சிகளுமோ இது பற்றி அப்போது கவலை கொள்ளவில்லை. மேலும், அந்தக் கொடிதான் இன்றைக்கு இந்திய ஏகாதிபத்தி யத்தின் முகமாக நின்று மாநிலங்களின் உரிமை களைப் பறிக்கிறது. நிற்க.

இந்தியாவில் மொழிவழி மாநிலக் கோரிக்கை தென்னிந்தியாவில்தான் - ஆந்திரத்தில்தான் முதன் முதலாக 1912-இலேயே எழுப்பப்பட்டது. அதே காலத்தில் வங்கத்திலிருந்து பீகாரும் ஒடிசாவும் பிரிக்கப்பட்டு ‘பீகார்-ஒடிசா’ மாகாணம் உருவாக்கப்பட்டது. பஞ்சாபில், ‘பஞ்சாபி சுபா’ கோரிக்கை 1920-களில் தொடங்கியது. 1935-இல் மொழி அடிப்படையில் ஒடிசா தனி மாகாண மாகப் பிரிக்கப்பட்டது. தமிழ் நாட்டிலும் இக் கோரிக்கை 1940-களில் எழுந்தது.

பண்டித நேரு தொடக்கம் முதல் இறுதிவரை மொழிவழி மாநிலப் பிரிவினைக்கு எதிர்ப்பாகவே இருந்தார். இது தனி நாடு பிரிவினைக் கோரிக்கை அன்று - அவரவர் மொழியையும் பண்பாட்டையும் பாதுகாக்கிற ஒரு கோரிக்கைதான் என்று தெரிந்தும் நேரு இக் கோரிக்கையை எதிர்த்தார்.

ஆயினும் பல மாநிலங்களில் இக் கோரிக்கை வீறிட்டு எழுந்தது. நெருக்கடிக்கு ஆளான நேரு, 1953 -இல் ‘மொழிவாரி மாநில அமைப்புக் குழு’வை அமைத் தார். அதன்படி 1.11.1956-இல் ‘தமிழ்நாடு’ மாநிலம் அமைந்தது; ஆந்திர மாநிலம் அமைந்தது; கருநாடக மாநிலம் அமைந்தது. இவற்றைப்போலவே 1956-இல், மொத்தம் 16 மாநிலங்கள், 3 யூனியன் பிரதேசங் கள் உருவாகின. பிறகு புவியியல் கூறுகளைக் கொண்டும் பல மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. இன்றைக்கு 29 மாநிலங்களும் 8 ஒன்றியப் பகுதிகளும் உள்ளன.

1.11.1956-இல் மொழிவழி மாநிலங்கள் அமைந்த போதும் ஜம்மு-காசுமீர் தவிர்த்த எந்த ஒரு மாநிலமும் தனக்கென ஒரு கொடியை ஏற்படுத்திக்கொள்ளவில்லை. தமிழ்நாட்டிலும் உருவாக்கப்படவில்லை.

5.8.2019-இல், இந்திய அரசமைப்புச்சட்டத்தின் 370 மற்றும் 35-A பிரிவுகளை நீக்கியதன் முலம் 26.11.1957 முதல் அமலில் இருந்துவந்த ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் சிறப்புரிமையையும் பறித்துக் காசுமீரிகளின் இறையாண்மையைச் சிதைத்தது இன்றையப் பாசிச வெறிபிடித்த பாரதிய சனதா கட்சித் தலைமையிலான இந்திய ஒன்றிய அரசு.

இந்நிலையில், மொழிவழி மாநிலங்கள் தங்களின் உரிமைகள் பறிக்கப்படுவதைச் சுட்டிக்காட்டிடவும், தங்கள் மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் பெற் றிடவும், தங்கள் மக்களின் சமூகம், பொருளாதாரம், பண்பாடு, கல்வி போன்றவற்றைத் தாங்களே முடிவு செய்துகொள்ளுகிற தன்னாட்சி அதிகாரம் பெறுவதற் கான எழுச்சியை மக்களிடையே உருவாக்கிடவும், அதற்காகப் பாடுபட்ட பெருமக்களின் உழைப்பையும் ஈகத்தையும் அந்தந்த மொழி பேசும் மக்களிடம் விளக்கி நினைவுகூர்ந்திடவும் ஒவ்வொரு மொழித்தேச மாநிலங்களும் தங்கள் மாநிலம் அமைந்த நாளைத் தாயக நாளாகக் கொண்டாடுவதும், அவரரவர் மாநிலத் திற்கென ஒரு கொடியை உருவாக்கி உயர்த்திப் பிடிப் பதும் வரலாற்றுக் கடமையாகிறது.

இந்தியாவைத் தவிர்த்து, உண்மையான கூட் டாட்சியைப் பேணுகிற உலக நாடுகளிலுள்ள எல்லா மாநிலங்களும் தங்களுக்கென ஒரு தனிக் கொடியை வைத்துள்ளன. அந் நாடுகளின் அரசமைப்பும் அப்படியே அமைந்துள்ளது.

அந்த வகையில், கருநாடக மாநில மக்கள், 1.11.1956 தொடங்கி 'கருநாடக ராஜ்யோத்சவா' என்கிற பெயரில் - ஊர்தோறும், பள்ளிதோறும், நடுவண் அரசு அலுவல கங்கள், மாநில அரசு அலுவலகங்கள், தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள், தனியார் பணிமனைகள் தோறும் நவம்பர் முதல் நாளில் கருநாடக மாநிலக் கொடியை ஏற்றி, தெருவெல்லாம் தோரணங்கள் கட்டி ஆண்டு தோறும் ஒரு பெருவிழாவைக் கொண்டாடி வருகிறார்கள்.

இந் நாளில் மொழிவழி மாநிலம் அமைக்கப்படப் பாடுபட்ட தம் தலைவர்களின் பெருமையை விதந்து பேசுகிறார்கள்; தம் தாய்மொழி வளர்ச்சி பற்றிப் பேசுகிறார்கள்; தம் மாநில நலன் பற்றிப் பேசுகிறார்கள். இதை நான் நேரில் கண்டு பலமுறை பூரித்தேன்.

கருநாடக அரசு, 31.10.2008-இல் அம் மாநிலத் தொழிலாளர் துறைச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்து, கர்நாடக அரசு அலுவலகங்கள், தனியார் தொழில் நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் எல்லா வற்றுக்கும் நவம்பர் முதல் நாளைக் கட்டாய விடுமுறை நாளாக அறிவித்தது. இதை மீறுவோறுக்கு உருவா 10,000 தண்டமும் விதிக்கப்படுகிறது.

கருநாடகக் கொடியை அரசு அலுவலகங்கள், கல்வி நிறுவனங்களில் ஏற்றுவது தொடர்பாக 2012-இல் அம் மாநில உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கிலும் இந்திய ஒன்றிய அரசியலமைப்புச் சட்டம் மாநிலங்கள் கொடி வைத்துக் கொள்வதைத் தடுப்பதாகக் குறிப்பிடப்படவில்லை. கருநாடக அரசே குழு அமைத்து ஒரு கொடியை அறிவிக்கலாம் என்று தான் வழிகாட்டியது. அதன்படி 8.3.2018-இல் அன்றையக் காங்கிரசுக் கட்சிக் கருநாடக முதலமைச்சர் சித்த ராமையா ஒரு குழு அமைத்து கருநாடகக் கொடியை அறிவித்து இந்திய அரசுக்கும் தெரிவித்திருக்கிறார். இன்றைய பாரதிய சனதாக் கட்சி தலைமையிலான கருநாடக அரசு 2020-இலும் கொரானா சூழலில் கருநாடக நாள் விழா கொண்டாடுவதற்கான-கொடி யேற்றங்களுக்கான நெறிமுறைகளை வெளியிட்ட தோடு முதலமைச்சர் எடியூரப்பாவே கொடியும் ஏற்றிக் கொண்டாடியுள்ளார்.

மேலும், 1966 முதல், கருநாடக உரிமைகளுக் காகப் போராடிய - போராடிவருகிற தலைவர்களையும், அறிஞர்களையும் ஊக்குவித்திடும் வகையில் 'கருநாடக ராஜ்யோத்சவா விருது' அறிவித்து ஆண்டுதோறும் வழங்கி வருகிறது. 1.11.2020-இலும் 65 பேருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரை வரலாற்றில் எப்போதுமே தமிழ்நாட்டுக் கொடி என்று தனித்த ஒரு அரசின் கொடி அடையாளப்படுத்தப்பட்டதாக அறியப்பட முடியவில்லை. சேர, சோழ, பாண்டியர்களும் வில், புலி, கயல் ஆகியவற்றைத் தனித் தனியே அவரவர் கொடியாக வைத்திருந்தனரே தவிர அவற்றை ஒருசேர இணைத்து ஒரு பேரரசின் - தமிழ்நாட்டு அரசின் கொடியாக அறிவித்திடவில்லை. பின்னர் களப்பிரர்கள் ஆட்சியமைத்திட்டபோது அவர்கள் கொடியாக வில், புலி, கயல் இணைந்த கொடியை அறியமுடிகிறது.

27.8.1970-இல் அன்றைய முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி ஒரு தமிழ்நாட்டுக் கொடியை அறி வித்தார். அன்றைய இந்தியப் பிரதமராக இருந்த இந்திரா காந்தி அம்மையார் அதை ஏற்றுக்கொள்ள வில்லை. தமிழ்நாட்டு மக்களும் அதை ஏற்கவில்லை. அதனால் அந்த முயற்சி முன்னெடுக்கப்படவில்லை.

'தமிழ்நாடு மாநிலம் அமைந்த நாள் பெருவிழா' என்கிற பேரால், தமிழ்ச் சான்றோர் பேரவை என்னும் அமைப்பின் சார்பில், தோழர் நா. அருணாசலம் அவர்கள் 1992 முதல் பல ஆண்டுகள் தமிழ்நாட்டில் நடத்தினார். எல்லா அமைப்பினரும் அதில் பங்கேற் றனர்; மா.பெ.பொ.க. சார்பில் ஆண்டுதோறும் நான் பங்கேற்றேன்.

இப் பெருவிழாவைத் தனித் தனி அமைப்புகள் நடத்துவதை விடத் தமிழ்நாட்டு அரசே முன்வந்து, ஆண்டுதோறும், 'தமிழ்நாடு மாநிலம் அமைந்த நாள்' என அறிவித்து ஆணையைப் பிறப்பிக்க வேண்டும் எனவும், அரசு விழா எடுக்கவும் கோரித் தீர்மானமும் அப்போது நிறைவேற்றினோம்.

இந்தியாவில் ஓர் உண்மையான கூட்டாட்சியை அமைக்க வேண்டும் என, 1991 அக்டோபர் முதற் கொண்டு திட்டமிட்டு, அனைத்திந்திய அளவில், முடிந்த முயற்சிகளைச் செய்து வரும் - மா.பெ.பொ.க., 22.7.2012, ஞாயிறு அன்று, வேலூரில் நடைபெற்ற கட்சிப் பொதுக்குழுவில், எடுத்த முடிவின்படி ஆண்டு தோறும் நவம்பர் முதல்நாளைத் தமிழ்நாடு மாநிலம் அமைந்த நாள் பெருவிழாவை நடத்திடத் தீர்மானித்து அதன்படிக் கொண்டாடி வருகிறோம்.

தமிழ்நாட்டு மக்களின் நெடுநாள் கோரிக்கையை ஏற்று 25.10.2019 அன்று அரசாணை வெளியிட்டு, 1.11.2019-இல் தமிழ்வளர்ச்சித் துறை சார்பில் 10 இலக்க ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து அரசு விழா எடுத்துச் சிறப்பாகக் கொண்டாடிய தமிழ்நாட்டு அரசை மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின்

சார்பில் மனமார வரவேற்றுப் பாராட்டுகிறோம். அதே நேரத்தில் இந்த ஆண்டு, 31.10.2020-இல் வாழ்த்துச் செய்தி வெளியிட்டதோடு நிறுத்திக்கொண்ட தமிழ்நாட்டு அரசின் நிலை வருந்தத்தக்கது.

இந்நிலையில், 1.11.2020-இல் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு "தமிழ்நாடு நம் நாடு! தாயக நாளைக் கொண்டாடு!" என்ற முழக்கத்தோடு தமிழ்நாடு நாளை எல்லா ஊர்களிலும் கொண்டாடுவதைக் கூட்டமைப்பின் உறுப்பியக்கம் என்கிற நிலையில் மா.பெ.பொ.க. வரவேற்று மகிழ்கிறது.

அதைப் போலவே நவம்பர் முதல் நாளை விடுமுறை நாளாக அறிவிக்கவும், தமிழ்நாட்டுக்கென ஒரு பொதுக்கொடியை அறிவிக்கவும் கோரியுள்ளதை மா.பெ.பொ.க.-வும் வழிமொழிகிறது.

**தமிழ்நாடு அரசு உடனடியாகக் கருநாடக அரசைப்போல் ஒரு குழு அமைத்து ஆராய்ந்து தமிழ்நாட்டுக் கொடியை அறிவித்திடவும்; நவம்பர் முதல் நாளை விடுமுறை நாளாக அறிவித்து அரசு உள்ளிட்ட எல்லா நிறுவனங்களிலும் தமிழ்நாடு விழா கொண்டாடுவதைக் கட்டாயமாக்கிடவேண்டுமெனவும்; தமிழ்நாடு நாளில் தமிழ், தமிழர், தமிழ்நாடு உரிமைகளுக்காக உழைத்திட்ட பெருமக்களை நினைவுகூர்ந்து மதிப்புச்செய்திட 'தமிழ்நாடு நாள் விருது' என ஒன்றை அறிவித்து ஆண்டுதோறும் நவம்பர் முதல்நாளில் வழங்கிடவேண்டுமெனவும் மா.பெ.பொ.க. சார்பில் தமிழ்நாட்டு அரசை வேண்டிக் கொள்கிறேன்.**

இந்தியா என்பது என்றைக்குத் தேசிய இன வழிப்பட்ட சமஉரிமை உடைய சமதர்மக் குடிஅரசுகள் ஒருங்கிணைந்த உண்மையான கூட்டரசாக மாறுகிறதோ அன்றைக்கே உண்மையான சுதந்தரநாள் - அந்த நாள்தான் இந்திய ஒன்றியத்திலுள்ள ஒவ்வொரு மொழித் தேசமக்களின் விடுதலைநாள்.

அதை நோக்கிய பயணத்தின் தொடக்கமாக தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் இனி நவம்பர் முதல் நாளில் உயர்த்திப்பிடிப்போம் தமிழ்நாட்டுக் கொடியை!

**1.11.2020** **- வே. ஆனைமுத்து**

# பதூசு அம்மையாருக்கு வீரவணக்கம்!

தேசிய இனங்களின் சிறைக்கொட்டகையாக இருக்கும் இந்திய ஒன்றியத்தில், அதன் அரசமைப்புச் சட்டத்தின்படி நடத்தப்படும் தேர்தலில் பங்கேற்று, மாநிலங்களில் அதிக இடங்களைக் கைப்பற்றி மாநிலங்களின் சட்டமன்றத்திற்குச் செல்வதன் மூலமும், மாநிலங்களில் ஆட்சிகளை அமைப்பதன் மூலமும் இந்தியத்துக்கு இணக்கமான சிறந்த கங்காணியாக இருக்கமுடியுமே தவிர, இந்தியாவிடமிருந்து மொழித்தேசங்களின் இறையாண்மையையோ, அதைப்போலவே தமிழ்நாட்டில் தமிழர்களின் இறையாண்மையையோ மீட்டுவிட முடியாது என்கிற புரிதலோடும், சாதியத்தை வேரறுக்காமல் இந்தியாவில் எந்தவிதப் புரட்சியையும் ஏற்படுத்திவிட முடியாது என்கிற தெளிவோடும் தமிழ்நாடு விடுதலைப் படையைக் கட்டிப் போராடி, ஆட்சியாளர்களின் வஞ்சகத்தால் 1987இல் கொல்லப்பட்ட தோழர் தமிழரசன் அவர்களின் அன்புத் தாயாரும், மதகளிர் மாணிக்கம் அய்யா துரைசாமி அவர்களின் துணைவியாரும், நெடுங்காலமாகத் தாயாரைப் போற்றிப் பேணிப் பாதுகாத்த தோழர் அன்பழகி அவர்களின் அன்புத் தாயாருமாகிய **பதூசு அம்மையார்** அவர்கள் தம் 97ஆம் அகவையில் 31.10.2020 காரி (சனி)க் கிழமை சிறுவளத்தூர் தம் மகள் இல்லத்தில் மாலை 4.30 மணியளவில் மறைவுற்றார்.

அன்று இரவே அம்மையாரின் உடல் தம் சொந்த ஊரான மதகளிர் மாணிக்கம் கொண்டு செல்லப்பட்டது. 1.11.2020 ஞாயிறு மாலையில், பெண்ணாடம் தோழர் க. சோழன் நம்பியார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இரங்கல் நிகழ்வில் தமிழர் நீதிக் கட்சித் தலைவர் தோழர் சுப.இளவரசன், அரியலூர் மாவட்டத் தி.மு.க. செயலாளர் தோழர் எஸ்.எஸ். சிவசங்கர், பா.ம.க. தோழர் க.வைத்திலிங்கம், பா.ம.க. அரியலூர் மாவட்டச் செயலாளர்



உலக. சாமிதுரை, தோழர் பொன்பரப்பி இராசேந்திரன், தமிழ்மண் இயக்கம் பேரா. த. செயராமன், தமிழ்ப் பேரரசுக் கட்சியின் தலைவர் தோழர் வ.கௌதமன், வழக்கறிஞர் கோபாலகிருட்டிணன், வழக்கறிஞர் ந.சின்னதுரை, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், வீரப்பன் மனைவி முத்துலட்சுமி, பாசிகுளம் திருநானம், மா.பெ.பொ. கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் தோழர் தி.துரை சித்தார்த்தன், பொன்குடிக்காடு தலைமை ஆசிரியர் பொய்யா. மன்னர் மன்னன் பா.வெ.பரமசிவம் மற்றும் பல்வேறு அறிஞர் பெருமக்களும், மார்க்சிய - லெனினிய -அம்பேத்கரிய-பெரியாரிய-தமிழியச் சிந்தனையாளர்களும் கனத்த இதயத்துடன் கலந்து கொண்டனர். அம்மையாரின் உடல், மாலை 5 மணியளவில் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது.

தமிழ்நாட்டுக்குப் போர்மறவனைத் தந்த பதூசு அம்மையாருக்கு மா.பெ.பொ.க.-வின் சார்பில் வீர வணக்கம் செலுத்துகிறோம்.

# தமிழக அரசே ! தமிழக அரசே !

# தமிழ்நாடு நாள் விழா கொண்டாடியதற்காகச் சிறையிலடைக்கப்பட்டுள்ள தோழர் பொழிலன் உள்ளிட்ட எல்லாத் தோழர்களையும் உடனடியாக விடுதலை செய் !

தமிழ்நாடு மொழிவழி மாநிலமாக அமைந்த நவம்பர் முதல் நாளைத் தமிழ்நாடு நாள் என அறிவித்து அரசுவிழா எடுக்கவேண்டும் எனும் தமிழ்நாட்டு மக்களின் நெடுநாள் கோரிக்கையை ஏற்று 25.10.2019 அன்று அரசாணை வெளியிட்டு, 01.11.2019-இல் தமிழ்நாடு அரசே விழா எடுத்து, தமிழ்நாடு நாளைச் சிறப்பாகக் கொண்டாடியதைப் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு வரவேற்றுப் பாராட்டியது.

ஏனெனில், மொழிவழி மாநிலங்கள் தங்களின் உரிமைகள் பறிக்கப்படுவதைச் சுட்டிக்காட்டிடவும், மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் பெற்றிடவும், தங்கள் மாநிலத்தின் சமூகம், பொருளாதாரம், பண்பாடு, கல்வி போன்றவற்றைத் தாங்களே முடிவு செய்து கொள்ளுகிற தன்னாட்சி அதிகாரத்திற்கு தடையாக எதிரான நடப்புகளை மக்கள் கவனத்திற்குக் கொண்டுவந்து மாநில அரசுகளின் கோரிக்கைகளுக்கு வலு சேர்த்திடவும் இதுபோன்ற விழாக்கள் மிகுந்த பயனளிக்கும்.

தமிழ்நாட்டில் உள்ள அமைப்புகளும் கட்சிகளும் ஆண்டுதோறும் தமிழ்நாடு நாளைத் தனித் தனியே கொண்டாடிவந்த நிலையில், இந்த ஆண்டு பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பின் சார்பில் தமிழ்நாடு அளாவிய பெருவிழாவாக எடுக்க முடிவெடுத்து, அந்தத் தகவலை அரசுக்கும் முறையாகத் தெரிவித்ததோடு, நவம்பர் முதல்நாளைப் பொது விடுமுறை நாளாக அறிவிக்கவும், தமிழ்நாட்டுக்கென ஒரு பொதுக்கொடியை அறிவிக்கவும் கோரிக்கை வைத்திருந்தது.

மாநிலங்கள் தனிக் கொடி வைத்துக்கொள்வதை இந்திய அரசியலமைப்புச் சட்டம் எந்த இடத்திலும் மறுக்கவில்லை. ஏற்கெனவே பல மாநிலங்கள் தனிக்கொடி வைத்துள்ளன. எனவே, தமிழ்நாடு அரசே ஒரு கொடியை அறிவிக்கிற வரை தமிழ்நாட்டின் வரைபடத்தைக் கொண்ட ஒரு கொடியினையும் பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பு முன்மொழிந்ததொடு மட்டுமன்றி, தமிழ்நாடு அரசு இதே கொடியையோ அல்லது எல்லோரும் ஏற்கத் தகுந்த வேறொரு கொடியையோ அதிகாரப்பூர்வ மாக அறிவிப்பின் அதையும் வரவேற்றுப் பின்பற்றுவோம் என்றும் உறுதியளித்திருந்தது.

தமிழ்நாட்டு முதலமைச்சரும் 31.10.2020 அன்று தமிழ்நாடு நாள் வாழ்த்துச்செய்தி வெளியிட்டு நவம்பர் முதல் நாளை எல்லோரும் கொண்டாடச் சொல்லி அறிவித்திருந்தார்.

தமிழ்நாடு முழுவதும் விரிவான ஏற்பாடுகளைச் செய்திருந்த நிலையில், கொடியேற்றுவது தடை செய்யப்பட்டுள்ளதாகத் திடுமெனக்கூறி, 31.10.2020 மாலையிலிருந்தே தமிழ்நாடு முழுவதும் விழா ஒருங்கிணைப்பாளர்களுக்குக் கடுமையான நெருக்கடிகளைக் கொடுத்து, அடக்குமுறைகளை ஏவிய தமிழ்நாடு காவல் துறையைப் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது.

மேலும், காவல்துறைக்குக் கட்டுப்பட்டுப் பொதுவெளியில் கொடியை ஏற்றாத நிலையிலும் சென்னை, மேடவாக்கம் பாவலரேறு தமிழ்க்களத்தில் அத்துமீறிப் புகுந்து பதாகைகைகளையும் கொடிகளையும் பறித்துச்சென்றதுடன், விழா ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்த ஒருங்கிணைப்பாளர் தோழர் பொழிலன், தோழர் தம்பி மண்டேலா; அதேபோல் இனிப்புகளை மட்டுமே வழங்கிய வட சென்னை தோழர்கள் 13 பேர் மற்றும் பட்டாபிராம் பகுதித் தோழர்கள் 6 பேர் என 21 பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்புத் தோழர்களையும், மற்றும் பல்வேறு அமைப்புகளின் தோழர்களையும் தமிழ்நாடு நாள் விழா கொண்டாடியதற்காகத் தளைப்படுத்தி, கொடும் சட்டப் பிரிவுகளான 124-A, 143, 188, 353, 506 (1) உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின்கீழ் வழக்குப் பதிந்து சிறையில் அடைத்துள்ள தமிழ்நாட்டு அரசையும், காவல் துறையினரையும் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது.

**தமிழக அரசே ! தமிழக அரசே !**

**தமிழர்களுக்கும் தமிழ்நாட்டுக்கும் எதிரான போக்கைக் கைவிடு !**


**தோழர் பொழிலன் உள்ளிட்ட எல்லாத் தோழர்களையும் எவ்வித நிபந்தனைகளுமின்றி உடனடியாக விடுதலை செய் !**

**பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு**
**தமிழ்நாடு**
**8608068002 / 9884072010 / 9952626353**

# நம்மைப் பிளக்கும் சாதி எனும் பொய்

- குட்டுவன்

சாதியைப் பற்றிப் பல நூல்கள் வெளிவந்த வண்ணமே உள்ளன. அவ்வரிசையில் அமெரிக்காவின் பிரன்ஸ்டன், பாஸ்டன், ஐரோப்பிய, ஆசியப் பல்கலைக் கழகங்களில் உரையாற்றிய 'புலிட்சர்' விருதைப் பெற்ற இசபெல் வில்கர்சன் எழுதிய நூலே இக் கட்டுரையின் தலைப்பாக ('Caste – The Lies that Divide Us' by Isabel Wilkerson, 2020) அமைகிறது. ஒரு பெண்மணி சமூக இயல் துறையில் சிறந்த ஆய்வாளராக இருக்கமுடியும் என்பதை இந்நூல் எதிரொலிக்கிறது.




இந்தியா விடுதலைப் பெற்ற பிறகு பல அறிஞர்கள் இந்தியச் சமூகத் தன்மையை எடுத்துக்காட்டி, ஆய்வுகளை மேற்கொண்டு, நூல்களாகப் படைத்துள்ளனர். சுவீடன் நாட்டைச் சேர்ந்த, 1973இல் பொருளாதாரத்திற்கான நோபல் பரிசினைப் பெற்ற குன்னர் மிர்தல் எழுதிய "ஆசிய நாடகம்" என்ற நூல் பொருளாதாரத்தைப் பற்றி முதன்மையான கருத்துகளை முன்மொழிந்தாலும், இந்தியச் சமூகக் கூறுகளை ஆழ்ந்து சிந்தித்து எழுதப்பட்ட நூலாகும். இன்றளவிலும் சங் பரிவாரின் வழித் தோன்றல்களாக மறைமுகமாக இருந்து தங்களை அறிஞர்கள் என அடையாளம் காட்டிக்கொள்ளும் பல ஆய்வாளர்கள் குன்னர் மிர்தலைத் தாக்குவதையே தொழிலாகக் கொண்டுள்ளனர். குன்னர் மிர்தல் அமெரிக்காவினுடைய கறுப்பர் இனப் பிரச்சனைகளையும் ஆய்ந்து பல கருத்துகளை வழங்கியவர். குன்னர் மிர்தலின் துணைவியார் ஆல்வா மிர்தல் 1983இல் அமைதிக்கான நோபல் பரிசினைப் பெற்றவர். ஆல்வா மிர்தல், உலக நாடுகள் மானுடத்தை அழிக்கும் வலிமை மிக்க ஆயுதங்கள் உற்பத்தியை நிறுத்த வேண்டும் என வலியுறுத்தியவர். குன்னர் மிர்தல் ஆல்வா மிர்தல் ஆகியோரின் முயற்சியால்தான் சுவீடனில் இருந்து வரும் 'ஸ்டாக்ஹோம் அமைதி ஆய்வு மையம்' ஆண்டுதோறும் உலக நாடுகளின் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுத உற்பத்திச் செலவுகள் - ஆயுதங்களைப் பல நாடுகளுக்கு ஏற்றுமதி இறக்குமதி செய்யும் அளவுகளை அறிக்கையாக வெளியிட்டு வருகின்றது.

இவர்களின் மகன் ஜேன் மிர்தல் தற்போது 93 வயதை எட்டியும் ஆதிக்க நாடுகளின் முகமூடிகளைக் கிழித்து, முதலாளித்துவத்திற்கு எதிராகக் கட்டுரைகளையும் நூல்களையும் எழுதி வருகிறார். 2010ஆம் ஆண்டு இந்தியாவின் தண்டகருண்யா காட்டிற்குச் சென்று இந்திய கம்யுனிஸ்ட் கட்சியின் (மாவோ) உறைவிடங்களில் சில வாரங்கள் தங்கி "இந்தியாவின் மீது சிகப்பு நட்சத்திரம்" என்ற நூலை எழுதினார்.

இதற்கு முன்பு 1970களில் தந்தை பெரியாரைப் பற்றிப் பல ஆய்வாளர்கள் ஆய்வுக் கட்டுரைகளையும் நூல்களையும் வெளியிட்டுள்ளனர். நெருக்கடி நிலை காலத்தில் ஜமதக்னி சாந்தி, "பெரியாரின் சமூகப் பொருளாதார சிந்தனைகள்" என்ற தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரையை வழங்கினார். 1977ஆம் ஆண்டு இதற்காக அவருக்கு எம்.லிட். பட்டம் சென்னைப் பல்லைக்கழகத்தால் வழங்கப்பட்டது. ஜமதக்னி சாந்தியின் ஆய்வு நெறியாளர், ஒன்றிணைந்த சென்னை மாகாணத்தில் 1930களில் பொருளாதாரத்தில் முதலாவது முனைவர் ஆய்வுப்பட்டம் பெற்ற மறைந்த பேராசிரியர் சாரதா ராஜி ஆவார். "19ஆம் நூற்றாண்டில் நிலவிய சமூகப் பொருளாதார நிலைமைகள்" என்ற நூலும் இவரது ஆய்வின் அடிப்படையில் வெளி வந்துள்ளது.

1969ஆம் ஆண்டு யுஜின் இர்ஷிக், "அரசியல் சமுதாய மோதல்கள்" என்ற தலைப்பில் சிறந்ததொரு

ஆய்வினை மேற்கொண்டு நூல்களை வெளியிட்டார். இந்நூலில் நிர்வாக, நீதித் துறைகளில் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பார்ப்பனர்களின் ஆதிக்கத்தைத் தரவுகளோடு வெளியிட்டார். மீண்டும் 1970ஆம் ஆண்டு ‘‘தமிழர் மீட்சி’’ என்ற நூலை வெளியிட்டார். இக் கட்டுரையாசிரியர் இந்த ஆய்வாளரைச் சென்னைப் பல்லைக் கழகத்தின் வரலாற்றுத் துறைக்கு வந்தபோது சந்தித்து உரையாடியுள்ளார். அவர் நன்றாகத் தமிழ்ப் பேசுவார்; தமிழிலும் எழுதுவார். இவர்களுக்கெல்லாம் முன்னோடியாகச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத் துறையைன் முதல் பேராசிரியர் கில்பர்ட் சிலேட்டர் முறைப்படித் தமிழைக் கற்றவர். இவர் எழுதிய ‘‘இந்தியப் பண்பாட்டில் திராவிடக் கூறுகள்’’ மிகவும் புகழ்ப் பெற்ற நூலாகும். ஆங்கிலத்தில் வெளிவந்த இந்நூலை பன்மொழிப் புலவர் க.அப்பாதுரையார் தமிழில் மொழிப் பெயர்த்துள்ளார்.

1970ஆம் ஆண்டு அனிதா தயல், ‘‘தென்னிந்தியாவில் தந்தை பெரியார் ஈ.வெ.ரா. ஆளுமையின் செல்வாக்கு’’ என்ற நூலை வெளியிட்டார்.

இராபர்ட் ஹாட்கிரேவ், 1969இல் ‘‘தமிழ்நாட்டின் நாடார்கள்’’, ‘‘திராவிட இயக்கமும் நாடார்களும்’’ என்ற இரு நூல்களை எழுதியுள்ளார். இவர்களெல்லாம் வெளிநாட்டிலிருந்து வந்து ஆய்வுகளை மேற்கொண்டவர்கள். திராவிட இயக்கத்தைப் பற்றி ஒரு தவறான கருத்து இருப்பதை இக் கட்டுரையாசிரியர் பேராசிரியர் ஹாட்கிரேவின் நண்பரிடம் எடுத்துக் கூறியுள்ளார். சான்றாக, ‘‘இராஜா சர். முத்தையா செட்டியாரின் செல்வாக்கால்தான் கலைஞர், அறிஞர் அண்ணாவின் மறைவிற்குப் பிறகு முதல்வரானார்’’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அறிஞர் அண்ணா முதல்வரானவுடன், இராஜா சர். முத்தையா செட்டியார் சென்னையில் உள்ள தனது மாளிகையில் மிகப் பிரம்மாண்டமான ஒரு விருந்தை ஏற்பாடு செய்தார். எல்லா அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டன. இதை அறிஞர் அண்ணா விரும்பவில்லை. எல்லா அமைச்சர்களும் மாலை 6 மணியளிவில் இராஜா அண்ணாமலைபுரம் மாளிகைக்குச் செல்ல முற்பட்டபோது, அறிஞர் அண்ணா காஞ்சிபுரம் சென்றுவிட்டார் என்ற செய்தி எட்டியது. உடனடியாக விருந்துக்குச் சென்ற சில அமைச்சர்களும் எல்லா அதிகாரிகளும் இந்த விருந்தில் கலந்து கொள்ளாமல் திரும்பிவிட்டனர். இதைக் கலைஞர் அவர்கள் இக் கட்டுரையாசிரியரிடம் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறாகச் சில தரவுகள் தவறான முறையில் உயர்ந்த ஆய்வு நூல்களிலும் இடம்பெற்றுள்ளன.

இதனடிப்படையில்தான் இசபெல் வில்கர்சன் எழுதிய ‘‘நம்மைப் பிளக்கும் சாதி எனும் பொய்’’ நூலில் தந்தை பெரியாரைப் பற்றி ஒரு வரிகூட இடம்பெறவில்லை. இந் நூலாசிரியர் இராமச்சந்திர குகா எழுதிய ‘‘நவீன இந்தியாவின் சிற்பிகள்’’ (Makers of Modern India) நூலில், தந்தை பெரியாரைப் பற்றி ஒரு தனிக் கட்டுரையே எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. பன்னாட்டு அளவில் விற்பனை செய்யப்பட்ட குகாவின் இந்த நூலை இந்த அம்மையார் ஏன் காணத் தவறினார் எனத் தெரியவில்லை.

நோபல் பரிசுப் பெற்ற அமர்தியா சென்னும், ஜீன் ட்ரெஸ்சும் 2013இல் வெளியிட்ட ‘‘ஒரு நிலையற்ற வெற்றி - இந்தியாவும் அதனுடைய முரண்பாடுகளும்’’ (An Uncertain Glory : India and Its Contradictions) எனும் நூலில், குறைந்த காலக்கட்டத்தில் விரைந்த வளர்ச்சியைப் பெற்று கொடுமையான வறுமையும், ஏற்றத் தாழ்வும் இல்லாமல் தமிழ்நாடு உள்ளது எனக் குறித்துள்ளனர். அனைத்துச் சாதிப் பிரிவினரும் பள்ளிக்குச் செல்லும் வண்ணம் சத்துணவுத் திட்டம் தமிழ்நாட்டில் நிறைவேற்றப்படுகிறது. உறுதியான சமூக அடித்தளம் இதற்குக் காரணமாக அமைகிறது. சமூக உணர்வைத் தூண்டும், பெரியாரின் சமூகச் சீர்திருத்த இயக்கம் ஒரு காரணமாக அமைந்தது (the social reform movement initiated by Periyar is responsible for socially engineered economic growth) என்று இந்நூலில் இந்த இரு ஆய்வாளர்களும் குறிப்பிட்டுள்ளனர். புகழ்ப் பெற்ற இந்நூலையும் இந்த அம்மையார் காணாதது பெரும் அதிர்ச்சியாக உள்ளது. இந்த நூலில் அமெரிக்காவின் கறுப்பின மக்கள் பிரச்சனை பற்றியும், இந்தியாவில் கடைப்பிடிக்கப்படுகின்ற தீண்டாமை பற்றியும் பல கருத்துகள் உள்ளன. பெங்களுர் நகரில் இருந்து தலித் மக்களுக்காக எழுதி வரும் வீ.டி. ராஜசேகர் கருத்து மட்டும் ஒரே ஒரு இடத்தில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது.

அறிஞர் அம்பேத்கரின் கருத்துகள் இந்நூலில் சில இடங்களில் மேற்கோள்களாகக் காட்டப்பட்டுள்ளன. சான்றாக, பக்கம் 184இல், சாதியம் உயர்ந்த வகுப்பினரின் நலனிற்காக இருப்பதால் எப்படியாவது அதைப் பார்ப்பனர்கள் பாதுகாக்க விரும்புகின்றனர் என்ற கருத்தைப் பதிவு செய்து, அறிஞர் அம்பேத்கரின் ‘‘சாதி என்பது பார்ப்பனர்களுக்குக் கிடைத்த விலை மதிக்க முடியாத சொத்து; அதை அவர்கள் எப்படியாவது காப்பதற்கு எந்த விலையும் அளிப்பார்கள்’’ என்ற கருத்து மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது.

‘‘உயர் சாதிய அதிகாரத்தை ஏற்காமல், சாதிய அமைப்பில் ஒருவர் வாழமுடியாது; காற்றைச் சுவாசிக்க முடியாது’’ என்று இந்த நூலாசிரியர் குறிப்பிடுகிறார். ‘‘தமிழ்நாட்டில் வேலூர் மாவட்டத்தில், இறந்த ஒரு தலித்

இனத்தவரை பொதுச் சாலை வழியே எடுத்துச் செல்ல முடியாமல், சாலையின் பின் வழியில்தான் எடுத்துச் சென்று உடலை எரிக்கமுடியும்'' என்ற குறிப்பு இந்நூலில் இடம் பெற்றுள்ளது.

சாதியத்தை நிலை நிறுத்துகிற தூண்கள் எவை என்பன பற்றிய கருத்து இந்நூலில் முன்வைக்கப் பட்டுள்ளது. குன்னர் மிர்தலின் கருத்தான ''சாதியம் உயர்சாதியினரின் நலனிற்காகவும் மந்தநிலையை உருவாக்குவதற்காகவும் தூக்கிப் பிடிக்கப்படுகிறது'' என்ற மேற்கோளை இந்நூலில் ஆசிரியர் இசபெல் குறிப்பிட் டுள்ளார்.

கொரானா நோய்த் தொற்று வந்த பிறகு வரலாறு காணாத அளவிற்கு மானுடத்தைப் பாதிப்புக்குள்ளாகி யுள்ளது என்றும் மானுடம் இயற்கை விதிகளுக்கு எதிராகச் செல்வதைச் சிந்திக்க வைக்கிறது என்றும் ஒரு கருத்தைக் கூறுகிறார். உலகில் அதிக எண்ணிக்கையில் அமெரிக்கர்கள் இறந்தார்கள். இது இனவேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு மரணம் நடந்துள்ளதாகவும் குறிப்பிடுகிறார். மானுடத்தை அழித்துவிட்டு ஒரு நாகரிகத்தைக் கட்டமைக்க முடியாது. இதை உணரும் காலம் வந்து விட்டது என்றும் இந்நூலில் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

நூலின் 13ஆம் பகுதியில் புனித புணூலை அகற்றி விடுவது என்ற தலைப்பில், பார்ப்பனர்கள் காலம் காலமாக தாங்கள் உயர்ந்த சாதியினர் என்பதற்காகப் போடப்பட்ட ஒரு கருவிதான் புணூல் என்பதை ஆசிரியர் விளக்கியுள்ளார். இவ்வாறு சாதியத்தின் பல கூறுகளை ஆய்ந்து, இனவேற்றுமையும் சாதி வேற்றுமையும் மானுடத்தைப் பிளக்கின்றன என்ற கருத்தை இந்நூலில் ஆசிரியர் இசபெல் வில்கர்சன் விளக்கியுள்ளார்.

இந்நூலில் இட ஒதுக்கீடு கொள்கையோ, 1990ஆம் ஆண்டுகளுக்குப் பிறகு மண்டல் குழு அறிக்கையை வி.பி.சிங் நடைமுறைப்படுத்தியதைப் பற்றியோ குறிப்பிடவில்லை. இன்றைய சனாதன பாஜக மோடி அரசு, உயர் சாதிகளுக்கு 10 விழுக்காடு இடஒதுக்கீடு அளித்ததையும், பிற்படுத்தப்பட்டோர் தாழ்த்தப்பட்டோர் ஆகியோர்க்கு இட ஒதுக்கீடு கொள்கையை ஒன்றிய அரசு ஏற்றப் பிறகும், கடந்த 20 ஆண்டுகளாக இந்தியத் தூதர்களாகவும் உச்சநீதிமன்ற நீதிபதிகளாகவும் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட பழங்குடியினர் ஒரு விழுக்காடுகூட இடம்பெறவில்லை என்பது பற்றி இந் நூலில் எந்தக் கருத்தையும் காணமுடியவில்லை. ஆரியர்களின் இறந்த மொழியான சமஸ்கிருதத் திணிப்பு, இந்தித் திணிப்பு, சனாதனத்தின் பார்ப்பனியத்தை உயர்த்திப் பிடிக்கும் மோடி அரசின் போக்கு ஆகியன இந்நூலில் இடம்பெறவில்லை.

இந்நூலில் பல குறைகள், தர்க்க ரீதியான தவறுகள் பல இருப்பினும், ஒரு பெண்மணி என்கிற முறையில் ''சாதி என்கிற பொய் நம்மைப் பிளக்கிறது'' என்று பல வாதங்களை இந்நூலாசிரியர் முன் வைப்பது பாராட்டுக் குரியது. குறிப்பாக, திராவிட இயக்கம், இடஒதுக்கீடு வழியாக சமூகத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பில், கல்வியில் முன்னுரிமை அளித்ததை யும், தந்தை பெரியார் சாதிய ஒழிப்பிற்காகச் சனா தனத்தை வேரோடு வெட்டி வீழ்த்திய பணிகளையும், அதைத் தொடர்ந்து திராவிட இயக்கத்தின் ஆட்சி கடந்த 53 ஆண்டுகளாகத் தமிழகத்தில் நடைபெற்று வரு வதையும் இந்நூல் குறிப்பிடவில்லை. அண்மைக் காலத்தில் பல இந்திய ஆய்வாளர்கள், தமிழ்நாட்டில் பின்பற்றப்பட்டு வருகின்ற இடஒதுக்கீடு முறையையும், இதன் காரணமாக அனைத்துச் சாதியினரும் கல்வி வேலை வாய்ப்புகளில் இடம் பெற்று வருவதையும் ஆய்ந்து பல கருத்துகளை முன்வைத்துள்ளனர். குறிப்பாக, பொருளாதாரத்தின் வளர்ச்சி, சமுதாயத்தின் அடித்தள மக்களின் வாழ்வில் முற்போக்கான மாற்றங் களை உருவாக்கினால்தான் அது உண்மையான ஒன் றிணைந்த வளர்ச்சி என ஐக்கிய நாடுகள் மன்றத்தின் மானுட மேம்பாட்டு அறிக்கைகள் குறிப்பிட்டு வரு கின்றன. இதுவரை 27 அறிக்கைகள் 1990லிருந்து 2020 வரை வெளியிடப்பட்டுள்ளன. 2020ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மன்ற மானுட மேம்பாட்டு அறிக்கை, கொரானா நோய்த்தொற்று சமுதாயத்தின் அடித்தட்டு மக்களை எவ்வகைளில் பாதித்து வருகிறது என்பதையும் குறிப்பிட்டுள்ளது. மானுட மேம்பாட்டுக் குறியீடுகளின்படி தமிழ்நாடு, இந்திய மாநிலங்களில் முதல் மூன்று இடங் களில் கடந்த 30 ஆண்டுகளாக இடம்பெற்று வருகிறது என்பதையும், அதற்குத் தமிழ்நாட்டில் நடந்த சமுதாயப் புரட்சி, சாதி ஒழிப்புத் திட்டங்கள் ஆகியன காரணங்களாக உள்ளன என்பதை இந்திய அரசு வெளியிட்ட மானுட மேம்பாட்டு அறிக்கை 2001இல் தெளிவாகச் சுட்டியுள்ளது. அவ்வறிக்கையில், தந்தை பெரியார் பின்பற்றிய பெண் ணுரிமை விடுதலை, சமூகச் சீர்த்திருத்தம் ஆகிய காரணங்கள்தான் அரசியல் எந்தத் திசையில் செல்ல வேண்டும் என்கிற கருத்தியலை உறுதிப்படுத்தியிருக் கிறது என்றும் கூறப்பட்டுள்ளது. எனவே, இத்தகைய கருத்துகளை எல்லாம் இந்நூலாசிரியர் ஏன் காணத் தவறினார் என்பது ஒரு வியப்பிற்குரிய வினாவாக உள்ளது.

இருப்பினும், ''சாதியில்லாத உலகம் எல்லோ ருக்கும் விடுதலை அளிக்கிறது'' (A World without caste would set everyone free) என்ற இறுதிக் கருத்தோடு இந் நூலாசிரியர் இந்நூலை முடிக்கிறார்.

# எனக்குச் சமற்கிருதம் தெரியும் !

**- இராமியா**

நாற்பது ஆண்டுகளுக்கு முன் வேலூரில் உள்ள கிறித்தவ ஆற்றுப்படுத்தல் மையத்தில் (Christian Counselling Centre) சமூக வளர்ச்சியில் மனித வளர்ச்சியில் (Human Development in Community Development) என்ற ஒரு மாதப் பயிற்சி வகுப்பில் பங்குபெறும் வாய்ப்புக் கிடைத்தது. அப்பொழுது மார்க்சியம், பெரியாரியம் பற்றிய முறையான அறிமுகமே எனக்கு இல்லாமலிருந்தது. முழுக்க முழுக்கக் காவியாக இல்லாவிட்டாலும் அக்கருத்தியலின் செல்வாக்கில்தான் இருந்தேன்.

அப் பயிற்சிவகுப்பில் தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, மராட்டிய மாநிலங்களில் இருந்து சுமார் 40 பேர் பயிற்சிபெற வந்திருந்தார்கள். வகுப்பறையில் பாடத்தைப்பற்றி மட்டுமே பேச முடியும். ஆனால், உணவுக் கூடத்தில் பொதுச் செய்திகளைப்பற்றிப் பேசுவோம். மொழியாக ஆங்கிலம் பயன்பட்டுக் கொண்டிருந்தது.

அப்படிப் பேசும்பொழுது 'கருவுற்ற பெண்' என்பதற்கு மலையாளத்தில் 'கர்ப்பஸ்திரீ' என்று சொல்வார்கள் என்று கேரளாவிலிருந்து வந்திருந்த பாதிரியார் ஒருவர் கூறினார். உடனே கருநாடகாவில் இருந்து வந்திருந்த பார்ப்பனத்தி ஒருவர் அது மலையாளச் சொல் அல்ல என்றும், சமற்கிருதச் சொல் என்றும் கூறினார். அதற்கு விடையளித்த அந்தப் பாதிரியார் மலையாளத்தில் சமற்கிருதச் சொற்கள் மிகுதியாகக் கலந்துள்ளன என்றும், ஆகவே அம்மையார் சொல்வது சரியாக இருக்கலாம் என்றும் கூறினார்.

ஆனால், அந்த அம்மையார் விடுவதாக இல்லை. தனக்குச் சமற்கிருதம் தெரியுமென்றும், மலையாளம் பேசுவதையும் கேட்டிருப்பதாகவும், ஆனால் அதில் சமற்கிருதம் மிகுதியாக இல்லை என்றும் கூறினார். அந்தப் பாதிரியார், தான் சமற்கிருதம் படிக்கவில்லை என்றும், ஆகவே அந்த அம்மையாருக்கு விடையளிக்க முடியவில்லை என்றும் கூறி விவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப் பார்த்தார். ஆனால், அந்தப் பார்ப்பனத்தி விடாமல், தனக்குச் சமற்கிருதம் தெரியுமென்று அந்த இரவு உணவுநேர வேளையில் சுமார் பத்துப் பதினைந்து முறை கூறிவிட்டார்.

அடுத்த நாள் காலையில் நான் அந்தப் பார்ப்பனத்தியிடம் அவர் சமற்கிருதத்தை எதுவரையில் படித்திருக்கிறார் எனக் கேட்டேன். அவர், தான் சமற்கிருதம் படித்திருப்பதாகக் கூறினார். நான் மீண்டும் அதே கேள்வியைச் கேட்க மீண்டும் மீண்டும் அதே விடையையே அவர் அளித்தார். அதற்கு நான், "நான் சமற்கிருதத்தை 'விசட்சண' வரை படித்திருக்கிறேன். நீங்கள் எதுவரை படித்திருக்கிறீர்கள்?" என்று கேட்டேன். உடனே அவர் அதிர்ச்சி அடைந்துவிட்டார். முகமெல்லாம் மாறிவிட்டது. சிறிதுநேரம் கழித்து, சுதாரித்துக் கொண்டு, "நீங்கள் பார்ப்பனர் இல்லையா?" என்று கேட்டார். நான் "இல்லை" என்று கூறியவுடன் அவர் முகம் மேலும் சுருங்கிவிட்டது. (பார்ப்பனர்கள் மட்டுமே சமற்கிருதம் படிக்கமுடியும் என்பதும், அப்படிப் படித்தவர்களும், சமற்கிரும் படிக்காதவர்கள்; படித்திருப்பதாகப் பொய் செல்லுவதைக் கண்டுகொள்ளக்கூடாது என்பதும் அவாளிடைய உள்ள ஒப்பந்தம் போல் இருக்கிறது.)

என் வினாவிற்கு விடையளிக்கும் விதமாக, வீட்டில் சுலோகம் சொல்லி வணங்குவதாகவும், அந்த வகையில் தனக்குச் சமற்கிருதம் தெரியும் என்றும் கூறினார்.

நான் விடாமல் "அப்படி என்றால் சுலோகங்களின் பொருள் புரிந்து சொல்வீர்களா?" என்று கேட்டதை இடைமறித்து, "சுலோகங்களின் பொருளைப் புரிந்து கொள்ள முயலக்கூடாது" என்று கூறிவிட்டார். அதன் பின் தனக்குச் சமற்கிருதம் தெரியும் என்பதை வெளியில் காட்டிக் கொள்ளவில்லை.

மார்க்சு, பெரியார், அம்பேத்கரின் தத்துவங்களைப் புரிந்துகொண்ட நிலையில் இன்று அந் நிகழ்வை நினைத்துப் பார்க்கிறேன். 1920ஆம் ஆண்டுக்கு முன்னாள் மருத்துவக் கல்லூரியில் சேருவதற்குச் சமற்கிருதம் தெரிந்திருக்க வேண்டும் என்ற விதியின் பொருள் உண்மையில் சமற்கிருதம் தெரிந்திருக்க வேண்டும் என்பதற்காக அல்ல; மருத்தும் படிக்கப் பார்ப்பனராக இருக்கவேண்டும் என்பதற்காகத்தான். பார்ப்பனராக இருந்தால் சமற்கிருதம் தெரியும் என்று அவாள் சான்று அளித்துவிடுவார்கள். வேறு யாரும் அதைச் சரிபார்க்க முடியாதல்லவா?

பிறகு, பனகல் அரசரின் ஆட்சியில் இவ் விதி நீக்கப்பட்ட பின்னர், ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களும் மருத்துவக் கல்வியைப் பெறமுடிந்தது. இந்தியர்களில் - இந்துக்களில் பார்ப்பனர்கள் மட்டுமே மருத்துவக் கல்வி பெற்ற காலத்தில் தலைசிறந்த மருத்துவர்கள் யாரும் தோன்றாமல் போனதும், ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களும் மருத்துவக்கல்வி பெற்ற காலத்தில் பூ. பழனி

யப்பன், வடமலையான், ஏ.ஏ. ஆசீர்வாதம், கே.என். வாசுதேவன் போன்ற மருத்துவ மேதைகள் நமக்குக் கிடைத்ததும் ஏதோ தற்செயலானது அல்ல.

அனைத்து நிலை அறிவும் திறனும் கொண்ட மக்கள், அனைத்து வகுப்பு மக்களிலும் உள்ளனர். பார்ப்பனர்கள் / உயர்சாதிக் கும்பலினரை மட்டுமே தேர்ந்தெடுத்த நிலையில், அறிவும் திறனும் குறைந் தவர்களையும் தேர்ந்தெடுப்பது தவிர்க்க முடியாமல் போய்விடுகிறது. அனைத்து வகுப்பு மக்களையும் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு இருக்கும்போது அந்தந்த வகுப்பில் உள்ள அறிவும் திறனும் மிகுந்தவர்களைத் தேர்ந்தெடுக்க முடிகிறது. ஆகவே, அதிக எண்ணிக்கை யில் திறமைசாலிகள் கிடைக்கின்றனர். இதுவே கல்வி யிலும், தொழில்நுட்பத்திலும் மேதைகள் உருவா வதற்கு வழிவகுக்கிறது.

இதே காரணத்தினால்தான், அதாவது இடஒதுக்கீடு செயல்பட்டு, அனைத்து வகுப்பு மக்களிலும் உள்ள திறமைசாலிகளைத் தேர்ந்தெடுத்ததனால்தான் இன்று வளர்ச்சிக் குறியீட்டில் இந்தியாவிலேயே முதல் மாநில மாகத் தமிழ்நாடு திகழ்கிறது. இப்படி இடஒதுக்கிடு செயல்படுத்தப்படாமல் பார்ப்பனர்களும், உயர்சாதிக் கும்பலினரும் மட்டுமே உயர்நிலைகளில் இருக்கும், குஜராத், உத்தரப்பிரதேசம், பீகார் போன்ற வடஇந்திய மாநிலங்கள் வளர்ச்சியில் இன்றைக்கும் மிகவும் பின்தங்கியே உள்ளன.

இதை மாற்றி இந்திய ஒன்றியம் முழுமையிலும் வளர்ச்சி சீராகவும், வேகமாகவும் இருக்கவேண்டும் என்று விரும்பினால் அனைத்து வகுப்பு மக்களும், அவரவர் திறமைக்கு ஏற்பத் தங்கள் பங்கைப் பெறும் விதமாக விகிதாசச்சாரப் பங்கீடு முறையைச் செயல் படுத்த வேண்டும்.

பார்ப்பனர்கள் இதற்கு எதிராக எவ்விதச் சூழ்ச்சி களைச் செய்தாலும் அதை முறியடிக்க வேண்டும்.

## அறிவுமதி தோற்றம்

சென்னை, தாம்பரம், இரமணி நகர் 2ஆவது தெரு, உழவர் மகன் ப.வடிவேலு-வ.சுகுணா இணையரின் மூத்த மகள் பொறியாளர் வ.அருவிக்கும், இராணிப் பேட்டை சீக்கராசபுரம், திரு.பூ.கார்த்திகேயன்-கா.பத்மா இணையரின் இளையமகன் பொறியாளர் கா.பிரகாசுக் கும் 11.10.2020, ஞாயிற்றுக்கிழமை காலை 11.45 மணிக்குப் பிறந்த இரண்டாவது பெண் குழந்தைக்கு அறிவுமதி எனப் பெயர் சூட்டியதன் மகிழ்வாக சிந்த னையாளன் இதழுக்கு ரூ.500/- வழங்கி மகிழ்ந்தனர். சிந்தனையாளன் ஆசிரியர் குழுவின் சார்பில் அருவி-பிரகாசுக்கு இணையருக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

## ‘தமிழ்மறவர்’ பொன்னம்பலனார்

தனித்தமிழின் முன்னோடி வேர்கள் தம்மில்
தன்னிகரில் ஒரு வேரைக் கண்டறிந்தேன்
கனித்தமிழின் தூய்மைக்கு வாழ்நாள் முற்றும்
கடிதுழைத்த பொன்னம்பலன் பேர்தன்னைப்
பனித்தமிழின் உயிர்மையிலே வரைவோம் நெஞ்சில்.
மரத்தின் வேர் தான் முதலில் நீரெடுத்து
நுனிவரையில் நற்பசுமை எழுதினாற்போல்
நுண்ணுயிரில் தமிழுறிஞ்சிப் பலர்பால் வார்த்தார்.

தென்பொதிகை மலைநிலத்தில் தென்றல் ஆடும்,
தென் மதுரைத் தமிழ்க்கழகம் தமிழைப் பாடும்.
பொன்மதியின் அம்பலனார் நெஞ்சக் கூடும்
புகழ்ப்பொதியும் தனித்தமிழை உயிராய்ச் சூடும்.
தன்மதியும் தன்மூச்சும் தன்வகுப்பும்
தன்வீடும் தனித்தமிழின் வெற்றி நாடும்
புன்பொதியின் ஆரியத்தைத் தமிழில் சேர்த்தல்
புதுமனையில் தீப்புகுத்தும் மடமைச் சாடும்.

ஒரு கண்ணில் மறைமலையார் (கருமணிப்) பாவை
கொள்ள
ஒரு கண்ணில் பெரியாரே பாவை கொள்ள
வரும் ஒவ்வோர் நாளும் தமிழ்த் தன்மானம்
வரும் இன்னல் கோடியிலும் தளரா நெஞ்சப்
பெருங்கடலின் கொள்கை அலைவீச்சில் ஆர்த்தார்.
பெரியாரும் அன்னாரின் தகைமை கண்டு
திருநிதியாய்ப் பத்தாயிரம் வெண்காசும்
தென் ‘தமிழ் மறவர்’ பட்டமும் சேர்த்தாரே!

பகுத்தறிவும் தனித்தமிழும் உயிரின் ஊற்று
பார்ப்பனியப் பதரோட்டும் சூறைக் காற்று
மிகுத்த இன்னல் இடமாற்றம் வேலை நீக்கம்
மிரட்டினாலும் மருளாத கொள்கை ஊக்கம்.
வகுத்த புகழ் ஆனைமுத்தார், மணிச்சிலம்பார்
(செல்லப்பனார்)
பெருஞ்சித்திரனார் இவர் மாணவச் சுடர்கள்
தொகுத்த புகழ் தேவநேயர், தமிழ்வானத்தைத்
தோள்சுமந்த பாவேந்தர் இவர் தோழர்கள்.

பொன் நோக்கம் பொருள் நோக்கம் இல்லாச் செம்மல்
பொன்னம்பலன் பெயர்தான் புனைந்த கன்னல்
மின்வீச்சில் பார்ப்பனியப் படையைத் தாக்கும்
மின்மினிகள் (வடமொழிகள்) ஒளிமூழ்க்கும் சுடரின் ஆழி!
தன் உயிரின் உட்புகுந்த தமிழின் ஆண்மை
தன் உடலம் மானத்தின் மாட வீதி
‘என் வானம் என் பூமி’ எனும் செருக்கில்
இனமானத் தமிழிசைத்த மறவன் வாழ்க!

- பேராசிரியர் **இரா. சோதிவாணன்**

# திராவிடரும் ஆரியரும்

- பேராசிரியர் இரா. சோதிவாணன்

7.9.2020ஆம் நாள் திங்கட்கிழமை வெளிவந்த 'தினமணி'யில் கோதை சோதிலட்சுமி 'பாரதியாரும் ஆரியமும்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதியுள்ளார். ஆரியர் - திராவிடர் இனப் பாகுபாடு, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் மேலைநாட்டு அறிஞர்களால்தான் புனையப் பட்டதாகக் கூறிப் புலம்பியிருக்கிறார். பாரதியார் 'ஆரியத்தை' உயர்பொருளில்தான் கையாண்டுள்ளார் என்று மேற் கோள் காட்டி வலியுறுத்தி உள்ளார். ''இருப்பனவற்றை யெல்லாம் சமரசமின்றி விமர்சனம் செய்'' என்பது காரல் மார்க்சின் அறிவுநெறிக் கோட்பாடு ஆகும். அதனால் கட்டுரையாளர் இதற்குமுன்பே எழுதியிருந்த கட்டுரை களின் கருத்து முரண்பாடுகளை நான் திறனாய்வு செய்து 'சிந்தனையாளன்', 'தமிழ்ப் பணி' ஆகிய இதழ் களில் வெளியிட்டிருக்கிறேன். அவ்வாறே இக்கட்டுரை யையும் திறனாய்வு செய்ய விழைகிறேன்.

'ஆரிய இனம்', 'திராவிட இனம்' இருக்கின்றனவா? எனக் கட்டுரையாளர் வினா எழுப்புகின்றார். அதற்கு வரலாற்றாளர்கள், அறிஞர்கள் கூறியுள்ளவற்றை நான் இங்கே விடையாக வழங்குகிறேன். 'வால்காவிலிருந்து கங்கை வரை' என்ற நூலைப் பேராசிரியர் - வரலாற்று ஆய்வாளர் இராகுல சாங்கிருத்தியாயன் சிறப்பாக எழுதியுள்ளார். சமுதாயத்தின் முக்கியமான மாற்றம் அல்லது பெரிய வளர்ச்சிகளையே மையமாகக் கொண்டு கதைகள் வடிவத்தில் இந்நூல் எழுதப்பட்டுள்ளதைப் படிப்பவர்கள் அறிந்துகொள்வார்கள்.

அவர் இதன் இரண்டாம் பதிப்பின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ள வரிகள் அறிவுலகம் ஏற்றுப் பாராட்டப் பட வேண்டியவை. ''இந்தக் கதைகள் ஒவ்வொன்றிற்கும் பின்னால் அந்தந்தக் காலத்தைப் பொறுத்த பலமான ஆதாரங்கள் இருக்கின்றன. உலகத்தில் எத்தனையோ மொழிகள் உள்ள தர்க்க ரீதியான மொழியாராய்ச்சி, மண், கல், தாமிரம், பித்தளை, இரும்பு இவைகளில் எழுதப்பட்டும் செதுக்கப்பட்டும் உள்ள சரித்திரம் - இலக்கி யங்கள், எழுத்து வடிவம் பெறாத பாடல்கள், கதைகள், பல நாட்டின் பழக்கவழக்கங்கள், புதைப் பொருள்கள் இவைகளிலிருந்தெல்லாம் ஆதாரங்கள் தேடப்பட்டிருக் கின்றன'' என்று கூறும் பகுதி, ''இவர் பெரும்பாடு பட்டுத் திரட்டிய அறிவுத் திரட்சியையும் அடைவையும் இந்நூலில் ஆய்வுக் கருவூலமாக வழங்கியுள்ளார் என்னும் புலனாகும் புலமை''யை வெளிப்படுத்தக் கூடியதாகும். இந்நூலில் இடம்பெறும் 'அமிர்தாஸ்வன்' என்ற பெயரில் வரும் கதையின் அடிக் குறிப்பில் வரும் செய்தி மிகவும் கூர்ந்து நோக்கத் தக்கது. ''இன்றைக்கு இரு நூறு தலைமுறைகளுக்கு (கி.மு.3000) முந்திய ஒரு ஆரிய குலத்துக் கதை இது. அந்தக்காலத்தில் ஈரான் வெள்ளைச் சாதியினத்தவரும், இந்தியரும் சேர்ந்த ஒரு குலம் இருந்தது. இரண்டும் கலந்த இந்தக் குலத்திற்கு 'ஆரியர்', 'ஆரிய குலம்' என்று பெயர். ஆடு, மாடுகள், குதிரைகள் இவற்றைப் பரிபாலிப்பது இவர்களுடைய வாழ்க்கைக்கு முக்கியத் தொழிலாக இருந்தது'' என்ற குறிப்பு 'ஆரியர்' பற்றிய தெறிப்பான சான்றாக அமைகிறது.

'புருதானன்' தலைப்பில் வரும் கதையில், அதன் உள் வரலாறாக, ஆரியர் இந்தியாவிற்கு வந்த முயற்சி யைச் சுட்டுவது புலனாகும். வட்சு நதிப் பிரதேசத்திலி ருந்து கிளம்பிய ஆரியர்கள் பாமீர், இந்துகுஷ் முதலிய மலைப்பிரதேசங்களின் கடினமான வழிகளையும் குனார், பஞ்சகோரா முதலிய ஆறுகளையும் கடந்து, பல இன்னல்கள் பட்டு, இந்தச் சமவெளிப்பிரதேசத்தை மங்கலபுரம் (மங்களூர்) வந்து சேர்ந்தார்கள்.

இந்த இடத்திலிருந்து அய்ம்பது கோச (நூறு மைல்) தொலைவில் அசுரர்களுடைய தேசம் இருந்தது. அதன் நகர நாகரிகத்தை ஆரியர்கள் சிறப்பித்துப் பேசியுள் ளார்கள். அசுரர்களின் உருவத்தை அருவருப் பாகச் சுட்டியுள்ளார்கள்.

புருதானன் தலைமையில் ஆரியப்படை அசுர அரசனை நகரச் சந்தியில் நிறுத்தி, நகர மக்களுக்கு முன்னால் அங்க அங்கமாக வதை செய்தது. நகரத்தின் பெரும் பாகத்தைத் தீக்கிரையாக்கியது. இதுவே அசுரர் களினுடைய கோட்டையின் முதலாவது அழிவு. அன்று தான், ஆரியர்களுக்கும் அசுரர்களுக்கும் (தேவர் - அசுரர்) இடையில் யுத்த விதையும் ஊன்றப்பட்டது. இன்றைக்கு நூற்று அறுபது தலைமுறைகளுக்கு (கி.மு.2000) முன்னே தேவ-அசுர யுத்தம் மூண்டதின் கதை இது. இதைத்தான் மேலைநாட்டு ஆய்வறிஞர்கள் ஆரியர்-திராவிடர் இனப்போர் என்று கூறியுள்ளார்கள் என்பது பல அறிஞரின் கூற்றாகும்.

உலக அளவில் அறியப்பட்ட பழங்கால இந்தியா தொடர்பான வரலாற்றாளர் ரொமிலா தாப்பர், 'கற்பனை செய்யப்பட்ட சமயச் சமூகங்களா?' என்ற தன் உரை நூலில் ''புருஷ் பழங்கால அரசன் என்றும், அசுர ராட்சசன் என்றும் பரதரால் வீழ்த்தப்பட்டவன் என்றும் வேத நூல்கள் வழியே தெரிய வருகிறது'' என்று கூறியுள்ளது இங்கே நினைவுகூரத்தக்கது.

கட்டுரையாளர் சோதிலட்சுமி ''தமிழகத்தில் வேத காலம் தொடங்கி எங்கும் ஆரிய, திராவிட முரண் காணப் படவில்லை'' என்று எழுதியுள்ளார். சங்க காலம், சங்கம் மருவிய காலம், இருண்ட காலம் என்றுதான் தமிழக

வரலாற்றில் நான் கண்டிருக்கிறேன். 'வேத காலம்' என்ற ஒன்று என் கண்ணில் படாமல் போன தற்கு நான் வருந்துகிறேன். புராணம் தொடங்கிப் பல நூல்களில் பாரத தேசம் 56 மன்னர்களால் ஆளப்பட்டு வந்தது. இந்த 56 தேசங்களுக்குள் ஒன்று திராவிட நாடு என்று குறிக்கப்பட்டுள்ளது என்று கட்டுரையாளர் கூறுகிறார். நம் நாட்டுப் பண்ணில்கூட அன்றாடம் 'திராவிட உத்கல வங்கா' என்ற வரியைப் பாடிக் கொண்டுதான் இருக்கி றோம். கட்டுரையாசிரியர் இதை உணர்வார் என்று நம்புகிறேன்.

'ஆரியம்' என்ற சொல்லுக்கு, அகர முதலிகள் (அகராதிகள்) துணைகொண்டு கட்டுரையாளர் பொருள் விளக்கம் தருகிறார். ஆரிய என்றால் உயர்ந்த, மேன்மை யான, சிறப்பான உயரத்தில் உள்ள, பண்பாடு மிக்க என்ற பொருள்கள் உண்டு. சிலப்பதிகாரம், இமயமலை உச்சியில் வாழ்ந்தோரை ஆரியர் என்று சொல்கிறது என்கிறார் கட்டுரையாளர்.

அதே சிலப்பதிகாரம்தான் ''தமிழரின் வீரத்தைப் பழித்த ஆரிய அரசர்களான கனக விசயரைச் சேரன் செங்குட்டுவன் அவர்களின் வடநாட்டுக்கே சென்று போர்க்களத்தில் வென்று கண்ணகிப் படிமம் சமைத் தற்கு வேண்டிய கல்லை இமயத்தில் எடுத்துக் கங்கை யில் நீராட்டிக் கனகவிசயர் தலைமையில் சுமக்க வைத்துச் சேர நாட்டுக்குக் கொண்டுவரச் செய்தான்'' என்று பெருமிதத்தோடு கூறுகிறது. ''மாதவி மங்கை பாடிய கானல் வரிப்பாட்டு, கனகவிசயர் தலையை நெரித்தது'' என்கிறது.

''பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் என்று கூறுவதே இழிவு என உணர்ந்து, தமிழ்ப்பற்று மிகுந்து, இன உணர்ச்சி வாய்ந்து தமிழ்மக்கள் தங்களுக்கென, தங் களையே குறிக்கும் தனிப்பெயர் கொள்ள விரும்பி னார்கள். இவ்விருப்பம் இறுதியில் 'திராவிடர்' என்று வரலாற்றிற்கும், இழிந்தநிலை மாறி மனித நிலையை யடைவதற்கும், பொருத்தமாக யாரும் அசைக்கமுடியாத உண்மைப் பெயராக, உணர்ச்சிதருங் கருவியாக அமைந்து விட்டது'' என்று 'பெரியார் அகராதி' திராவிடர் என்பதற்கு விளக்கம் தருகிறது என்பதைக் கட்டுரையாளர் அறிக.

சங்க காலத்தில் ஆரியர் தம் வேள்விக் கொள்கை கள், சடங்குச் செல்வாக்கு, அரசர்களிடம் பெற்றிருந்த முதன்மை முதலியனவற்றை எட்டுத்தொகை, பத்துப் பாட்டு ஆகிய சங்க இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. ஆனாலும் அப்போதே பார்ப்பனர் எதிர்ப்பு இருந்தது என்பதை முனைவர் சி.இளங்கோ 'தமிழகத்தில் வேதக் கல்வி வரலாறு' என்ற தம் ஆய்வு நூலில் வெளிப் படுத்தியுள்ளார். சோழன் நலங்கிள்ளியின் தம்பியான மன்னன் மாவளத்தான், பார்ப்பனர்களை வெறுக்கும் இயல்பி னைக் கொண்டவனாக இருந்தான். இதனைத் தாமப்பல் கண்ணனார் என்ற புலவர் தம் புறப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

''ஆர் புனை தெரியல் நின்முன்னோரெல்லாம்
பார்ப்பார் நோவன செய்யலர் மற்றது
நீர்த்தோ நினக்கு...'' (புறம் 43)

சங்க காலத்தில் அந்தணர்களின் வைதீகச் செயற் பாட்டிற்குச் சிலரிடம் எதிர்ப்பு உணர்வுகள் இருந்துள்ளன என்பதையே இப்பாடல் சுட்டுவதாகக் கூறலாம்.

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், ஆரியரை வென்றான் என்ற செய்தி அறியற்பாலது. தமிழகத்தில் இருந்த ஆரியர்களுடன் சோழர்கள் செய்த போர்ச் செய்தியை 'ஆரியர் படையின் உடைகவென்' என அகநானூறு (336) பதிவு செய்கிறது.

தஞ்சைக்கு அருகில் உள்ள வல்லம் என்ற ஊர் வரை ஆரியர்கள் படையெடுத்துவந்து அங்கு அவர்கள் சோழர்களிடம் தோற்று ஓடினார்கள் என்ற செய்தியை முனைவர் சி.இளங்கோ தம் நூலில் பதிவுசெய்துள்ளார்.

மேற்கூறிய கட்டுரையாளர், பாரதியார், ஆரியர் பற்றியே பெருமையாகப் பாடினார் என்பதை விமர்சன மாகவும் குற்றச்சாட்டாகவும் சிலர் சொல்வது உண்டு என்று குறைபட்டுக் கொள்கிறார். அதன் உண்மை பற்றி இனி ஆராய்வோம்.

பாரதியார் சிறந்த கவிஞர்; உணர்ச்சி மிகுந்த கவிஞர் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. உணர்ச்சி எப்போதும் உள்ளத்தில் சமநிலை யில் இருப்பதில்லை. அது சமநிலையில் வெளிப்படு வதும் இல்லை. சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் அது தன்னை ஒப்பனை செய்துகொள்ளும். கவிஞனுக்கும் அது பொருந்தும். அது பொதுவிதி. சில கவிஞர்கள் கடைசி வரையில் கொண்ட கொள்கையில் உணர்ச்சியும் உறுதி யும் கொண்டிருப்பார்கள். சிலர் அவ்வப்போது வழுக்கிக் கொண்டிருப்பார்கள்.

பாரதியார் எழுதிய கவிதைகளை 'நியு செஞ்சுரி' புத்தக நிறுவனம், கால வரிசைப்படியாகத் தொகுத்து 700 பக்கங்கள் வெளியிட்டுள்ளது. இதில் தமிழ், தமிழ் நாடு ஆகியவற்றைப் பற்றி 11 பக்கங்கள் மட்டுமே உள் ளன. இந்தப் பதினோரு பக்கங்களிலும்கூட, தமிழை, தமிழ்நாட்டை உயர்த்திச் சொல்ல மனம் வராமல் ஆரியத்தையே உயர்த்திக் கூறுகிறார் பாரதியார்.

பாரதியார், தமிழைத் தாய்மொழியாகக் கொண் டிருந்த போதிலும் தம்முடைய மூதாதையர்களின் மொழியாகிய ஆரிய மொழியான சமசுகிருதத்தை உயர்ந்த மொழி என்பதோடு அதைத் தெய்வ மொழி யாகவும் கூறுகிறார். (வாலாசா வல்லவன், 'திராவிடர் இயக்கப் பார்வையில் பாரதியார்', 3-ஆம் பதிப்பு, பக்.15, 'நிகர்மொழி' பதிப்பகம்).

இந்தியாவை 'ஆரிய பூமி' என்கிறார் பாரதியார். ஸ்ரீ கிருஷ்ண தோத்திரம் என்ற பாடலிடல் "ஆரிய நீயும் நின் அற மறந்தாயோ? வெஞ்செயல் அரக்கரை வீட்டிடு வோனே, வீரசிகாமணி ஆரியர் கோனே" என்று துதிக்கிறார்.

இங்கு யாதவ குலத்தில் பிறந்த சூத்திரக் கடவுளை 'ஆரியர் கோன்' எனக் கூறுவது அவரின் ஆரியப் பற்றை அதிகமாகக் காட்டுகிறது. இதனை வாலாசா வல்லவன் மேற்கூறிய ஆய்வுநூலில் குறிப்பிடுகிறார்; மேலும் இந்தியாவில் உள்ள அனைத்துச் செல்வங் களையும் 'ஆரிய ஸம்பத்து' என்கிறார் பாரதியார். இதில் திருக்குறள், சிலப்பதிகாரம், ஆண்டாள் திருமொழி முதலிய தமிழ் இலக்கியங்களை ஆரியச் செல்வம் என்கிறார் பாரதி; பௌத்தர்களின் எல்லோரா ஓவியங்கள், தஞ்சை மராட்டியர்களின் தஞ்சை மகால், சாஜகானின் தாஜ்மகால் முதலியவற்றையும் ஆரியச் செல்வம் என்கிறார். "மற்ற இனத்தவரின் உழைப்பில் விளைந்த கலை, இலக்கியம் முதலியவற்றை ஆரியர் செல்வ மாகப் பாரதி உரிமை கொண்டாடுவது அவரின் அளவு கடந்த ஆரிய வெறியைக் காட்டுவதாக அமைகிறது" என்று தம், 'திராவிடர் இயக்கப் பார்வையில் பாரதியார்' என்ற நூலில் குறிப்பிடுகிறார், வாலாசா வல்லவன்.

சமசுகிருதத்தில் க, ச, ட, த, ப முதலிய வல்லின எழுத்துக்களுக்கு வர்க்க எழுத்துகள் இருப்பதுபோல் தமிழில் வர்க்க எழுத்துக்கள் இல்லாததால் தமிழில் எழுத்துக் குறையுள்ளது என்று பாரதியார் 1915-இல் சூலைத் திங்களில் 'ஞானபாநு' என்ற இதழில் எழுதி யுள்ளார். பாரதியின் இக் கூற்றை அறிஞர் வ.உ.சி. 1915 செப்டம்பர் திங்களில் அதே ஞானபாநு இதழில் கடுமையாக மறுத்துக் கூறியுள்ளார்.

> "தமிழில் எழுத்துக்குறை என்று சொல்லுபவர்கள் பெரும்பாலும் சமசுகிருதச் சார்புடையவராக வும், தமிழ் இலக்கண இலக்கியங்களைப் படிக் காதவர்களாகவும் இருக்கின்றனர்..." - வ.உ.சி.
> (ஆ.இரா. வேங்கடாசலபதி, 'வ.உ.சி.யும் பாரதியும்', மக்கள் வெளியீடு : 1994. பக். 128, 129)

பாரதியின் உள்நிலைமை தெரிய அவரது பாடல் களைச் சற்று கூர்ந்து பாருங்கள்.

பாரதியின் நாட்டுப்பற்று :

> "உன்னத ஆரிய நாடெங்கள் நாடே"

பாரதியின் இனப்பற்று :

> "முன்னை யிலங்கை அரக்கர் அழிய
> முடித்த வில் யாருடைய வில்?
> ஆரிய ராணியின் வில்,
> ஆரிய ராணியின் சொல், ஆரிய தேவியின் தேர்"

எனப் பல பாடல்களில் ஆரியத்தின் பெருமையையே பறை சாற்றுகிறார் மணியம்மையார். ('குடிஅரசு', 23.9.1944)

1949இல் ஓமந்தூரார் அரசு, பாரதி நூல்களின் பதிப்பு உரிமையை வாங்கியது. 1950இல் அரசு, பாரதி நூல்கள் பதிப்புக்குழு ஒன்றை உருவாக்கியது. அக் குழுவில் இருந்த ரா.பி.சேதுப்பிள்ளை, மு. வரதராசனார் போன்றோர் பாரதியின் கவிதைகளில் மூலப் படியில் இருந்த கிரந்த எழுத்துகளை முழுமையாக நீக்கிவிட்ட தாகவும், 1909இல் வெளிவந்த 'ஜன்ம பூமி'யில் 'ஸமர்ப்பணம்', 'முகவுரை' ஆகியவற்றின்கீழ் 'ஸி. சுப்பிர மணிய பாரதி' என்றே கையொப்பமிட்டுள்ளார் என்றும் ஆய்வாளர் க. கைலாசபதி கூறியுள்ளார். (வாலாசா வல்லவன், 'தி.இ. பார்வையில் பாரதியார்', பக்.19).

பாரதி, கவிதையில் மட்டுமல்லாமல், கட்டுரை, கதைகளில் கூட, சமசுகிருதத்தை அதிகமாகப் புகுத்தி யுள்ளார். திராவிட இயக்கத்தின் தலைவர்களைத் தேச விரோதிகள் என்கிறார் பாரதியார். அவரின் உரை நடையில் 'சமசுகிருத வாடை' அதிகமாக வீசுவதைக் காண ஒரு சிறு பகுதி :

> "டாக்டர் நாயரைத் தலைமையாகக் கொண்ட திராவிடக் **கஷி**யார் என்ற போலிப் பெயர் புனைந்த தேசவிரோதிகளுக்கு நான் சார்பாகி **ஆர்ய பாஷா** விரதம் பூண்டு பேசுகிறேன் என்று நினைத்து விடலாகாது"

என்பதில் மேற்கூறிய உண்மையை உணர்க.

'பிராயச்சித்தம்' என்ற கதையில் ஒரு சிறு பகுதி :

> "ப்ராம்ஹணா மம தேவதா (பிராமணர் எனக்குத் தெய்வம்) என்று ஸ்ரீமந் நாராயணனே சொல்லு கிறார். அப்படியிருக்கையில் யாரும் பிராமணப் பதவியிலிருந்து நழுவக்கூடாது. நழுவினாலும் மறுபடியும் சேர்ந்துகொள்ள வேண்டும்"

என்று ப்ராயச்சித்தம் என்ற கதை சொல்கிறது. தமிழில் சொல் முதலில் தனி மெய்யெழுத்து வராது என்பது கூடப் பாரதிக்குத் தெரியாமல் போனது வியப்பாக உள்ளது.

பாரதி சூழ்நிலைக் கைதியாகிவிடும் போதெல்லாம் அவரின் உறுதியில் நெகிழ்ச்சி ஏற்பட்டுவிடுகிறது என்பதை அவரை முற்றிலும் ஆய்ந்தவர்கள் அறிந்து கொள்வார்கள்.

'இந்தியா' இதழில் பணியாற்றியபோது பாரதியாரை ஆங்கில அரசு, கைதுசெய்ய ஆணை அனுப்பியபோது அவர் தப்பித்துப் பிரெஞ்சு ஆட்சியிலிருந்த புதுவைக் குச் சென்றுவிடுகிறார். அங்குச் சிலகாலம் இருந்த பிறகு கடலூருக்குச் செல்கிறார். அங்கே ஆங்கில அரசு அவரைக் கைதுசெய்து, முதலில் சார்பு நிலைச் சிறை

யிலும் அடுத்து மத்திய சிறையிலும் வைத்தது. பாரதி அச் சிறையிலிருந்தபடியே மாநில ஆளுநருக்கு மன்னிப்புக் கடிதம் ஆங்கிலத்தில் எழுதிக்கொடுக்கிறார் : (G.O.No.1331 dt.18.12.1918 Public)

> “பிரபுவிற்கு உண்மையான கீழ்ப்படியும் பணியாளனாக இருக்க இறைஞ்சும் - சி. சுப்பிரமணிய பாரதி. (I beg to remain your Excellency's most obedient servant - C. Subramania Bharathi)

கீழ்க்கண்ட நிபந்தனைகள் பேரில், பாரதியார் விடுதலை செய்யப்பட்டார்.

1. நெல்லை மாவட்டத்தில் பாரதி விரும்பும் இரண்டு ஊர்களில் ஏதாவது ஒன்றில் வாழ்க்கை நடத்த வேண்டும்.
2. பாரதியின் படைப்புகள், பேச்சுகள் ஆகியவற்றை முன்கூட்டியே குற்றப்புலனாய்வுத் துறைக்கு அனுப்பி அவற்றைத் தணிக்கை செய்த பிறகே வெளியிட வேண்டும்.
3. அரசியல் நடவடிக்கைகள் அனைத்திலிருந்தும் நீங்கிவிட வேண்டும்.

இந்த மூன்று கண்டிப்புகளையும் எழுத்து வடிவத்தில் பாரதி, ஏற்றுக்கொண்டார். 14.12.1918-இல் விடுதலை செய்யப்பட்டார். அதன்பின் அவர் நேரே கடையம் சென்று விட்டார். (வாலாசா வல்லவன், 'தி.இ. பார்வையில் பாரதியார்', பக்.33-36).

நாட்டு விடுதலைக்காகப் பொங்கிப் பெருகிய உணர்ச்சி வெள்ளத்தில் பாட்டு வடித்த பாரதியார், கடலூர்ச் சிறையில் வைக்கப்பட்டு, மன்னிப்புக் கடிதம் எழுதப்பட்டு, ஆங்கில அரசால் வைக்கப்பட்ட கண்டிப்புகள் ஏற்றுக்கொள்ளப் பட்டுக் கடையம் சென்றுவிட்ட பிறகு, அவரின் உணர்ச்சி வெள்ளம் மங்கிப் படிப்படியாகத் தணிந்து விட்டது என்றே கூறவேண்டும்.

“ஸ்ரீமான் நெல்லையப்ப பிள்ளைக்கு, நமஸ்காரம்; நான் ஸௌக்யமாகக் கடயத்துக்கு வந்து சேர்ந்தேன். 'பாஞ்சாலி சபதம்' இரண்டு பாகங்களையும் ஒன்றாகச் சேர்த்து அச்சடிப்பதற்குரிய ஏற்பாடு எதுவரை நடந்திருக்கிறதென்ற விஷயம் தெரியவில்லை. இனிமேல் சிறிதுகாலம் வரை நான் ப்ரசுரம் செய்யும் புத்தகங்களைப் போலீஸ் டிப்டி ஜெனரலிடம் காட்டி அவருடைய அனுமதி பெற்றுக்கொண்ட பிறகே ப்ரசுரம் செய்வதாக ராஜாங்கத்தாருக்கு நாள் ஒப்பந்தமெழுதிக் கொடுத்திருக்கிறேன்.”

உனதன்புள்ள
**சி. சுப்பிரமணிய பாரதி**
(பெ. தூரன், பாரதித் தமிழ், பக்.297, 298)

மேலும் பாரதி இந்தியாவின் பொதுமொழியாக இந்தி தான் வரவேண்டும் என்று முதன்முதலில் சொல்லியிருக்கிறார். 15-12-1906 இந்தியா வார ஏட்டில் 'இந்தி பாஷைப் பக்கம்' என்ற தலைப்பில் அதனைக் கூறியுள்ளார்.

1920இல் (11-1-1920) சுதேசமித்திரன் இதழில் ஸம்ஸ்க்ருத பாஷையே இந்தியாவுக்குப் பொதுமொழியாக வரவேண்டும் என்று எழுதியுள்ளார்.

ஆங்கிலேயர் பாரத நாட்டுக்குத் 'தன்னாட்சி' (சுயாட்சி) கொடுத்தால் போதும் என்ற எண்ணத்துக்கும் தள்ளப் பட்டார் பாரதியார். ஆங்கியேலர்கள் சாம்ராஜ்யத்தை விட்டு விலக வேண்டுமென்ற யோசனை எங்களுக்கில்லை. (சுதேசமித்திரன்-1916 டிசம்பர் 26-பெ. தூரன், பாரதித் தமிழ், ப.223.)

மேற்கூறிய சான்றுகளால் பாரதியாருக்குத் தமிழின் மீது தனிப்பற்று கிடையாது. ஆரிய மொழி சமசுகிருதத்தின் மீதே அதிகமான பற்றுதல் உண்டு என்பதும், நடுவுநிலைமை இல்லாமை, சூழ்நிலைக்குத் தகுந்தாற் போல் தம் கருத்தைமாற்றிக் கொள்ளுதல், தாம் உயர்வாகக் கருதிய ஆரியத்தைத் தலைதூக்கி நிறுத்துதல் முதலிய ஒரு சார்பின் மேலோங்கிய பிடிமானம் உண்டு என்பதும் கண்டறியலாம். “ஆரியர் - உயர்ந்தவர் என்ற பொருளிலும் பூரியர் அவ்வாறில்லாதவர் என்ற பொருளிலும் பாரதி கையாண்டுள்ளார்” என்று சோதிலட்சுமி கூறுகிறார். அவ்வாறு இல்லை என்பதைப் பாரதியார் கூற்றைக் கொண்டே அவருக்கு விடையிறுக்கிறேன். “பொய்யும் புனைவுமாகத் திராவிடர்களென்றும் ஆரியர்கள் என்றும் பழைய சொற்களுக்குப் புதிய அபாண்டமான அர்த்தங்கள் கற்பித்துக் கொண்டு வீண்சண்டைகள் வளர்ப்பதில் ஹிந்து சமூகத்துக்கே கெடுதி விளையக் கூடும்” என்பதே அவரின் கூற்று.

**ஒவ்வொரு இனக்குழு சமூகமும் அதன் மொழி வழியிலேயே அறியப்படுகிறது. தமிழினம், தமிழ்மொழி மூலம் அறியப்படுகிறது. சமற்கிருதம் ஆரிய இனக் குழுவின்மூலம் அறியப்படுகிறது. 'ஆரியம்' – 'ஆரியர்' என்பது இனவழி வந்த சொல்லேயாகும். ஆரியம் நன்று தமிழ்தீ தெனவும் உரைத்த குயக்கோடனைச், சாக நக்கீரர் சவித்தார் என்பதும் அவன்பால் இரக்கங் கொண்டு இறந்தவன் மீண்டும் எழுந்து வாழ வாழ்த் தினார் என்பதும் நினைவிற்கொள்க.**

> “ஆரியம் போல் உலக வழக்கு,
> அழிந்தொழிந்து சிதையா உன்
> சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து
> வாழ்த்துதுமே!”

என்ற பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் 'ஆரியம்' என்பதை எப்பொருளில் வழங்கினாரோ அப்பொருளில் தான் பாரதியாரும் வழங்கியுள்ளார் என்பது அறியற் பாலது. ஆரியர் - பார்ப்பார், பிராமணர், அந்தணர் என்பவையெல்லாம் ஓர் இனத்தவரின் பல பெயர்கள். பிராமணர் பிரம்மாவின் தலையில் பிறந்தவர் என்பதால் மனு அவர்களை உயர்ந்தவர் என்று கூறுகிறார். அதனால்தான் 'ஆரியம்' என்பதற்கு உயர்பொருள் குறிக்கப் படுகிறது. அது இனவழி வந்த சொல்லே ஆகும்.

# 11-10-2020 மா.பெ.பொ.க. பொதுக்குழுக் கூட்டம் 10-01-2021இல் சிந்தனையாளன் பொங்கல் மலர் வெளியிட முடிவு

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுக்குழுக் கூட்டம், பொதுச்செயலாளர் வே. ஆனை முத்து தலைமையில் அம்பத்தூர் அறக்கட்டளைக் கட்ட டத்திலுள்ள சிந்தனையாளன் அலுவலகத்தில், 11.10.2020 முற்பகல் 10.30 மணிக்குத் தொடங்கியது.

26 தோழர்களும் தோழியர்களும் அதில் பங்கு பெற்றனர். பல தோழர்கள் உரையாற்றிய பின், பின் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானம் 1 :** 10.1.2021 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு, சிந்தனையாளன் 2021 பொங்கல் மலர் வெளியீட்டு விழாவினைச் சென்னையில் நடத்து வது என்று தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் 2 :** சிந்தனையாளன் ஆசிரியர் குழு வுக்குக் கீழ்க்காண்பவர்கள் தேர்வு செய்யப்பட்டனர் :

வே.ஆனைமுத்து, க.முகிலன், வாலாசா வல்லவன், சா.குப்பன், சி.பெரியசாமி, இரா. பச்சமலை, ந.கருணா கரன், கோவி இராமலிங்கம், சி. நடராசன், தி.துரை சித்தார்த்தன், முனைவர் முத்தமிழ்.

ஆசிரியர் குழு, மாதந்தோறும் 15ஆம் நாள் அம்பத் தூரில் கூடவேண்டும்.

**தீர்மானம் 3 :** மா.பெ.பொ.க. தலைமைக் குழு விற்கு (பொலிட் பீரோ) கீழ்க்காண்பவர்கள் தேர்ந் தெடுக்கப்பட்டனர்.

வே. ஆனைமுத்து - பொதுச் செயலாளர்
சி. பெரியசாமி - துணைப் பொதுச் செயலாளர்
தி. துரைசித்தார்த்தன் - துணைப் பொதுச்செயலாளர்
சா. குப்பன்
வாலாசா வல்லவன்
இரா. திருநாவுக்கரசு
முனைவர் முத்தமிழ்
இரா. பச்சமலை
மு. சாமிநாதன்

தலைமைக்குழு மாதந்தோறும் 9ஆம் நாளன்று சிந்தனையாளன் அலுவலகத்தில் கூடவேண்டும்.

**தீர்மானம் 4 :** சிந்தனையாளன் மேலாளராக உள்ள க. முகிலன், உடல்நலக்குறைவு காரணமாக இப் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, அவருக்குப் பதிலாக சா. குப்பன் அப்பொறுப்பிற்கு அமர்த்தப்படு கிறார். மாநிலக் கூட்டுறவு வங்கியில் இயக்கப்படுகின்ற ‘‘சிந்தனையாளன்’’ கணக்கினை இனி, க. முகிலனுக்குப் பதிலாக சா. குப்பன் இயக்குவார் என, இப்பொதுக்குழு ஒருமனதாகத் தீர்மானிக்கிறது.

**தீர்மானம் 5 :** இரங்கல் தீர்மானம்.

26.1.2020 அன்று இயற்கை எய்திய திருச்சி சிந்தனையாளன் கழகத் தலைவராக இருந்த பொறி யாளர் கு.ம.சுப்பிரமணியம், 26.6.2020இல் மறைந்து விட்ட தமிழறிஞர் வேலூர் புலவர் குமர. தன்னொளியன், 20.7.2020 அன்று இயற்கை எய்திய அகில இந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவைத் தலைவர் இராம் அவதேஷ் சிங், 22.7.2020இல் மறைவுற்ற மார்க்சிய அறிஞர் கோவை ஞானி, 14.9.2020 அன்று இயற்கை எய்திய சொல்லாய்வறிஞர் ப.அருளி அவர்களின் துணைவியார் தேன்மொழி, 19.9.2020இல் மறைந்த கூட்டுறவுத் துணைப்பதிவாளர் இரா.பத்மநாபன், 23.09.2020இல் மறைந்த பெரியாரின் பெருந்தொண்டர் மேனாள் சட்டமன்ற உறுப்பினர் கோ.ப.வெங்கிடு, இந்திய ஒன்றிய அரசில் அமைச்சராக இருந்து 8.10.2020 அன்று இயற்கை எய்திய இராம் விலாஸ் பஸ்வான் ஆகியோரின் மறைவு கருதி, இப்பொதுக்குழு மனங் கசிந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

வே. ஆனைமுத்து நன்றி கூறுதலுடன், மாலை 4.30 மணிக்குப் பொதுக்குழுக் கூட்டம் முடிவுற்றது.

**11.10.2020** **- வே. ஆனைமுத்து**
பொதுச் செயலாளர், மா.பெ.பொ.க.

## மா.பெ.பொ.க. தலைமைக்குழுக் கூட்ட முடிவுகள்

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் தலைமைக் குழுக் கூட்டம் 31.10.2020 சனிக்கிழமை அன்று அம்பத்தூரில், சிந்தனையாளன் அலுவலகத்தில், பொதுச்செயலாளர் வே.ஆனைமுத்து அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கீழ்க்கண்ட முடிவுகள் மேற்கொள்ளப் பட்டன.

1. சிந்தனையாளன் பொங்கல் சிறப்பு மலர்-2021 வெளி யீட்டு விழாவை சென்னை, சேப்பாக்கம் நிருபர்கள் அரங்கில் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.
2. சிந்தனையாளன் பொங்கல் மலரை வெளியிட்டு சிறப்புரையாற்றிட, ‘தலித் முரசு’ இதழின் ஆசிரியர் புனித பாண்டியன் அவர்களை அழைப்பது எனவும், சுயமரியாதை-சமதர்ம மாநாட்டிற்குப் பேராசிரியர் த.செயராமன் அவர்களை அழைப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது.

### மண்டல் கமிஷன் :

# என்னை முட்டாள் என்று சொல்கிறாயா? கோபப்பட்டார் மொரார்ஜி தேசாய் !

## மனந்திறக்கிறார் வே. ஆனைமுத்து

**பேராசானைச் சந்தித்தேன்!**

ஆசிரியர்தினம் (செப்.15) நாளான இன்று வாழும் பெரியார், சுயமரியாதை இயக்கத்தின் பேராசான், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் தலைவர் அய்யா ஆனைமுத்து (96) அவர்களைச் சந்தித்தேன். தாம்பரத்தை அடுத்த இரும்புலியூரில் தனது மகன் ஆனை. பன்னீர்செல்வம் அவர்களின் அன்பான அரவணைப்பில் உள்ள அய்யா அவர் களைச் சந்தித்துப் பேசியது மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. வயது மூப்பின் காரணமாக ஓய் வெடுத்துக் கொண்டிருக்கும் அய்யா அவர்கள், தானே எழுந்து வந்து வரவேற்று, இருக்கைகளைத் தானே எடுத்துவந்து போட்டு அமரவைக்கும் பாங்கும் பண்பும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அய்யா அவர்களிடம் உள்ள அற்புதமான அம்சம் என்னவென்றால், அவரது நினைவாற்றல். வாழும் வரலாறாய் அத்தனைத் தகவல்களையும் விரல் நுனியில் வைத்திருக்கும் இந்தப் பேராசான், அத்தனையையும் நினைவு தவறாமல் பேசுவது தான் பேராச்சரியம்.

**பள்ளிப்பருவத்தில் அருட்பிரகாச வள்ளலாரின் அன்பர்கள் தொண்டராகவும் இருந்துள்ளீர்கள். வள்ளலார் மீது ஈர்ப்பு வந்தது எப்படி?**

பள்ளித் தொடக்கத்தில் அகரம் என்கின்ற சிற்றூரில் என் தாயைப் பெற்ற பாட்டி வீட்டில் தங்கிப் படித்தேன். அங்கு ஆசிரியர் அழகப்பன் என்பவர் என்னுடைய முதலாவது ஆசிரியர் ஆவார். அவருடைய நண்பர் பெருமாள் என்பவர். இவர்கள் இருவரும் வள்ளலார் அன்பர்கள். இவர்கள் இருவரும் அனைத்து மாணவர் களையும் மார்கழி மாதம் சிற்றாற்றுக்கு அழைத்துச் சென்று குளிப்பாட்டுவார்கள். ஊரைச் சுற்றி அதிகாலை யில் பஜனை பாடிக்கொண்டு வருவோம். பிறகு எட்டாம் வகுப்பு லெப்பைக்குடிக்காட்டில் படித்தேன். அங்கு ந. கணபதி என்கின்ற ஆசிரியர் பணியில் இருந்தார். அவரும் வள்ளலார் அன்பர். அப்படித்தான் வள்ளலார் பற்று எனக்கு வந்தது.

**கல்லூரியில் படிக்கும்போது மறைமலை அடிகள் மீது பற்றுதலும், அவரது தனித்தமிழ் இயக்கத் தின்பால் ஈடுபாடும் தங்களுக்கு இருந்துள்ளது. அதைப் பற்றிக் கூறுங்கள்?**

நாமக்கல் மாவட்டத்தில், நஞ்சை இடையாறு என்கின்ற பேரூர் ஆற்றங்கரையில், கந்தசாமிக் கண்டர் என்கின்ற செல்வந்தர் இருந்தார். அவர் குழந்தை யற்றவர். நாமக்கலில் உயர்நிலைப் பள்ளிக் கூடம் மற்றும் இலவச உணவு விடுதி நடத்தினார். அதன் தொடர்ச்சியாக வேலூரில் ஒரு தொடக்கப்பள்ளி, உயர் நிலைப் பள்ளி, உணவு விடுதியும் தொடங்கினார். அந்தப் பள்ளியில் இரண்டு தமிழாசிரியர்கள். மூத்தவர் பெயர் கனகசபை என்கின்ற பொன்னம்பலனார். இளையவர் புலவர் கண்ணப்பன்.

ஆசிரியர் பொன்னம்பலனார் மறைமலை அடிகள் மகனோடு தமழ்க் கல்லூரியில் படித்தவர். தனித் தமிழில் வடமொழி கலக்காமல் பேசுவது மறைமலை அடிகள் பழக்கம்.

அதனால், அப்போது எங்கள் மாணவர்களுக்கு நல்ல தமிழில் சொற்களைச் சொல்லிக் கொடுப்பார். என்னோடு படித்த கருப்பையா என்பவர் மிகவும் சிவப்பாக இருப்பார். அவருக்கு செவ்வண்ணன் என்று பெயரிட்டார். அதேபோன்று பொய்யாமொழி என்கின்ற என்னுடைய நண்பர், அவர் தம் 95 வயதில் 2019 நவம்பரில் இறந்துவிட்டார். அவருடைய இயற்பெயர் பெரியசாமி ஆகும். அவருக்குப் பொய்யாமொழி என்று பெயரிட்டார்கள். இப்படிப் பல மாணவர்களின் பெயரை மாற்றினார். மறைமலை அடிகள் பெயரில் எனக்கு அதிக ஈடுபாடு உண்டு. ஆகையால் பத்தாம் வகுப்புக் குள்ளாகவே அவருடைய நூல்கள் அனைத்தையும் விரும்பிப் படித்து முடித்தேன்.

**அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது, இராமசாமி படையாட்சியின் உழைப்பாளர் கட்சியின் ஆதரவாளராக இருந்துள்ளீர்கள்... அக் கட்சியின் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டி ருந்தீர்கள் அல்லவா?**

காங்கிரசுக் கட்சியில் பின்தங்கிய சமூக மக்கள் பலர் உழைத்து வந்தார்கள். ஆனால் 1952இல் நடந்த

முதல் பொதுதேர்தலில் அவர்களுக்குப் போட்டியிட வாய்ப்பு அளிக்கப்படவில்லை. காங்கிரசுக் கட்சியில், ஆதிக்கச் சாதியினர் மிகுதியாக ஆதிக்கம் செலுத்தினர். ஆகையால் ஒரு மாற்றுக் கட்சி தேவைப்பட்டது. அப்போது இக்கட்சிக்கு அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களும் ஆதரவு தெரிவித்தனர். அதனால் நானும் இக்கட்சிக்கு ஆதரவு தெரிவித்துப் பணிகளில் ஈடுபட்டேன். நானும், கடலூர் ஆ.கோவிந்தசாமி என்பவரும், அவருடைய மைத்துனர் வழக்கறிஞர் கோ.செல்வராஜ் ஆகியோரும் விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி தொகுதிக்காகத் தேர்தல் பணியாற்றினோம். அதில் வெற்றியும் கண்டோம். நான் 1956 வரையில், தமிழ்நாடு உழைப்பாளர் கட்சியில் ஆர்வமாக இருந்தேன். பின்னர், 1957இல் காமராசர் அமைச்சரவையில் இராமசாமி படையாட்சி சேர்ந்தார். அதுமுதல் அந்தக் கட்சியுடன் தொடர்பில்லை.

**திருச்சியில், "தமிழ்நாடு டுடோரியல் காலேஜ்" என்ற கல்விப் பயிற்சி மையத்தைத் தொடங்கி நடத்தி வந்துள்ளீர்கள். இந்த எண்ணம் எதனால் ஏற்பட்டது. அதன் அனுபவத்தைக் கூறுங்கள்?**

ராமன், பார்த்தசாரதி போன்ற உயர் வகுப்பினரே தனிக் கல்லூரிகள் நடத்தினார்கள். அதைப் பார்த்து விட்டு, ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்த ஒருவர் "குமரி டுடோரியல் காலேஜ்" என்று தனிப்பயிற்சிக் கல்லூரி ஒன்றைத் தொடங்கினார். அதுபோலவே நானும், திருச்சியில், "தமிழ்நாடு டுடோரியல் காலேஜ்" என்ற கல்விப் பயிற்சி மையத்தைத் தொடங்கி, ஒடுக் கப்பட்ட மக்களின் கல்வித் தரத்தை மேம்படுத்த, அதை ஒரு தொண்டு எனக் கருதி ஈடுபட்டேன்.

**1950-இல் திருக்குறள் வீ.முனுசாமி அவர்களுடன் இணைந்து "குறள் மலர்" என்ற ஏட்டையும் அதற்குப்பின், 1957-இல் "குறள் முரசு" என்ற ஏட்டையும் நடத்தினீர்கள். இதன் அடிப்படைக் கொள்கை எது? மக்களிடையே அதற்கான வரவேற்பு எப்படி இருந்தது?**

தந்தை பெரியார் அவர்கள் 1949இல் சென்னை யில் 'திருக்குறள் மாநாடு' நடத்தினார். அதைத் தொடர்ந்து பலரும் இதழ் தொடங்கினர்.

நான், ஆசிரியர் ந. கணபதி, வெ. மாணிக்கம் பிள்ளை ஆகிய மூவரும் கூட்டுச்சேர்ந்து, திருக்குறள் வீ.முனுசாமி என்பவரை மாதம் ரூபாய் 120-க்கு ஊதியத்திற்கு அமர்த்தி, திருச்சியில் 1950-இல் "குறள் மலர்" தொடங்கினோம்.

கடலூரில் "திருக்குறள் அச்சகம் லிமிடெட்" என்கின்ற நிறுவனத்தின் மேலாளராக முனுசாமி இருந்தார். அங்கிருந்து எளிய முறையில் கட்டுரைகள் எழுதி அனுப்பு வார். அந்த இதழுக்கு மக்களிடம் நல்ல வரவேற்பு இருந்தது.

திருச்சியில் 1957-இல் நான் சிறைக்குப் போவ தற்கு முன், "குறள் முரசு" என்னும் இதழைத் திராவிடக் கொள்கைகளை பரப்பும் ஏடாகத் தொடங்கினேன். அதில், என் மனைவி சுசீலாவின் 10 பவுன் நகையை விற்று நடத்தினேன். அந்த இதழுக்கும் மக்களிடம் நல்ல வரவேற்பு இருந்தது. இருப்பினும், நான் சிறைக்குச் சென்றதால் பத்திரிக்கையை நிறுத்திவைக்க வேண்டிய சூழ்நிலை உருவாயிற்று.

**தந்தை பெரியாருடன் எப்போது இணைந்தீர்கள்? திராவிடர் கழகத்தில் உங்கள் பங்கு பற்றிக் கூறுங்கள்?**

நான் 1950-இல் பெரியாருடன் இணைந்தேன். எல்லாப் போராட்டங்களிலும் பங்கு பெற்றேன். பல ஆண்டுகள் திருச்சி மாவட்டச் செயலாளராகவும் இருந் தேன். 1967 முதல் மத்திய திராவிடர் கழகத் திருச்சி மாவட்ட உறுப்பினராக இருந்தேன். என்னை மூன்று தடவை தன்னோடு விடுதலை அலுவலகத்தில், மற்றும் நிருவாகத்தில் இருக்கும்படிப் பெரியார் பணித்தார். இருப்பினும் நான், அவரிடம் ஊதியம் பெற்றுப் பணி யாளராக இருக்க விரும்பாமல், மூன்று தடவையும் தட்டிக் கழித்தேன்.

**1974இல் "பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள்" நூலை அப்போதைய தமிழக முதல்வர் கலைஞர் தலைமையில் வெளியிட்டீர்கள். பெரியாருடைய பேச்சைத் தொகுக்கவேண்டும் என்ற எண்ணம் எதனால் ஏற்பட்டது? அந்தப் பணியின்போது நீங்கள் சந்தித்த சவால்கள் என்ன?**

பெரியாருடைய சிந்தனைக்கு வடிவம் கொடுக்க வேண்டும்; பெரியாருடைய பேச்சு, எழுத்து அனைத் தையும் தொகுக்கவேண்டும் என்கின்ற எண்ணம் எனக்கு இருந்தது. என் வழிகாட்டி ஆசிரியர் ந. கணபதி யிடம் கலந்து பேசினேன். நோபிள் கு. கோவிந்தராசலு, 2020இல் மறைந்த கு.ம. சுப்பிரமணியம், து.மா. பெரியசாமி, உறையூர் கோ.முத்துகிருஷ்ணன், பெரியார் மாளிகை மேலாளர் ச. சோமசுந்தரம் ஆகியோரிடம் கலந்து பேசினோம். பஞ்சவர்ண சுவாமி கோவில் தெருவில், முத்துக்குமாரசாமி செட்டியார் வீட்டில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அதைக் கொண்டு நான் 150 தலைப்புகளை எழுதினேன். பிறகு 80 பேருக்கு மடல் எழுதினேன். சிலர் மட்டும் கருத்துகளைத் தெரிவித்தார்கள். அவற்றையும் பயன்படுத்திக் கொண் டோம். நான், வடகரையில் தனிப்பயிற்சிக் கல்லூரி நடத்தியதால், கீழ்க்கரையில் உள்ள ஒரு விடுதியில், பெரியாரிடம் பெற்ற எல்லா நூல்களையும், "விடுதலை", "குடிஅரசு" போன்ற ஏடுகள் அனைத்தையும் தொகுத்து அங்கு வைத்து நான் படிப்பேன். அவற்றை, சின்ன புங்கனேரி வே. காசிநாதன், ந. கணபதி ஆகியோர்

மேற்பார்வையில், நான் கூறியவற்றைத் தொகுத்து எழுதினார்கள்; சிலர் அதற்குப் பயன்பட்டார்கள். அப்படி ஓராண்டு எடுத்துக் கொண்டோம். பின்னர் அவற்றைப் பெரியாருடைய பார்வைக்கு உட்படுத்தினோம். 3200 டிபுள் டிம்மி தாள்களில் எழுதியவற்றைப் பார்வையிட்ட பெரியார், 500 இடங்களில் கையெழுத்திட்டார். கடைசியில், ''திருச்சி சிந்தனையாளர் கழகம் வெளியீட்டு உரிமையைப் பெறும்'' என்று எழுதிக் கையெழுத்துப் போட்டார். அதற்குப் பிறகு சிதம்பரத்தில் வ.மாணிக்கம் செட்டியார், டாக்டர் பொற்கோ ஆகியோரிடம் சில கருத்துக்களைப் பெற்றேன். 1974-இல் வெளியிட்ட வடிவம் வ.மாணிக்கம் செட்டியார் சொன்னதுதான்.

பிறகு நானும், ஆசிரியர்கள் ந. கணபதி, வே. காசிநாதன் மூவரும் சென்னையில் வாடகைக்கு ஒரு அறை பேசி, ஒரு மாதம் தங்கி, பகுதி - தொகுதி எனப் பிரித்தல் செய்தோம். அதை அச்சிடப் பலர் மறுத்து வந்தார்கள். ஏனெனில், திராவிட நாடு பற்றிப் பெரியார் பேசியதால் அச்சகத்தின் பெயரில் நடவடிக்கை எடுப்பார்கள் என்று எண்ணினார்கள்.

திருச்சி கீதா பிரஸ் உரிமையாளர், மணி ஐயர் திருவல்லிக்கேணியில் ''கபீர் அச்சகம்'' என்பதை ஏற்பாடு செய்தார்.

கு.ம. சுப்பிரமணியம் மூலம் ரூபாய் 40,000 வட்டிக்குக் கடன் வாங்கி அச்சடிக்க ஆரம்பித்தோம். பணமுடக்கத்தால் காலதாமதம் ஆயிற்று. இதனிடையே, எதிர்பாராதவிதமாக, பெரியார் 24.12.1973 அன்று மறைந்தார். பின்னர் ஆறு மாதம் கழித்து, அப்போதைய முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களைப் புத்தக வெளியீட்டுக்காக அழைத்தோம். பின்னர் சூலை 01, 1974 புத்தக வெளியீட்டில், மணியம்மையார், கி. வீரமணி, நெ.து.சுந்தரவடிவேலு, அன்பில் தர்மலிங்கம், செ.கந்தப்பன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**மண்டல் கமிஷன் செயலாக்கத்திற்கு வட இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பல்வேறு கட்சிகளின் ஆதரவைத் திரட்டி உள்ளீர்கள். இதில் சோஷியலிஸ்ட் கட்சி தலைவர் ராம் அவதேஷ் சிங் நட்பும் ஆதரவும் குறிப்பிடத்தக்கதாக இருந்துள்ளது. அதுபற்றி...?**

பெரியார் மறைவுக்குப்பின் நான் கி.வீரமணி, மணியம்மையார் ஆகியோரைக் கண்டித்துக் கண்டன அறிக்கை வெளியிட்டதன் காரணமாக, என்னை தி.க.வின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்து 16.11.1975 அன்று நீக்கினார்கள்.

உடனே, நானும், என்னைச் சார்ந்த தோழர்களும் சிந்தனையாளர் கழகப் பொறுப்பை வைத்துக்கொண்டு, வேறு ஒரு அமைப்பைத் தொடங்குவது என்று முடிவெடுத்து, 8.8.1976 ''பெரியார் சமஉரிமைக் கழகம்'' என்கின்ற பெயரில் சீர்காழி மா.முத்துசாமி வீட்டில் கட்சி தொடங்கினோம்.

தந்தை பெரியார் அவர்களின் வாழ்நாள் கொள்கைப் படி, திராவிட மக்களுக்கு அவரவர் வகுப்பு வாரியாகப் படிப்பிலும் மத்திய, மாநில அரசு வேலைகளிலும் உரியபங்கு பெறுவது என்று முடிவெடுத்தோம்.

அதன் தொடர்ச்சியாக, 29.4.1978 முதல் இன்று வரையில், நாங்கள் விடாமல் முயற்சிக்கிறோம். அதன் வழியாக மத்திய அரசில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு பெற்றிட வேண்டும் என்கின்ற ஒற்றைக் கோரிக்கையுடன், 1978-இல் நானும், சீர்காழி மா. முத்துசாமி, பெரியாரின் அண்ணன் மருமகன் சேலம் தாதம்பட்டி எம்.ராஜு ஆகியோர் புதுதில்லிக்குப் பயணமானோம்.

எங்களை தில்லியில் அன்புடன் அன்று வரவேற்றவர், மக்களவை உறுப்பினர் வாழப்பாடி கூ. இ.ராமமூர்த்தி. அவர் எங்களுக்கு தில்லியில் தொடர்ந்து தங்குவதற்கு இடம் கொடுத்து உதவினார். இடஒதுக்கீடு தொடர்பாக முதன்முதலில் சந்தித்தது அன்றையக் குடியரசுத் தலைவர் நீலம் சஞ்சீவ ரெட்டியைத்தான். அவரோடு நீண்டநேரம் பேசினோம். அவர் எங்கள் கோரிக்கையை ஏற்காதது போலப் பேச்சைத் திசை திருப்பினார்.

பின் அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் இந்திரா காந்தி அம்மையாரைச் சந்தித்துக் கோரிக்கையை முன்வைத்தோம். ''நான் ஆட்சி அதிகாரத்தில் இல்லையே'' என்று பதிலுரைத்தார்.

தொடர்ந்து அன்றைய உள்துறை இணை அமைச்சர் தனிக்லால் மண்டல் என்பவரைச் சந்தித்தோம். அவர் எங்களுக்கு முழு ஆதரவு அளிப்பதாக உறுதியளித்தார். தொடர்ந்து பல வடஇந்தியத் தலைவர்கள், நாடாளுமன்ற மேலவை, மக்களவை உறுப்பினர்கள் ஆகியோரைச் சந்தித்தோம். அப்போது எங்களோடு அறிமுகமானவர் மக்களவை உறுப்பினர் ராம் அவதேஷ் சிங் மற்றும் ஜெயபால் சிங் கஷ்யாப்.

லோகியாவாதியான இராம் அவதேஷ் சிங் அவர்கள் கலந்துகொள்ள இருந்த உத்திரப்பிரதேசம் முசாஃபர் நகரில் நடந்த மாநாட்டிற்கு எங்களையும் அழைத்துச் சென்றார். பெரும் மக்கள் திரள் கூடியிருந்த மாநாட்டில் நான் ஒன்றரை மணிநேரம் ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தினேன். அதை இந்தி மொழியில் செடிலால் சாத்தி என்பவர் மொழியாக்கம் செய்தார்.

இடஒதுக்கீடு தேவை என்ற கருத்தை வட மாநில மக்கள் மத்தியில் பதித்த நாள் அதுதான். (7.5.1978)

**தங்களது முன்முயற்சியால், பீகாரில், கர்ப்பூரி தாகூர் முதல்வராக இருந்தபோது, அம்மாநிலம் முழுக்கப் பெரியார் நூற்றாண்டு விழா கொண் டாடப்பட்டது அல்லவா?**

தோழர் ராம் அவதேஷ் சிங் அவர்கள் எங்களிடம் ''உங்களது முதல் பயணம் பீகார் முழுவதும் பயணிப் பதாக இருக்கவேண்டும்'' என வேண்டுகோள் விடுத் தார். பீகாரின் எல்லா மாவட்டங்களிலும் தந்தை பெரியார் பிறந்த நாள் கூட்டம் ஏற்பாடு செய்வதாக உறுதியளித்தார். அதன்படி நானும் சீர்காழி மா. முத்துசாமி, வேலூர் நா.பா. செந்தமிழ்க்கோ, திருச்சி து.மா. பெரியசாமி ஆகியோர் பயணமானோம். தொடர் கூட்டங்கள்; ஆயுத பாணிகளாக உலாவரும் ஆதிக்கச் சாதிகளின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் எங்களது பயணம்.

ராம் அவதேஷ் சிங், எங்களைப் பாதுகாப்பாக அழைத்துச் செல்ல சிறிய தானியங்கித் துப்பாக்கி போன்ற ஆயுதங்களோடு உள்ள குழுவினரை ஏற்பாடு செய்திருந்தார்.

இறுதி நிகழ்ச்சியாக பாட்னா நகரில் மிகப்பெரிய பேரணிக்கு ஏற்பாடு செய்து இருந்தனர். அப்போது பீகார் மாநில முதல்வராக இருந்தார் கர்ப்பூரி தாகூர். இந்தப் பேரணியின் முடிவில் பேருரை ஆற்றினார். மக்கள் கூட்டம் ஆர்ப்பரித்தது. இந்த மக்கள் எழுச்சி, பீகார் மாநிலத்தில் பிற்படுத்தப்பட்டோருக்கு மாநில அரசு வேலை வாய்ப்பில் 20 விழுக்காடு இடஒதுக்கீடு பெற வழிவகுத்தது.

**மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்து வது தொடர்பாக வடஇந்தியாவில் பல மாதங்கள் சுற்றுப்பயணம் செய்து, பல்வேறு அமைப்புகள் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து இருக்கிறீர் கள். அவர்களுடனான சந்திப்பு மற்றும் அனு பவங்களைப் பற்றிச் சொல்லுங்கள்?**

பீகாரை அடுத்து அன்றைய உத்திரப்பிரதேச முதல்வராக இருந்த ராம் நரேஷ் யாதவ், மாநில அரசு வேலை வாய்ப்பில் 15 விழுக்காடு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வழங்கி உத்தரவிட்டார். இப்படித் தொடர் பயணங்கள் மூலம் பெற்ற வெற்றி, பல வடமாநிலத் தலைவர்களுக்கு இடஒதுக்கீட்டின் தேவையை உணர்த்தியது. அது எங்களுக்கு நம்பிக்கையையும் உற்சாகத்தையும் அளித்தது.

**நாங்கள், 24.6.1978 சென்னையில், ''அகில இந்தியப் பிற்படுத்தப்பட்டோர் மாநாடு'' ஏற்பாடு செய்தோம். இம்மாநாட்டில் அன்றைய மத்திய அரசின் உள்துறை இணை அமைச்சர் தனிக்லால் மண்டல், பல வட நாட்டுத் தலைவர்கள், கர்நாடகா, கேரளாவின் SNDP தலைவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.**

இதன் தொடர்ச்சியாக உத்திரப்பிரதேசம், பீகார், இராஜஸ்தான், அரியானா, பஞ்சாப், கேரளா எனப் பல மாநிலங்களில் மாநாடு, பொதுக் கூட்டங்கள் என்று எங்கள் பணி விரிவுபடுத்தப்பட்டது.

தொடர்ந்து, 01.01.1979-இல் பிந்தேஸ்வரி பிரசாத் மண்டல் தலைமையில் மண்டல் குழு அமைக்கப் பட்டது,

நாங்கள் புதுடில்லியில் 23.03.1979-இல் நடத்திய பேரணியில் ஏறக்குறைய 30,000 மக்கள் பங்கு பெற்றனர். என் துணைவியார் மறைந்த சுசீலா அம்மையார், பேரணி முகப்பில் பதாகை ஏந்தி, ''பெரியார் வாழ்க!, பெரியார் கொள்கை வெல்க!'' என முழக்கமிட்டபடி வந்தார். பேரணி முடிவில் நடந்த மாநாட்டில் அன்றைய துணைப்பிரதமர் பாபு ஜெகஜீவன் ராம் மற்றும் ராஜ் நாராயணன் பங்கு பெற்றனர்.

1980 சேலம் புத்துணர்வுக் கலை மன்றத்தில் ''அகில இந்தியப் பிற்படுத்தப்பட்டோர் மாநாடு'' நடந்தது. இதில் டாக்டர் கலைஞர், உத்தரப்பிரதேச முதல்வர் ராம் நரேஷ் யாதவ், இந்திய கம்யூனிஸ்ட் தலைவர் தா. பாண்டியன் போன்றோர் கலந்து கொண்டனர். உத்தரப்பிரதேச முன்னாள் பா.ச.க மாநிலத் தலைவரும், பிற்படுத்தப்பட்டவருமான வினய் கட்நாயக், இராஜஸ்தான் பிற்படுத்தப்பட்ட தலைவரான O.P. பார்மர், உத்தரப்பிரதேச மாநிலத்தில் பிற்படுத்தப் பட்டோர் தலைவரான பியாரிலால் லோதி, பஞ்சாப் மாநில முன்னாள் நீதிபதி அஜித் சிங் பெய்ன்ஸ், கேரள மாநில SNDP தலைவர்கள் A.M. பிரபா, வேலாயுதம், கர்நாடக மாநில எம். தர்மலிங்கம், நஞ்சுண்டசாமி போன்றவர்களின் ஆதரவுத் தளமும் கிட்டியது. பிறகு, பகுஜன் சமாஜ் கட்சி நிறுவனத் தலைவர் கன்ஷிராம் அவர்களின் நட்பும் கிட்டியது.

அவர் BAMCEF அமைப்பு சார்பில் நடத்தப்பட்ட நாக்பூர் மாநாட்டைத் துவக்கி வைத்துப் பேச என்னை அழைத்தார். DS 4 தற்காப்புப் படைப் பிரிவைக் கன்னியாகுமரியில் தொடங்கி வைக்க என்னைப் பணித்தார். அவரின் அமைப்பினால் நடத்தப்பட்ட OPPRESSED INDIAN என்ற ஆங்கில இதழில் எனது சமூகநீதிக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் தொடர்ந்து எழுதச் சொல்லி வலியுறுத்தினார். நானும் அதுபோல தொடர்ந்து எழுதி வந்தேன். எங்களது நடவடிக்கைக்கு ஊக்கமும் ஆதரவும் தெரிவித்தார்.

இப்படி உத்திரப்பிரதேசம், பீகார், இராஜஸ்தான், அரியானா, பஞ்சாப், அசாம், மேற்குவங்கம், கேரளா, தமிழ்நாடு, கருநாடகா என எங்களது நீண்ட நெடிய பயணம் தொடரும் முயற்சியினாலும் மண்டல் கமிஷன் நடைமுறைக்கு வந்ததற்கு பெரும் காரணங்களாகும்.

1978 முதல் நாங்கள் எடுத்த முயற்சிக்கு தி.மு.க. தலைவர் கலைஞர் மு.கருணாநிதி, நாடாளுமன்ற முன்னாள் துணைச் சபாநாயகர் ஜி.இலட்சுமணன், பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் ச.இராமதாசு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எம்.கல்யாணசுந்தரம் ஆகியோர் ஆதரவு அளித்தனர்.

எங்கள் மாநாட்டிற்கு, கூட்டத்திற்கு அழைத்தால் உடனே வருகைதந்து எங்களை ஊக்கப்படுத்தினர்.

இந்திய அரசியல் அரங்கில், 1980 முதல் இன்று வரை சமூகநீதிப் புயல் வீசி அதிர்ந்து கொண்டிருப்பதற்கு மேற்கூறியவர்கள் எல்லோருமே காரணம்.

**மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்துவது தொடர்பாக அப்போதைய உள்துறை அமைச்சர் ஜெயில் சிங் அவர்களைச் சந்தித்துள்ளீர்கள். அந்தச் சந்திப்புப் பற்றியும் அதற்குப் பின் அவருடனான நட்புப் பற்றியும் கூறுங்கள்?**

கியானி ஜெயில் சிங் 1982-இல் உள்துறை அமைச்சராக இருந்தார். அப்போது அவரின் அழைப்பின் பேரில், 25.01.1982-இல் நாங்கள் அவரைச் சந்தித்தோம்.

அவர் நடுவணரசில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு வேண்டும் என்ற அவசியத்தைத் தீவிரமாக ஆதரிப்பதாகக் கூறினார். எங்களுக்குப் போராட்ட வழிமுறைகளையும் எடுத்துச் சொன்னார். அடிக்கடிச் சந்திக்கும்படி அறிவுறுத்தினார். அவரது வழிகாட்டல் எங்களுக்குப் பேருதவியாய் அமைந்தது.

**பெரியாருக்கு முன்பே மூடநம்பிக்கை ஒழிப்பு, பகுத்தறிவு பற்றிப் பேசிய அத்திப்பாக்கம் வேங்கடா சல நாயகர் பற்றியும் அவர் எழுதிய நூலை மறுபதிப்பாக நீங்கள் வெளியிட்டீர்கள். அது பற்றி?**

ஆமாம். அத்திப்பாக்கம் வேங்கடாசல நாயகர் நல்ல படிப்பாளி. அவர் செய்யுள் வடிவில் “இந்து மத ஆசார ஆபாச தரிசினி” என்கின்ற நூலை எழுதி வெளியிட்டார். பிறகு, 1948-இல் அந்த நூலை குரு. இராமலிங்கம் என்பவர் மீண்டும் வெளியிட்டார். பல ஆண்டுகளுக்குப் பின்னர், 2014-இல் நான் மறுபதிப்பாக வெளியிட்டேன். அது, கடவுள் நம்பிக்கை தவிர, மற்ற மூடநம்பிக்கைகளை எல்லாம் கண்டனம் செய்த முதல் நூலாகும்.

**பி.பி. மண்டல் எப்போது சந்தித்தீர்கள்?**

மண்டல் குழு அமைப்பதற்கு முன்பே, 29.4.1978 - லும், 10.5.1978-லும், பி.பி. மண்டலை நேரில் சந்தித்து, பிற்பட்டோருக்கு இடஒதுக்கீடு அவசியம் ஏன் என்பதை வலியுறுத்தி விளக்கினோம். அவர்தான் குழுவின் தலைவராக நியமிக்கப்படுவார் எனத் தெரியாமல் நடந்த எதிர்பாராத நிகழ்வு இது.

**பிரதமர் மொரார்ஜி தேசாயை நீங்கள் சந்தித்து இடஒதுக்கீட்டிற்கு ஆதரவாகக் கோரிக்கை வைத்த போது கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டதை முழுமையாக விளக்குங்கள்?**

நானும், என்னைச் சார்ந்த தோழர்கள் என 20 பேர் மொரார்ஜி தேசாய் அவர்களை 25.03.1979-இல் நேரில் சந்தித்தோம்.

அப்போது நடந்த உரையாடல் பின்வருமாறு :

மொரார்ஜி தேசாய் : **தமிழ்நாட்டில் பிராமண மாணவர்களுக்குக் கல்லூரியில் இடம் கிடைக்கவில்லையாமே?**

நான் : **அது உண்மையல்ல. அப்படி இருக்குமேயானால், வருமான வரித் துறையில் 330 பேர் கெசட்டட் ஆபிசர்கள் பிராமணர்களாக உள்ளனர். அதற்கு என்ன சொல்கிறீர்கள்?**

(மொரார்ஜி சிறிது நேரம் எதுவும் பதில் சொல்லவில்லை) பின்னர்,

மொரார்ஜி : **தேர்தல் வாக்குறுதி எல்லாம் நிறைவேற்றிவிடவேண்டும் என்று நினைக்கிறீர்களா?**

நான் : **தேர்தல் அறிக்கை எழுதிய குழுவில் நீங்கள் துணைத்தலைவராக இருந்துள்ளீர்கள். அப்போது அந்த வாக்குறுதியை முட்டாள்தனமாகக் கொடுத்தீர்கள் என்று சொல்லட்டுமா?**

மொரார்ஜி : என்னை மறைமுகமாக முட்டாள் என்கிறாயா?

நான் : **இல்லை ஐயா.**

மொரார்ஜி : **பொறு. மண்டல அறிக்கை வரட்டும். நான் நியாயமாகச் செய்கிறேன். நேரு, கலேல்கர் அறிக்கையைக் குப்பைத் தொட்டியில் எறிந்ததுபோல நான் செய்யமாட்டேன்.**

அத்துடன் விவாதம் முடிவடைந்து, நாங்கள் 20 பேரும் அவரிடம் விடைபெற்றுக் கொண்டோம்.

**மத்தியில் ஆளும் இன்றைய பா.ச.க. அரசு ஒரே நாடு, ஒரே கட்சி, ஒரே மதம், ஒரே மொழி என்கின்ற ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்தை நடைமுறைப் படுத்துவதற்காக அனைத்து முயற்சிகளையும் செய்துவருகிறது. சாதி பேதமற்ற சமத்துவ சமுதாயத்திற்காகத் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தவர் நீங்கள். இந்தியாவின் இன்றைய நிலைமை பற்றித் தங்கள் கருத்து என்ன?**

காங்கிரசு, இந்திரா காந்தி அம்மையார் காலத்திலேயே பலவீனப்பட்டுவிட்டது. தமிழ்நாட்டில் காமராசர்

ஆட்சிக்குப் பிறகு காங்கிரஸ் தலைதூக்க வில்லை. பல மாநிலங்களிலும் காங்கிரசு பலம் இழந்துவிட்டது.

பாரதிய சனதா நீடித்த ஆட்சியில் இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. அதற்குப் பல காரணங்கள் உள்ளன.

திராவிட இயக்கம் மற்றும் பொதுவுடைமைக் கட்சி ஆகியவை அனைத்திந்திய இயக்கமாக மாறினால் ஒழிய, வேறு போக்கு இல்லை; பொதுவுடைமைக் கட்சி, இந்திய அளவில் எங்கேயும் வலுவாக இல்லை. ஆகையால் பொதுவுடைமைக் கட்சிகள் மற்றும் திராவிட இயக்கங்கள் அனைத்திந்திய அளவில் ஒருங்கிணைந் தால் அது இந்தியாவிற்கு மிக நல்லதாக இருக்கும்.

**மதவாத அச்சம் மேலோங்கியிருக்கும் இன்றைய சூழலில் பிரிந்து கிடக்கின்ற திராவிட இயக்கங் களை ஒன்றுபடுத்தும் எண்ணம் தங்களுக்கு உள்ளதா?**

எனக்கு 96 வயது ஆகிவிட்டது. என்னால் திராவிட இயக்கங்கள் அனைத்தையும் ஒருசேர ஒருங்கிணைக்க இயலாத சூழலில் உள்ளேன். இருப்பினும் திராவிட இயக்கங்கள் ஒன்றுசேருவது நல்லதுதான் என்பது என் எண்ணம்.

நன்றி : ''திராவிடச் சுவடுகள்'' - மலர், 15-9-2020

## மணமகள் தேவை

| | | |
|---|---|---|
| மணமகன் | : | கோ.ரா.வெற்றி |
| வயது | : | 38 |
| படிப்பு | : | சென்னை அரசு அம்பேத்கர் சட்டக் கல்லூரியில் அய்ந்தாண்டுகள் பயின்றவர். இன்னும் ஒன்பது தாள்கள் நிலுவையில் உள்ளது. |
| தொழில் | : | எழுத்தாளர் |
| தந்தை | : | கலச. இராமலிங்கம், கூட்டுறவு சார் பதிவாளர் (ஓய்வு) |
| சாதி | : | கம்மாளர் |
| தாய் | : | கோவிராமலிங்கம் சென்னை உயர்நீதிமன்ற வழக்குரைஞர் |
| சாதி | : | வன்னியர் |
| தமக்கை | : | கோ.ரா. சுந்தரகாந்தம் சென்னை உயர்நீதிமன்ற வழக்குரைஞர் திருமணமானவர் |
| சொத்து | : | சென்னையை அடுத்த மறைமலை நகரிலும் திருவண்ணாமலை மாவட்டம், கீழ்ப்பெண்ணாத்தூரிலும் வீட்டு மனைகள் உள்ளன. சொந்த ஊரில் விவசாய நிலங்கள் உள்ளன. |
| எதிர்பார்ப்பு | : | மணமகனுக்கு தகுந்த மணமகள் வேண்டும். |
| தொடர்புக்கு | : | 98405 94270 |




## நூல் அறிமுகம்

நூல் : **காஷ்மீர் -ஒரு வழிப்போக்கனின் பயணக் குறிப்புகள்..!**

ஆசிரியர் : **''ஊடகச் செம்மல்'' பவா சமத்துவன்**

பயணக் குறிப்பு எழுதுபவர் கள் அந்த ஊரின் அழகை-வளத் தை-பனி மலைகளை - பழத் தோட்டங்களை வருணிப்பார்கள்.

**ஆனால், நண்பர் பவா சமத்துவன் அதைச் செய்யவில்லை.**

**ஏனெனில், காஷ்மீர் என்பது மண்ணும் மலை களும் அல்ல. அதில் வாழும் மனிதர்களும் அவர்கள் பிரச்சனைகளும்தான்.**

தமிழ் மூதாட்டி அவ்வையார் கூற்றுப்படி -

''நாடா கொன்றோ
காடா கொன்றோ நிலனா கொன்றோ
மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்,
அவ்வழி நல்லை வாழிய நிலனே..!''

ஆம்..! அந்த மண்ணில் வாழும் மனிதர்களைப் பொறுத்துத்தான் அந்த மண்ணுக்குப் பெருமை.

அந்த வகையில் அந்த மனிதர்கள் பெருமைப்படுகிற மாதிரி இல்லை என்பதை, அவர்தம் ஓரிரு வார்த்தை களைக் கொண்டு காட்டிவிட்டு, ஆகவே அந்த மண்ணும் பெருமைக்குரியதாக தற்போது இல்லை என்பதை ஜனநாயக ஆர்வலராக இருந்து எழுதியிருக்கிறார் பவா சமத்துவன்.

ஒரு பயண நூலுக்குரிய விறுவிறுப்பும் சுவையும் குறையாமல், ஒரு தேசிய இனத்தின் சிக்கல்களை அதன் ஆழ அகலத்தோடு கூறியிருக்கும் பவா சமத்துவ னின் இந்த நூல் தமிழ் பயண இலக்கியத்தில் ஒரு மாறுபட்ட படைப்பு. நாம் வரவேற்க வேண்டிய முயற்சி.

**- பாலு மணிவண்ணன்**
திரைப்பட இயக்குநர் / எழுத்தாளர்

**விலை ரூ.100/-**

நூல் கிடைக்குமிடம் :

**இந்திய சமூக நீதி ஊடக மையம்**
72 / 40 ஆபீஸ் வெங்கடாசலம் தெரு, சேப்பாக்கம்,
சென்னை - 600005
தொடர்புக்கு : 044 28515051 / 9444015755



# கொள்கைவேள் குத்தூசி குருசாமி

டாக்டர் சோமாஸ்கந்தன்

அந்த நாள்களில், தொண்டை மண்டல முதலியார் சமூகத்தினரை ஒன்றரைப் பிராமணர்கள் என்றே மக்கள் எண்ணுவர், அழைப்பர். அவர்கள் வைதிக, சாதி, மத, சம்பிரதாய ஆசாரங்களைப், பிராமணர்களைவிட அரை மடங்கு அதிகமாகக் கடைப்பிடித்தார்கள் என்பதால் அவ்விதம் எண்ணப்பட்டனர், அழைக்கப்பட்டனர்.

அத்தகைய சைவமரபில் தோன்றிய ஒருவர், சிறுவயது முதல் சைவத் திருமேனியாகத் தலையில் கட்டுக்குடுமியுடனும், நெற்றியில் திரு நீற்றுப் பட்டையுடனும், கழுத்தில் உருத்திராட்சக் கொட்டையுடனும் தோற்றமளித்தார். சைவத் தமிழ் கற்று, சைவமும் தமிழும் இணைந்து வளர்ந்தவர். கல்லூரியில் கால் பதித்தபோதும் அதே சைவக் கோலத்தோடும் கையில் தேவார, திருவாசக ஏடுகளுடனும் காட்சியளித்தார்.

பழுத்த வைதிகராகவும், கதர் அணியும் காந்தியவாதியாகவும் கல்லூரி மாணவப் பருவத்தைத் தொடங்கிய அந்த இளைஞர், மெல்ல மெல்லப் பகுத்தறிவாளராக, சுயமரியாதை இயக்கத்தின்மீது பற்றுக்கொண்டவராகக் கல்லூரியைவிட்டு வெளியேறினார். அந்த இளைஞர் யார்? அவர்தான் தோழர் குத்தூசி சா. குருசாமி.

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டத்திலுள்ள, குருவிக்கரம்பை என்னும் சிற்றூரில், சாமிநாத முதலியார், குப்பு அம்மாள் இணையருக்கு, 1906ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 23ஆம் நாள் குருசாமி பிறந்தார்.

திருவாரூரில் தொடக்கப் பள்ளியில் கல்வியைத் தொடங்கினார். உயர்நிலைப் படிப்பைத் திருவாரூர் கழக உயர்நிலைப் பள்ளியில் தொடர்ந்தார். அந்தப் பள்ளி இன்று வடபாதிமங்கலம் சோமசுந்தரம் உயர்நிலைப் பள்ளி என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அந்தக் கழக உயர்நிலைப்பள்ளியில்தான் இக் கட்டுரையாளர் பயின்றுள்ளார். கட்டுரையாளரின் தந்தையார் கமலத் தியாகராஜனும், குருசாமியும் அதே பள்ளியில் பயின்றுள்ளனர். இருவரும் நெருங்கிய நண்பர்களாய் இருந்துள்ளனர்.

திருவாரூர் சைவத் திருத்தலம்; ஆதலால் அவ்வூரில் நாள் தவறாமல் பன்னிரு திருமுறை சொற்பொழிவுகள் நடைபெற்ற வண்ணமிருக்கும்; தேவாரப் பண்கள் இசைக்கப்பட்ட வண்ணமிருக்கும். தேவார இசைக் குழுவில் குருசாமியும் கலந்துகொண்டு தேவாரப் பண்களை இசைப்பார். ஆதலால், குருசாமியின் உள்ளத்தில் சைவ சமயக் கோட்பாடுகள் ஆழமாக வேர்விட்டுப் பதிந்திருந்தன. திருவாரூரில் எண்கண் வெங்கடாசல முதலியார் என்பவர் கம்பராமாயணத்தில் ஆழங்காற்பட்ட புலமை மிக்கவர்; கம்பராமாயண இசைச் சொற்பொழிவுகள் அடிக்கடி நிகழ்த்துவார். அந்த உரைகளைக் கேட்டு குருசாமியும் கம்பராமாயணத்தில் நன்குத் தேர்ச்சி பெற்றார்.

1924ஆம் ஆண்டு, திருச்சி தேசியக் கல்லூரியில் இடைநிலை வகுப்பில் சேர்ந்து பயின்றார். கல்லூரியிலும் அவர் சைவத் திருக்கோலத்துடன் வாழ்ந்தார்.

அவர், திருச்சி தேசியக் கல்லூரியில் பயின்ற காலம், காங்கிரசு இயக்கம் ஆங்கில அரசை எதிர்த்துப் போரிட்ட காலம்; வைக்கம் போராட்டம் நிகழ்ந்த காலம் ஆகும். அந்த வரலாற்று நிகழ்வுகள் குருசாமியின் உள்ளத்தில் புதிய சிந்தனைகளை ஊட்டின; வைதிகக் குருசாமியை காந்தியவாதியாக மாற்றின. குருசாமி மாணவர் தேசிய இயக்கத்தில் இணைந்தார். காந்தியடிகள், பெரியார், திரு.வி.க போன்றோரின் சொற்பொழிவுகளும், திரு.வி.க-வின் எழுத்து நடையும் குருசாமியின் கருத்தைக் கவர்ந்தன. அதேபோன்று, மேட்டூர் அணை கட்டுதற்குத் தக்க இடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்த பொறியியல் அறிஞர் பா.வே. மாணிக்க நாயக்கர் பேச்சும் எழுத்தும் அவரை மிகவும் கவர்ந்தன.

1925ஆம் ஆண்டு காந்தியடிகள், தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். குருசாமி மேற்கொண்ட முயற்சியின் பயனாய் காந்தியடிகள் தேசியக் கல்லூரிக்கு வந்துற்றார். கல்லூரி நிர்வாகத்தின் சார்பில் வரவேற்பளிக்கப்பட்டது. வரவேற்புரை சமற்கிருதத்தில் அமைந்திருந்தது. காந்தியடிகள் ஏற்புரை வழங்கியபோது, தனக்குச் சமற்கிருதத்தில் வரவேற்புரை வழங்கியதை வன்மையாகக் கண்டித்தார். எனக்குப் படித்த வரவேற்புரையை எத்தனைப் பேர் புரிந்துகொண்டிருக்கிறீர்கள்? கை தூக்குங்கள். பார்க்கலாம்! என்றார். அந்த வரவேற்புரையை எழுதிக்கொடுத்த சமற்கிருதப் பண்டிதர் ஒருவரே கை தூக்கினார். அதைக் கண்ட காந்தியடிகள், உங்களுக்கு வெட்கமாக இல்லை? உங்கள் தாய்மொழியான தமிழில் ஏன் வரவேற்புரையை அளித்திருக்கக் கூடாது? என்று கேட்டார். அருகில் அமர்ந்திருந்த குருசாமி 'ஹியர்','ஹியர்' என்று உரக்கக் கத்தினார். காந்தியடிகள் சினத்துடன் குருசாமியை நோக்கி, இது அதைவிட மோசமானது, என்று புகன்றார். இந்நிகழ்வு, குருசாமியின் துணிவிற்கும், மொழி உணர்வுக்கும் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

இந்தக் காலத்தில், தமிழ்நாட்டுக் காங்கிரசு இயக்கத்தில் பிராமணர் - பிராமணரல்லாதார் என்ற உணர்வு தலை தூக்கியிருந்தது. அதற்குக் காரணமாகக் காங்கிரசில் அந்நாளில் பிராமணர் ஆதிக்கமே நிலைகொண்டிருந்தது. இந் நிலையினைப் பெரியார் கடுமையாக எதிர்த்து வந்துள்ளார். சேரன்மாதேவி குருகுலத்தில் வ.வே.சு ஐயர் வருண வேறுபாட்டிற்குத் துணையாக, ஆதரவாக இருந்துள்ளார். குருகுலத்தின் வருணாசிரம ஆதரவுப் போக்கினைப் பெரியார் வன்மையாக எதிர்த்தார்.

இவற்றின் விளைவாக 1925 நவம்பர் திங்களில் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மாநாட்டில் பெரும் பிளவு ஏற்பட்டது. பெரியார், எஸ். இராமநாதன் ஆகிய இருவருடன் பலர் காங்கிரசை விட்டு விலகினர்.

**சுயமரியாதைச் சங்கம் தோற்றம் :**

பெரியாரும், எஸ்.இராமநாதனும், தமிழரின் வளர்ச்சிக்காகப் போராடுவது, சமுதாயச் சீர்திருத்தம் செய்வது, சாதி-மத வேறுபாட்டை நீக்குவது, மூடப்பழக்க வழக்கங்களை ஒழிப்பது போன்ற பல கொள்கைகளைக் கொண்ட சுயமரியாதைச் சங்கத்தைத் தோற்றுவித்தனர். இந்தக் கொள்கைகளைப் பரப்புதற்கென்று ''குடிஅரசு'' இதழைத் தொடங்கினார் பெரியார்.

கல்லூரி மாணவர் குருசாமி, தமிழகத்தின் அரசியல், சமுதாய நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனிக்கலானார். ''குடிஅரசு'' இதழின் தொடர் வாசகரானார். வைதிகக் குருசாமி மெல்லமெல்ல பகுத்தறிவாளர் குருசாமியாக மாறினார். பூவாளூர் பொன்னம்பலனாரின் நட்பும் கிட்டியது. குருசாமி சுயமரியாதை இயக்கத்தில் இணைந்தார்.

**பெரியார் ஈ.வெ.ரா.வுடன் சந்திப்பு :**

1928 மே பிற்பகுதியில், பூவாளூர் பொன்னம்பலனார், குருசாமியை, ஈரோட்டில் பெரியாருக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

பெரியார் : வாங்க என்றார்.

இளைஞனாக உள்ள தன்னை ''வா!'' என்று ஒருமையில் அழைக்காமல் ''வாங்க!'' என்று மரியாதையுடன் அழைத்த பெரியாரின் பண்பு, குருசாமியின் உள்ளத்தை மிகவும் கவர்ந்துவிட்டது.

பெரியார் : நீங்க எதுவரை படிச்சிருக்கீங்க?

குருசாமி : பி.ஏ பொருளாதாரம்; இறுதித் தேர்வு எழுதியுள்ளேன்.

பெரியார் : இப்போ என்ன செய்றீங்க?

குருசாமி : சும்மாதான் இருக்கேன்.

பெரியார் : அப்பா, அம்மா என்ன செய்றாங்க?

குருசாமி : இருவரும் இல்லை. பல ஆண்டுகளுக்கு முன்பே காலமாகிவிட்டார்கள்.

பெரியார் : அப்போ, எப்படிப் படிச்சிங்க?

குருசாமி : அத்தை படிக்க வச்சாங்க.

பெரியார் : குடிஅரசு எவ்வளவு நாளா படிக்கிறீங்க?

குருசாமி : ஆரம்பத்திலிருந்தே படிக்கிறேன்.

பெரியார் : கொள்கை பிடிச்சிருக்குங்களா?

குருசாமி : பிடிச்சிருக்குங்க.

பெரியார் : இங்கேயே தங்கி நம்ப வேலையைக் கவனிக்கிறிங்களா?

குருசாமி : கவனிக்கிறேங்க.

இதன்பின் குருசாமி ஈரோட்டில் தங்கி இயக்கப் பணிகளில் ஈடுபடத் தொடங்கினார். பெரியாரைச் சந்தித்தது குறித்து குருசாமி பிற்காலத்தில், பாஸ்வெல் ஜான்சனைச் சந்தித்தபோது, பாஸ்வெல்லுக்கு ஏற்பட்ட உணர்வு தனக்கும் ஏற்பட்டது, என்று கூறியுள்ளார்.

1929, சூலை 20, 21 நாள்களில் நடைபெற்ற நெல்லை மாவட்ட இரண்டாவது சுயமரியாதை மாநாட்டில், மதம், கடவுள், ஆகியவற்றை எதிர்த்து நாத்திகப் பரப்புரை நிகழ்த்தத் தீர்மானிக்கப்பட்டது.

அந்த நெல்லை மாவட்ட இரண்டாவது சுயமரியாதை மாநாட்டில் பேசிய தோழர் குருசாமி, ''சாதியை ஒழிப்பதற்குக் கலப்புத் திருமணம் ஒன்றுதான் வழி'' என்றும், ''கலப்புத் திருமணத்தைத் தவிர வேறு எந்த முறையினாலும் சாதி ஒழியாது'' என்றும் உரைத்தார். ''சாதிக் கொடுமையை எதிர்த்துப் போராடும் சமூகச் சீர்திருத்தவாதியே அரசியல்வாதியைவிட ஆயிரம் பங்கு துணிச்சல் உள்ளவர்'' என்றும் பேசினார்.

பேசிவிட்டுப், பேசிய பேச்சினை அடுத்த விநாடியே மறந்துவிடும் மனிதரல்லர் தோழர் குருசாமி. கலப்புத் திருமணம் என்பது அவருக்கு உயிர்க் கோட்பாடாயிற்று, அக் கொள்கையில் உறுதியாய் நின்றார்.

இதனை அறிந்த மூவாலூர் இராமாமிர்தம் அம்மையார், சென்னை ஜியார்ஜ் டவுனில் வசித்துவந்த வயலின் (ஃபிடில்) இசைக் கலைஞர், திருவாரூர் டி. சுப்ரமணியப் பிள்ளையின் முதல்மகள் குஞ்சிதத்தைத் தோழர் குருசாமிக்கு மணமுடிக்கலாம் என்று பெரியாரிடம் தெரிவித்தார். அப்பொழுது தோழர் குஞ்சிதம் இராணி மேரிக் கல்லூரியில் இளங்கலை பட்டப்படிப்பு படித்துக் கொண்டிருந்தார்.

பின்னர், 1929 டிசம்பர் 8ஆம் நாள் ஈரோட்டில் பெரியார் இல்லத்தில் குருசாமி-குஞ்சிதம் கலப்புத் திருமணம் நடைபெற்றது.

குஞ்சிதம்-குருசாமி இருவரும் கற்றறிந்தவர்கள், மனத்தாலும் கொள்கையாலும் ஒன்றுபட்டவர்கள். பகுத்தறிவாளர் பெட்ரண்டு ரஸ்ஸல், கணவன் மனைவி

உறவு பற்றிக் கூறியதற்கிணங்க இவ்விருவரும் செம்மையுடன் வாழ்ந்தனர்.

பெட்ரண்டு ரஸ்ஸல் கணவன்-மனைவி குறித்து : "இருவருக்குமிடையே முழுமையான சமத்துவ உணர்ச்சியிருக்கவேண்டும். ஒருவர் உரிமையில் ஒருவர் தலையிடக்கூடாது. அப்பழுக்கில்லாத நெருக்கமும், உள்ள ஒருமைப்பாடும் இருக்க வேண்டும். வாழ்க்கையில் ஒரே தன்மைத்தான குறிக்கோள் இருக்க வேண்டும்" என்பார்.

இத் தன்மைத்தானதுதான் குஞ்சிதம்-குருசாமி வாழ்வியல் அறம்.

**சிந்தனைச் சிற்பி சிங்காரவேலருடன் நட்பு :**

இந்தியாவின் முதல் பொதுவுடைமை இயக்கத் தோழர், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர். 1923இல் சென்னையில் விவசாயத் தொழிலாளர் இயக்கத்தைத் தோற்றுவித்து, முதன்முறையாக மேநாளைக் கொண்டாடியபோது இளைஞர் குருசாமியும் அதில் பங்கேற்றார்.

அவரின் தோழமையால் குருசாமியின்பால் மார்க்சிய - பொதுவுடைமைக் கருத்துகள் ஆக்கம் பெற்றன. "குடிஅரசு" இதழ்களில் சிங்காரவேலரின் கட்டுரைகள் குருசாமியால் தொடர்ந்து வெளியிடப்பட்டன; அவரின் கட்டுரைகள் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளுக்கு உரமூட்டின, வளம் சேர்த்தன. குஞ்சிதம் - குருசாமி இருவரும், சிங்காரவேலரின் இல்லத்தில் அமைந்திருந்த மார்க்சிஸ்டு-லெனினிஸ்ட் நூலகத்தை முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டனர். அவ்விணையர் மீது மிகுந்த பற்றும் பாசமும் கொண்டிருந்தார் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர். 1935ஆம் ஆண்டு குருசாமி முன்மொழிந்த தமிழ்மொழி எழுத்துச் சீர்திருத்தத்தை மிகவும் வரவேற்றுப் பாராட்டினார், சிங்காரவேலர்.

**"புதுவை முரசும்" புரட்சிப்பாவேந்தர் நட்பும் :**

புதுவை முரசில், புரட்சிப்பாவேந்தர் பாரதிதாசன், கவிதைகள், கட்டுரைகள் தொடர்ந்து எழுதி வந்துள்ளார். இதனால் குருசாமியும் பாவேந்தரும் நெருங்கிய நண்பர்களாயினர். பாரதிதாசனுடனான ஆழ்ந்த நட்பின் விளைவாக அவரின் முதல் கவிதைத் தொகுதியைப் பதிப்பிக்கும் பொறுப்பைக் குருசாமி ஏற்றார். குருசாமியின் மனைவி குஞ்சிதம் அம்மையார், முதல் கவிதைத் தொகுப்பினை 1938 சனவரி 1-ஆம் நாள் வெளியிட்டார்.

**முதல் பொதுத் தேர்தல் :**

1951, அக்டோபர் திங்கள் 21ஆம் நாள் ஐக்கிய முற்பொக்கு முன்னணி என்ற பொதுவுடைமைக் கூட்டணி உருவாயிற்று. அந்தத் தேர்தலில் திராவிடர் கழகம், அந்தப் பொதுவுடைமைக் கூட்டணியினர் வெற்றி பெறவும், காங்கிரசு தோல்வியினைத் தழுவிடவுமான சூழலைத் தங்களின் கடுமையான பரப்புரையின் மூலம் உண்டாக்கினர். காங்கிரசு தேர்தலில் வீழ்ச்சியுற்ற போதும், சிறுசிறு அரசியல் அமைப்புகளின் துணை கொண்டு இராஜாஜி ஆட்சிப்பொறுப்பை ஏற்றார். இதனைக் கண்டித்து "கொல்லைப்புற வழியில் ஆச்சாரியார்" என்று கடுமையான விமர்சனத்தை "விடுதலையில்" குருசாமி எழுதினார். தேர்தலைச் சந்திக்காமல் முதல்வர் பொறுப்பினை ஏற்றிடும் அரசியல் வாதிகளைச் சாடிடும் சொல்லாட்சியாக "கொல்லைப்புற வழி" என்ற சொற்கள் பிற்காலத்தில் வழங்கலாயிற்று.

1952 முதல் 1960 வரை திராவிடர்கழகம் மேற்கொண்ட போராட்டங்களில் குருசாமி கலந்துகொண்டார்; 13 முறைகள் சிறைத் தண்டனையும் பெற்றார்

1963ஆம் ஆண்டு சூன் 28ஆம் நாள் மதுரை கோயில் குடமுழுக்கு விழாவில் குடிஅரசுத் தலைவர் இராதாகிருஷ்ணன் கலந்துகொள்ள இருந்தார். இதனைக் கண்டித்து, "குடிஅரசுத் தலைவர் நாட்டின் முதல் குடிமகன்; நாட்டின் அத்தனை மக்களுக்கும் பொதுவான தொரு ஆட்சித் தலைவர்; மதுரை மீனாட்சி அம்மன் கோயிலின் குடமுழக்குத் திருப்பணிக்காக வருவது ஏற்புடையதன்று. இந்து மத நம்பிக்கை இல்லாத முசுலிம்கள், கிறித்தவர்கள், பவுத்தர்கள், சமணர்கள், சீக்கியர்கள், பகுத்தறிவாளர்கள், நாத்திகர்கள் ஆகியோர் மக்கள்தொகையில் சரிபாதி ஆவர். அம் மக்கள் வேதனைப்படுவர்; அவர்கள் மனம் புண்படும்" என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை விண்ணப்பம் (ரிட்மனு) தாக்கல் செய்தார். அதோடு, "குடியரசுத் தலைவர் அந் நிகழ்ச்சியில் கலந்து கொண்டால் சுயமரியாதை இயக்கத்தினர் மறியலில் ஈடுபடுவர்" என்று குடியரசுத் தலைவருக்குக் கடிதம் எழுதினார், குருசாமி. குருசாமியின் கடிதம் கண்டவுடன் குடியரசுத் தலைவர் மதுரைக்கு வருவதை விலக்கிக்கொண்டார்.

1965ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 11ஆம் நாள் கடலூரில் சுயமரியாதைக் கழக மத்தியக் குழுக் கூட்டத்திற்கு ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தபோது, யாரும் எதிர்பாராத நிலையில் அந்தக் கொள்கைவேள் தோழர் குருசாமி பகல் ஒருமணிக்கு, மாரடைப்பால் மரணம் எய்தினார்.

தோழர் குருசாமி தம் வாழ்நாளில் கண்டதும், கொண்டதும் ஒரே தலைவர் - பெரியார்தான். அவர் காட்டிய பகுத்தறிவுப் பாதையில் தன் இறுதிவரை இணைந்து பயணித்தவர் தோழர் குத்தூசி குருசாமி ஆவார். **பகுத்தறிவுக் கொள்கையை உயிரெனக் கொண்டு வாழ்ந்து மறைந்த அந்த மாத் தமிழரை என்றும் எண்ணுவோம்; அவர் காட்டிய வழியே நல்வழியென்று ஏற்போம்.**

# தமிழ்நாடு தன் மண்ணை இழந்தது
# இந்தியத்தாலா? திராவிடத்தாலா?

வாலாசா வல்லவன்

உண்மையில் எல்லைப் போராட்டம் நடத்தியவர்கள் அதை ஒரு தேசிய இன விடுதலைப் போராட்டமாக நடத்தவில்லை. ம.பொ.சி. வடக்கெல்லைப் போராட்டம் நடத்தியபோது, தமிழரசுக் கழகம் என்ற பெயர் வைத்துக் கொண்டிருந்தாலும் 1954இல் காமராசர் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளும் வரையில் காங்கிரசுக் கட்சியில்தான் இருந்தார். காங்கிரசுக் கட்சியை விட்டு வெளியே வந்த பிறகும் கூட அவருடைய சிந்தனைப் போக்கு இந்திய தேசியத்திலேயே குடிகொண்டிருந்தது. அதற்கு அவருடைய எனது போராட்டம் நூலே சாட்சி.

வடகெல்லை மீட்பு குழுவின் முதல் மாநாட்டிற்கு பெரியார் வாழ்த்து செய்தி அனுப்பினார் (செங்கோல் 11-1-53), நகரியில் நடைபெற்ற தமிழர் மாநாட்டுக்கும் பெரியார் வாழ்த்து. (செங்கோல் 15-2-53).

தெற்கெல்லைப் போராட்டம் நடத்திய மார்ஷல் நேசமணி திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரசு என்ற பெயரிலேயே அமைப்பை வைத்திருந்தார். கொச்சி, திருவிதாங்கூரிலுள்ள "தமிழ்ப் பகுதிகளைத் தமிழ் நாட்டுடன் இணைப்பது மட்டுமே எங்கள் குறிக்கோள். மற்றபடி காங்கிரசுக்கும் எங்களுக்கும் கொள்கை வேறுபாடு கிடையாது" என்று வெளிப்படையாக அறிக்கை விட்டவர் (நம் நாடு 1-9-54). எல்லைப்போராட்டம் நடத்தியவர்கள் அடிப்படையில் இந்தியத் தேசிய வாதிகளாகவே இருந்தார்கள். நேசமணி 26-1-1957இல் திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரசை கலைத்துவிட்டு, இந்தியத் தேசிய காங்கிரசில் சேர்ந்தார். வடக்கெல்லைப் போராட்டத் தளபதி கே. விநாயகம் 1952 முதல் பிரஜா சோசலிடு கட்சி சட்ட மன்ற உறுப்பினராக இருந்தவர். 1957 இல் இந்தியத் தேசியக் காங்கிரசில் சேர்ந்தார். இருவரும் 1957 இல் காங்கிரசு கட்சி சட்ட மன்ற உறுப்பினர் ஆனார்கள். ம.பொ.சி கடைசியாகக் காங்கிரசில் சேர்ந்தார். ஆக இவர்களில் யாரும் தமிழ் இன விடு தலைக்கான உண்மையான போராளிகள் அல்லர்.

இனி எல்லைப் போராட்டங்களைக் குறித்து சுருக்க மாகப் பார்ப்போம்.

ஆந்திர பிரிவினைக்காக பிரதமர் நேரு 1953இல் அமைத்த நீதிபதி வாஞ்சு குழு, தன் பரிந்துரையில், சென்னை ஆந்திராவின் தற்காலிக தலைநகராக 3-5 வருடங்கள் இருக்க வேண்டும். (அறிக்கை பக் 6).

ஆந்திராவின் உயர்நீதி மன்றம் 5 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரை சென்னையில் இருக்கவேண்டும். (அறிக்கை பக் 8)

சென்னையில் உள்ள மருத்துவக் கல்லூரிகளிலும் பொறியியல் கல்லூரிகளிலும் ஆந்திர மாணவர்களுக்கு 36சதவீத இடங்களை 25 ஆண்டுகளுக்கு ஒதுக்கித் தரவேண்டும். (அறிக்கை பக் 12-13) பிரிந்து போகும் ஆந்திர மாநிலம் புதிய தலைநகரை உருவாக்குவதற்குச் சென்னை மாகாண அரசு இரண்டரை கோடி ரூபாய் தர வேண்டும். (அறிக்கை பக் 26) என்பவை வாஞ்சிக் குழுவின் பரிந்துரைகளாகும். தமிழகத்தின் வடக்கெல் லையான சித்தூரையும் திருப்பதியையும் இக்குழுதான் ஆந்திராவிற்கு அளித்தது.

வாஞ்சுவின் பரிந்துரைகளைக் கண்டித்துத் தமிழ்நாடே கொதித்து எழுந்தது.

பிரதமர் நேரு 19-12-1952இல் நாடாளுமன்றத்தில் தகராறுக்கு இடமில்லாத 12 மாவட்டங்களைக் கொண்டு ஆந்திரம் அமையும் என்று அறிவித்தார். அவரால்தான் வடக்கெல்லை ஆந்திராவுக்கு சொந்தமாகி போனது. 14.7.53இல் ஆந்திர பிரிவினை மசோதாவை சட்டப் பேரவையில் தாக்கல் செய்த இராசாசியும், சித்தூரையும் திருப்பதியையும் திருத்தணிகையையும் ஆந்திராவுக்கே சேர்த்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அதை மா.பொ.சி. கண்டிக்கவில்லை. முதல்வருக்கு சூழ்நிலை சந்தர்ப்பம்; இதைப் பெரிது படுத்த வேண்டாம் என்று 21-7-53 அன்று சட்டமன்ற மேலவையில் பேசினார்.

ஆந்திரா பிரச்சினை குறித்துத் திராவிடர் கழக மத்திய நிர்வாகக்குழு 11-1-1953இல் நிறை வேற்றிய தீர்மானம்:

(எ) ஆந்திர நாடு பிரிவினை விஷயத்தில் ஆந்திரர்கள் பிடிவாதமாக இருப்பதால் ஆந்திரநாட்டைப் பிரிக்கும் விஷயத்தில் காலதாமதம் செய்யாமல் உடனடியாகப் பிரித்து விடவேண்டு மென்று இக்கமிட்டி தெரிவித்துக் கொள்ளுகிறது.

அப்படிப் பிரிப்பதில் ஆந்திரநாட்டினரிலேயே சிலர் பிரிவினைக்கு முட்டுக்கட்டை போடுகிற மாதிரியில் தாங்கள் பிரிந்துபோன பின்பும் எஞ்சியுள்ள சென்னை நாட்டில் தங்களுக்குச் சில உரிமையோ சலுகையோ அதாவது பொது நீதிமன்றம், பொது கவர்னர் முதலியவை சென்னையிலிருக்க வேண்டுமென்று கேட்பதையும், சென்னையைத் தற்காலிகத் தலைநகரமாக இருக்க இடம் தரவேண்டுமென்பதையும், இக்கூட்டம் கண்டிப்பதுடன், அப்படிப்பட்ட உரிமைக்கோ சலுகை முதலியவற்றிற்கோ மத்திய சர்க்கார் இடம் கொடுக்குமானால், தமிழர்களின் அதிருப்திக்கும், கிளர்ச்சிக்கும் ஆளாகவேண்டி நேரிடு மென்று மத்திய சர்க்காருக்கு எச்சரிக்கை செய்கின்றது.

இதே சமயத்தில் திராவிடர் கழகம் இராஜ்ய பிரிவினையைப் பற்றிய தனது கருத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது. அதாவது, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழி நாடுகள் சேர்ந்த சென்னை ராஜ்யம் மத்திய (இந்திய யூனியன்) ஆட்சியின் எவ்வித சம்பந்தமுமில்லாத தனிச் சுதந்திர ராஜ்யமாகப் பிரிக்கப்படவேண்டும் என்பதே அதன் முடிந்த கருத்தாகும். இந்த நிலையில் சென்னை இராஜ்ஜியத்திலிருந்து எந்த மொழி நாடு பிரிந்து போனாலும் மீதியுள்ள மொழி நாடு அல்லது நாடுகள் பூரண சுதந்திரமுள்ள தனி அரசு நாடாக ஆக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்து கொண்டு இருக்கிறதுடன், இந்த கொள்கைக்குக் கட்டுப்பட்டுப் பிரிவினைக் கிளர்ச்சி செய்யும் எந்த மொழி நாட்டாருடனும் யாருடனும் திராவிடர் கழகம் கூடுமான அளவு ஒத்துழைக்க முன்வரும் என்று தெரிவித்துக் கொள்கின்றது.

(பி) எந்தக் காரணத்தைக் கொண்டும் மத்திய அரசாங்கத்தார் சென்னை நகரத்தையும் அதைச் சேர்ந்த எந்த பாகத்தையும் சேர்த்து கமிஷனர் இராஜ்யமாக (Commissioner State) ஆக்கக் கூடாதென்றும் இக்கமிட்டி வற்புறுத்தித் தெரிவித்துக் கொள்ளுகிறது.

(சி) பிரிட்டிஷ் ஆட்சி இருந்த காலத்தில் அவர்கள் நிர்வாக வசதிக்கு ஆக அமைத்துக் கொள்ளப்பட்ட ஜில்லா எல்லையில் தமிழ் பெரும்பான்மையாகப் பேசப்படும் பிரதேசத்தையும், தெலுங்கு பெரும்பான்மையாகப் பேசப்படும் பிரதேசத்தையும் ஒன்றாக ஒரே ஜில்லாவாக அமைத்திருந்தினர். சித்துர் ஜில்லாவில் திருத்தணி முதலிய பெரும்பாலாக தமிழ் பேசும் மக்களடங்கிய பிரதேசங்கள் இருப்பதனால் இப்போது மொழியை அடிப்படையாகக் கொண்ட நாடே பிரிக்கப்படுவதனால், ஒரு மொழி பேசும் நாட்டுடன் வேறு மொழி பேசும் பெரும்பான்மையான மக்களைக் கொண்ட பிரதேசம் சேர்க்கப்படுவதென்பது மொழிவாரிப் பிரிவினைத் தத்துவத்திற்கே எதிர்ப்பானது என்பதோடு, வேறு மொழி பேசும் மக்களுக்கும் இடையூறானது. ஆதலால் இந்த மொழிவாரி நாடு பிரிவினையில் சித்துர் ஜில்லாவிலுள்ள தமிழ் மொழி அதிகமாகப் பேசும் பிரதேசத்தைக் கண்டிப்பாகத் தமிழ் நாட்டுடன் சேர்க்க வேண்டுமென்று இக்கமிட்டி தீர்மானிக்கிறது. (விடுதலை 12-1-1953)

1-2-53 ஆம் தேதி தமிழ் முலிசும்கள் சார்பில் சென்னை கடற்கரையில் நடைபெற்ற "சென்னை தமிழருக்கே" என்ற சர்வக்கட்சிக் கூட்டத்தில் இலட்சக் கணக்கான மக்கள் மத்தியில் பேசிய பெரியார்: 'எங்களுடைய கொள்கைப்படி நாங்கள் பிரிவினை கேட்பது எல்லாம் இந்த மாதிரியான பிரிவினை அல்ல; நாடு பிரிய வேண்டும். எப்படிப்பட்ட பிரிவினை என்றால், பர்மா பிரிந்தது போல... அந்நியர் சுரண்டலற்ற தனி நாடு வேண்டும் என்பதுதான். ஆனால், பிரிய வேண்டுமென்பவர்களை சந்தோஷமாகப் பிரித்து அனுப்பிவிடுவோம். சுயநலக்காரர்களோடு சண்டை போட்டுக் கொண்டிருப்பதைவிட, வெளியே அனுப்பிவிடுவது நல்லது.

மற்றபடி இரண்டு, மூன்று பிரச்சனைகள் சொல்லப் படுகின்றன; அதாவது ஆந்திரா ஐ கோர்ட், சர்க்கார் காரியாலயம், தலைநகர் முதலியவைகள் எல்லாம் சென்னையில் கொஞ்ச நாளைக்காவது இருக்க வேண்டும் என்கிறார்கள். எப்போது போகிறோம் என்று போகிறார்களோ, அவர்களுக்கு இங்கு என்ன வேலை? ஒரு வீட்டில் பாகப்பிரிவினை எல்லாம் செய்யப்பட்ட பிறகு 'சமையல் மட்டும் கொஞ்ச நாளைக்கு இங்கே செய்துகொள்கிறேன்' என்பது என்ன நியாயம்?

அடுத்தபடியாக கமிஷனர் மாகாணமாக சென்னையை ஆக்கவேண்டும் என்று ஆந்திரர்கள் சொல்வதைப் பற்றிக் கூறவேண்டுமானால், மடத்தை விட்டுப் போகின்ற ஆண்டிக்கு நந்தவனத்தைப் பற்றி என்ன கவலை? மற்றும் நஷ்ட ஈடு கேட்பது என்பதும் அப்படித்தான் நியாயமில்லாத கோரிக் கையாகும்" என்று ஆந்திரர்களைக் கண்டித்துப் பேசினார். (விடுதலை 3-2-53)

சென்னை நகர மேயர் தி.செங்கல்வராயன், முதலமைச்சர் காமராசரைக் கலந்து ஆலோசித்து, அனைத்துக்கட்சிக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார். முதலமைச்சர் இராசாசி அக்கூட்டத்திற்குப் பெரியாரையும் அழைக்கும்படி கூறினார். பெரியாருக்கு மட்டும்தான் நேரு பயப்படுவார் என்பது இராசாசிக்கு நன்கு தெரியும். அக்கூட்டத்திற்குப் பெரியாரை அழைக்க மேயர் செங்கல்வராயனும் சில காங்கிரசு கட்சியினரும் வந்தனர். பெரியார் அக்கூட்டத்தில் கலந்து கொண்டு இரண்டு இலட்சம் மக்களிடையே எழுச்சியுரை ஆற்றினார். ஆந்திரர்களின் அக்கிரமத்திற்கு முடிவுகட்ட ஒரு நாள் கடையடைப்பும் வேலைநிறுத்தமும் செய்ய வேண்டும் என்றும் வேண்டுகோள்விடுத்தார். அவ்வேண்டுகோளை காங்கிரசாரோ, ம.பொ.சி.யின் தமிழரசு கழகமோ ஏற்றுக்கொள்ளவில்லை. அக்கூட்டத்தில் எம்.பக்தவச்சலம், எ.என். கரையாளர், பி.டி. ராசன், மீனாம்பாள் சிவராஜ், ம.பொ.சி. உட்படப் பலர் பேசினர். மேயர் நன்றி கூறினார். (விடுதலை 17-2-1953).

வாஞ்சு அறிக்கை வெளிவருவதற்கு முன்பிருந்தே- அதன் செய்திகள் கசிய ஆரம்பித்த காலம் முதலே விடுதலையில் அதன் ஆசிரியர் குத்தூசி சா.குருசாமி அவர்கள் மத்திய அரசைக் கண்டித்தும், ஆந்திரர்களைக் கண்டித்தும், வாஞ்சு அறிக்கையைக் கண்டித்தும்7-1-1953 முதல் பல தலையங்கங்கள் எழுதியுள்ளார்.

**ம.பொ.சி.யின் பொய்**

மேயர் தமது சொந்தப் பொறுப்பில் 16.3.53 அன்று திருவல்லிக்கேணி கடற்கரையில் கூட்டம் நடத்த முயன்றார்;

பெரியார் ஈ.வெ. ரா.வையும் இந்தக் கூட்டத்திற்கு அழைக்குமாறு இராசாசி கூறினார். நான் அவர்தான் சென்னை ஆந்திராவுக்குப் போனாலும் தமிழ் நாட்டிலிருந்தாலும் திராவிடத்தில் தானே இருக்கப் போகிறது என்று சொல்லிவிட்டாரே! தமிழ்நாட்டில்தான் இருக்க வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையில் நடைபெறும் இந்தக் கூட்டத்திற்கு அவர் வருவாரா? என்றேன். இந்தக் கூட்டத்தில் நாயக்கர் பேசுவதை நான் விரும்புகிறேன் என்று அவரிடம் சொல்லுங்கள் அவர் வருவார் என்று சொன்னார். (ம.பொ.சி. எனது போராட்டம் பக் 623).

இது எவ்வளவு பெரிய வரலாற்றுப் பொய்? திராவிடர் கழக மத்தியச் செயற்குழு 11.1.1953இல் சென்னை தமிழகத்திற்கே சொந்தம் தற்காலிகத் தலைநகராகக் கூட ஆந்திராவிற்குக் கொடுக்கக்கூடாது என்று கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றிய பிறகும், 1.2.53இல் சென்னை கடற்கரையில் இலட்சக்கணக்கான மக்கள் முன்னிலையில் சென்னையில் ஆந்திரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லையென்று கண்டித்துப் பேசிய பிறகும், 16.2.53 கூட்டத்திற்கு அழைக்க வந்த ம.பொ.சி இராசாசியிடம் கூறியதாக எனது போராட்டம் என்ற நூலில் எழுதியுள்ளது எவ்வளவு பெரிய வரலாற்று மோசடி!

உண்மையில் ம.பொ.சி. யின் குருநாதர் இராசாசி தான் சென்னை ஆந்திரர்களின் தற்காலிகத் தலைநகராக இருக்கவேண்டும் என்று விரும்பினார். இதோ ம.பொ.சியே கூறுகிறார்: மாநாகராட்சியின் சிறப்புக் கூட்டம் நடைபெற இருக்கும் செய்தியைப் பத்திரிகைகளில் பார்த்ததும் மேயரையும் என்னையும் இராசாசி தமது இல்லத்திற்கு அழைத்துப் பேசினார். ஆந்திர அரசுக்குத் தற்காலிகமாகக்கூட சென்னையில் இடம் தரக்கூடாது என்ற வாசகத்தை நீக்கிவிடுமாறு மேயரையும் என்னையும் இராசாசி கேட்டுக் கொண்டார். மேயர் அவர்கள் வெகு சுலபத்தில் அதற்கு இணங்கி விட்டார். நான் பிடிவாதமாக மறுத்து விட்டேன். நிபந்தனை எதுவும் இல்லாமலே ஆந்திர அரசுக்கு சென்னையில் இடம் தரத் தமிழ்நாடு காங்கிர தலைவரும் தயாராக இருப்பதை நான் அறிவேன். (ம.பொ.சி. எனது போராட்டம் பக் 632) சென்னையில் ஆந்திராவுக்கு தற்காலிகமாகக் கூடத் தலைநகரமாக இருக்க அனுமதிக்கக் கூடாது என்று சொன்ன பெரியாரைத் துரோகி என்பதும், ஆந்திரத் தலைநகர் தற்காலிகமாகச் சென்னையில் இருக்க வேண்டும் என்று சொன்ன இராசாசியைத் தலைவர் என்பதும் இராசாசியைத் தமிழ்ப் பார்ப்பனர் என்பதும் வேண்டுமென்றே பெரியார் அவரை எதிர்க்கிறார் என்பதும் எவ்வளவு பெரிய வரலாற்று மோசடி என்பதை இதன்மூலம் நன்கு அறியலாம். மேயர் அலுவலகத்தில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பெரியார் கலந்து கொண்டு ஆந்திராவின் தற்காலிகத் தலைநகராகக் கூட சென்னை இருக்கக்கூடாது என்ற தீர்மானத்தில் பெரியார் உட்பட அனைத்துக் கட்சித் தலைவர்களும் கையொப்பமிட்டு பிரதமர் நேருவுக்கு விண்ணப்பம் அனுப்பினர்.

15.2.1953 சென்னை மாவட்ட திராவிடர் கழகச் செயற்குழு 22.2.1953 அன்று சென்னைக்கு வரும் குடிஅரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத்துக்குக் கருப்புக் கொடி காட்டத் தீரமானித்தது. (விடுதலை 16.2.53) அன்றே திராவிடர் கழக மத்திய செயற்குழு கூடி, இந்தியக் குடி அரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத் சென்னைக்கு வரும் அன்றே தமிழக உரிமைப் பாதுகாப்பு நாள் தமிழகமெங்கும் கொண்டாடும்படித் தீர்மானம் நிறை வேற்றியது. (விடுதலை 16.2.53)

திட்டமிட்டபடி இராசேந்திர பிரசாத்துக்குக் குத்தூசி குருசாமி தலைமையில் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் கருப்புக்கொடி காட்டினர். காவல் துறையினரின் காட்டு மிராண்டித்தனமான தாக்குதலால் சில தி.க. தோழர்களுக்கு மண்டையும் உடைந்தது.

22.2.53 அன்று "வாஞ்சு அறிக்கைக் கண்டன நாள்" தி.க. தோழர்களால் தமிழகம் முழுவதும் கடைப் பிடிக்கப்பட்டது. தமிழ்ப் பகுதியைச் சேர்ந்த 32 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சி வேறுபாடு கருதாமல் புதுதில்லியில் 1953 மார்ச்சு 23இல் பிரதமர் நேருவைச் சந்தித்து, ஆந்திரத்தின் தற்காலிகத் தலைநகரமோ, உயர்நீதி மன்றமோ சென்னையில் இருக்கக் கூடாது என்று வலியுறுத்தினர். (விடுதலை (24-3-53)

இவ்வளவு போராட்டங்களுக்கு பிறகுதான் நேரு ஆந்திரத் தலைநகர் ஆந்திர எல்லைக்குள்ளேயே அமையும் என்றார்.

**தெற்கெல்லைப் போராட்டத்தைப் பற்றிச் சுருக்கமாகப் பார்க்கலாம்:**

இந்தியாவில் உள்ள மாநிலங்களை மொழிவழியாகப் பிரித்து அமைக்க நேருவின் தலைமையிலான இந்திய அரசு, நீதிபதி பசல் அலி தலைமையிலான குழுவை 29.12.53இல் அமைத்தது. அக்குழுவில் கே.எம். பணிக்கர் என்ற மலையாளியும், குன்சுரு என்ற உ.பி.காரரும் உறுப்பினர்களாக இருந்தனர். அக்குழு 30.9.1955இல் தங்கள் பரிந்துரையை இந்திய அரசுக்கு அளித்தது. 267பக்க அறிக்கையில், பக்81 முதல் பக்89 வரை தமிழகத்தைப் பற்றியது.

அக்குழுதான் தேவிகுளம், பீர்மேடு உள்ளிட்ட 4 தாலுக்காக்களைக் கேரளாவுக்குக் கொடுக்கவேண்டும் என்று பரிந்துரை செய்தது. மார்ஷல் நேசமணி தலைமையில் 1946 முதலே திருவாங்கூர், கொச்சி பகுதியில் உள்ள தமிழ்ப்பகுதிகளைத் தமிழ்நாட்டுடன் இணைக்க வேண்டும் என்று போராடி வந்தனர். இந்த அறிக்கை வெளிவந்தவுடன், அவர்களுடைய போராட்டமும் அதிகரித்தது; தமிழகமும் கொந்தளித்து எழுந்தது. 10.7.54 முதலே விடுதலையில் திருவாங்கூர் தமிழர் கிளர்ச்சிக்கு ஆதரவான தலையங்கள் எழுதப்பட்டு வந்தன.

தெற்கெல்லைப் போராட்டம் தொடர்பாக அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்துகொள்ள பெரியார் இசைவு. இது குறித்தும் ம.பொ.சியே கூறுகிறார்: வெளி ஜில்லாவில் சுற்றுலா செய்து கொண்டிருந்த பெரியாரை தந்தி மூலம் நான் சென்னைக்கு அழைத்தேன். அவரும் என் அழைப்புக்கு மதிப்பு கொடுத்து, சுற்றுலாவை பாதியில் நிறுத்திவிட்டு, சென்னைக்கு வந்து என்னைச் சந்தித்து உரையாடினார்... "இந்தப் பிரச்சனையில் அய்யாவை விட அக்கரையுள்ளவர்கள் யாரும் இருக்கமுடியாது. அதனால், அய்யா வீட்டில் அந்தக் கூட்டத்தை நடத்து வதையே நான் விரும்புகிறேன். அதுதான் நியாயமும் கூட" என்று கூறி, என்னைப் பெருமைப்படுத்தினார். (எனது போராட்டம், பக்.767)

21.11.1955 முதல் 24.11.1955 வரை தமிழகச் சட்டமன்றத்தில் இந்த குழுவின் அறிக்கை மீது விவாதம் நடைபெற்றது. மலையாளிகளும் இந்தியப் பொதுவு டைமைக் கட்சியினரும் தவிர எல்லோருமே தேவிகுளம் பீர்மேடு தமிழகத்துடன் இணைய வேண்டும் என்று பேசினர், தமிழக நிதியமைச்சர் சி.சுப்பிரமணியம், தேவிகுளம் பீர்மேடு தமிழகத்திற்குச் சொந்தம் என்பதை ஆதாரங்களுடன் விளக்கினார். இறுதி நாளில் நடைபெற்ற வாக்கெடுப்பில் தேவிகுளம் பீர்மேடு தமிழகத்திற்குச் சேரவேண்டுமென்ற தீர்மானத்திற்கு ஆதரவாக 122 வாக்குகளும் அதற்கு எதிராக 18 வாக்குகளும் கிடைத்தன. பின்னாளில் உச்சநீதி மன்ற நீதிபதியாக இருந்த வி.ஆர். கிருஷ்ணய்யர் உள்பட எதிர்த்து வாக்களித்தனர். தமிழகப் பொதுவுடைமைக் கட்சி உறுப்பினர்கள் ப.ஜீவானந்தம், பி.இராமமூர்த்தி, எம்.கல்யாண சுந்தரம் உட்பட 13 சட்டமன்ற உறுப்பினர்கள் நடுநிலைமை வகித்தனர். தீர்மானம் தமிழ்நாட்டுக்கு ஆதரவாக நிறைவேறியது. பொதுவுடைமைக் கட்சியினர் தெற்கெல்லைப் போராட் டத்தில் தமிழகத்திற்கு துரோகம் இழைத்தனர்.

வடக்கெல்லை பிரச்சினையிலும் இந்தியப் பொது வுடைமைக் கட்சி தமிழகத்திற்கு துரோகமே இழைத்தது. சித்தூர் ஜில்லாவும், திருப்பதியும் ஆந்திரர்களுக்கே உரியது என்று தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சி 1948 இலேயே விளக்கமாக அறிக்கை வெளியிட்டிருக்கிறது. (ஜீவா, ஜனசக்தி தலையங்கம், 26-7-1952).

தமிழகச் சட்டமன்றத் தீர்மானத்தை ஆதரித்து, விடுதலையில் தலையங்கம் எழுதினார் குத்தூசி குருசாமி (விடுதலை 25.11.1955) நேரு, பசல் அலி குழுவின் அறிக்கையை நாடாளுமன்றத்தில் விவாதத் திற்கு வைத்தார். 16.12.1955 முதல் 23.12.55வரை விவாதம் நடைபெற்றது. நேசமணியும் தமிழக நாடாளு மன்ற உறுப்பினர்களும் எவ்வளவோ எடுத்துக்கூறியும், நேரு தமிழகச் சட்டமன்றத் தீர்மானத்தைப் புறக் கணித்துத் தேவிகுளம், பீர்மேடு கேரளாவுக்கே சொந்தம் என்று தீர்மானம் நிறைவேற்றிவிட்டார்.

தமிழக முதல்வரையும், நிதிஅமைச்சர் சி.சுப்பிர மணியத்தையும் தில்லிக்கு அழைத்துத் தேவிகுளம், பீர்மேடு கேரளாவுக்குச் சொந்தம் என்று தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்றார்.

நேரு கூறியபடி, தமிழக சட்டமன்றத்தில் சி.சுப்பிர மணியம் "தேவிகுளம், பீர்மேடு கேரளாவுக்கே சொந்தம்" என்று மசோதா கொண்டு வந்தார். 28.3.56 முதல் 31.3.56 வரை நடைபெற்ற விவாதத்தில் காங்கிரசு சட்டமன்ற உறுப்பினர்கள் யாரும் விவாதத்தில் பங்கேற் கக் கூடாது என்று கொரடா உத்தரவைப் பிறப்பித்து, "இது மேலிட உத்தரவு இதைமீற முடியாது" என்று கூறித் தீர்மானத்தை வாக்கெடுப்புக்கும் விடாமலே நிறை வேற்றினர். அப்போதுதான் முதலமைச்சர், குளமாவது மேடாவது என்று சட்டமன்றத்திலேயே பேசினார்.

உண்மையான தமிழர்களின் எதிரி நேருவே என்பதை உணர்ந்த பெரியார், "மலையாளிகளைத் தமிழகத்தை விட்டு வெளியேறும் படியான கிளர்ச்சி செய்யாத வரையில் தில்லி பணியாது" என்று மதுரைப் பொதுக் கூட்டத்தில் அறிவித்தார்.(விடுதலை 18.1.56)

"தில்லி அநீதிக்கு மேல் அநீதி; தேவிகுளம் பீர்மேடு தாய்த் தமிழகத்திலிருந்து துண்டிக்கப்படுகின்றன" என்று 17.1.56 அன்று விடுதலையில் தலையங்கம் எழுதப் பட்டது. 15.2.56 அன்று, மன்னார்குடியில் பொதுக்கூட் டத்தில் பேசிய பெரியார் "பார்ப்பான், வடநாட்டான், மலை யாளி போன்ற அந்நியனெவனும் வெளியேற்றப்பட வேண்டியவனே! மலையாளிகளைத் தமிழ் நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டாமா?" என்று ஆவேசப் பட்டார்.(விடுதலை 16.2.56). ஆக தமிழகம் தன் மண்ணை இழந்தது திராவிடத்தாலா அல்லது இந்தியத் தாலா என்பதைத் தெரிந்து கொள்ளலாம். தமிழரசுக் கழகம் என்ற பெயரில் கட்சி வைத்துக் கொண்டு "நேருதான் என் தலைவர், காந்திதான் என் தலைவர், சத்தியமூர்த்திதான் என் தலைவர், இராஜாஜிதான் என் தலைவர்" என்று கூறி இந்தியத் தேசியத்திற்குக் காவடித் தூக்கிய ம.பொ.சி.தான் தமிழினத்துரோகி ஆவார். தி.மு.கவும், வடக்கு எல்லை, தெற்கு எல்லைப் போராட் டங்களில் தீவிரமாகப் பங்கெடுத்து கொண்டது. தேவி குளம், பீர்மேட்டை தமிழகத்துடன் இணைக்கக் கோரி, தி.மு.க.வினர் 110 பேர் செங்கோட்டை நீதிமன்றம் முன்பும், நாகர்கோவில் நீதிமன்றம் முன்பும் மறியல் செய்து, மூன்று மாதம் சிறையில் இருந்தனர்.(நம்நாடு, 7-8-54) ம.பொ.சி. வட எல்லைப் போராட்டத்தில் பெரியாரின் மீது பொய்யையும், புளுகையும் அவிழ்த்து விட்டதைப் போலவே தெற்கெல்லைப் போராட்டத்திலும் மிகப்பெரிய பொய்யை அவிழ்த்து விட்டார்.

'பெரியார் ஈ.வெ.ரா. எப்போதும் எதிலும் ஒரு தனிப்போக்கோடு நடந்து கொள்ளக்கூடியவரல்லவா?

பசல் அலி கமிஷன் பரிந்துரையிலும் தமது வழக்கப்படித் தான் அவர் நடந்து கொண்டார். திருச்சியிலுள்ள தமது மாளிகையில் தினத்தந்தி (தேதி கொடுக்கப்படவில்லை) நிருபர்க்கு அளித்த சிறப்புப் பேட்டியில் தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றின்கரை, கொச்சி, சித்தூர் ஆகிய பகுதிகள் பற்றி எனக்குக் கவலை இல்லை; மலையாளத் துடன் அவைகளைச் சேர்க்க வேண்டியதுதான்; சமீபத்தில் சர்தார் பணிக்கர் வந்திருந்தார்; அவரை 'நான் சந்தித்துப் பேசினேன். தொழிலுக்காகத் தமிழர்கள் அங்கு (தேவிகுளம், பீர்மேடு) வந்தார்களே ஒழிய நிலம் மலையாளத்தைதான் சேர்ந்தது' என்று பணிக்கர் சொன்னார்; நானும் சரி என்று சொல்லிவிட்டேன்' என பெரியார் கூறினார். (எனது போராட்டம் பக் 758) தினத் தந்திக்குக் குத்தூசி குருசாமி வைத்த பெயரே 'தினசரிப் பொய்'(டெய்லி டூப்) என்பதாகும். ம.பொ.சியும், தினத்தந்தி ஆதித்தனும் வேண்டுமென்றே பெரியாரின் மீது அவதூறுகளைப் பரப்பி வந்தனர்.

ஆதித்தனார் 1952-57 வரை பிரஜா சோஷலிட் கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். அக்கட்சியின் கொச்சி முதலமைச்சர் பட்டம் தாணுப்பிள்ளை 11 தமிழர்களைச் சுட்டுக் கொன்றார். அக்கட்சி கொச்சி சட்டசபையில், தேவிகுளம் பீர்மேடு கேரளாவுக்கே சொந்தம் என்று கூறியபோதும் தினத்தந்தி ஆதித்தன் அக்கட்சியின் செயல்பாடுகளை எதிர்க்கவில்லை. ம.பொ.சியைப் போன்றே, பெரியார் மீது ஏதாவது பொய் சொல்லிக் கொண்டிருப்பது அவரது வாடிக்கை. பெரியாருக்கென்று விடுதலை நாளேடு இருக்கிறது. எங்காவது தேவிகுளம், பீர்மேடு மலையாளிக்கு சொந்தம் என்று இருக்கிறதா என்று யாராவது காட்ட முடியுமா?


பிரஜா சோசலிஸ்டு கட்சியின் பொதுச் செயலாளர் இராம் மனோகர் லோகியா, பட்டம் தாணுப் பிள்ளையின் செயலைக் கண்டித்து, அவரை பதவி விலக வலியுறுத்தி னார்; தனது அகில இந்திய பொதுச் செயலாளர் பதவியை யும் இராஜினாமா செய்தார். தந்தை பெரியாரின் விடு தலை ஏடும், தி.மு.க.வின் ஏடு நம்நாடும் பட்டம் தாணுப் பிள்ளையின் வெறிச்செயலை வன்மையாகக் கண்டித்தன. சி.பா.ஆதித்தன், திருத்தணி கே.விநாயகம் உட்பட 7 பேர் பிரஜா சோசலிஸ்ட் கட்சியின் சார்பில் சட்டமன்ற உறுப்பி னர்களாக இருந்தனர். இவர்கள் யாருமே பதவி விலக வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்தி மொழி வெறியர் என்று கூறப்படும் லோகியா தனது பொதுச் செயலாளர் பதவியை இராஜினாமா செய்தார். ஆனால், அக்கட்சியின் தமிழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எந்தவித ஆத்திரமும் வரவில்லை.

1956 முதல் பெரியார் மறையும் வரை "தமிழ்நாடு தமிழருக்கே" என்று முழங்கி வந்தார். இவரா தமிழினப் பகைவர்? இவரா தமிழினத்துரோகி?

## தழல் தேன்மொழி
## புலவர் குமர தன்னொளியன்
## வழக்கறிஞர் த. கலைமணி
# நினைவேந்தல் நிகழ்ச்சி



26.6.2020இல் மறைந்துவிட்ட தமிழறிஞர் வேலூர் புலவர் குமர. தன்னொளியன், 25.8.2020 இல் மறைவுற்ற வழக்குரைஞர் த.கலை மணி, 14.9.2020 அன்று இயற்கை எய்திய தழல் தேன்மொழி ஆகி யோரின் நினைவேந்தல் நிகழ்ச்சி, 11-10-2020 காலை 10 மணி முதல் பகல் 2 மணி வரை மேடவாக்கம், பாவல ரேறு தமிழ்க்களம் சார்பில் எழுச்சியுடன் நடைபெற்றது.



இளங்கதிர் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடிடத் தொடங் கிய நிகழ்ச்சிக்குத் தென் மொழி ஆசிரியர் முனைவர் மா. பூங்குன்றன் அவர்கள் தலைமை யேற்றார். இறை. பொற்கொடி அவர்களின் தொடக்க உரைக்குப் பின் னர், நினைவேந்தல் உரை களை அய்யா பழ. நெடு மாறன், மூத்த வழக்கறிஞர் சங்கரசுப்பு, தோழர்கள் சேலம் அ. அருள்மொழி, வ. கௌதமன், வீ. இறைய



ழுகன், பேரா.அரசேந்திரன், முனைவர் கி.குணத் தொகை, பாலசுப்பிரமணியம், பேரா. நல்லூர் சரவணன், அ.சி. சின்னப்பத்தமிழர், தமிழ் முகிலன், தமிழ்ச்சேரன், திருச்சி இளங்கோ, குழந்தை ஈகவரசன், பவணந்தி, அருட் செல்வன்,கோபாலகிருட்டிணன், ஊர்மிளா வள்ளுவன், மொழிக்கரசன், ஆகியோர் ஆற்றிய பின்னர், இறுதியாகத் தழல் அம்மையாரின் இளைய மகன் தெள்ளியனும் சொல்லாய்வறிஞர் அருளியாரும் நெகிழ்ச்சியோடு நினைவுகூர்ந்தனர். நினைவேந்தல் நிகழ்வின் இறுதி யில் மா. பிறைநுதல் நெகிழ்வுடன் நன்றியுரையாற்றி னார். மா.பெ.பொ.க சார்பில் முனைவர் முத்தமிழ், வேலூர் மீ. தில்லிபாபு ஆகியோர் பங்கேற்றனர்.

## வாழ்க்கை ஒப்பந்த விழா



### வே.கண்மணி - அ.செந்தில்முருகன்



காஞ்சி வட்டம், கீழம்பி கிராமம் மா.பெ.பொ.க. அமைப் பாளர் வ.வேதகிரி-முத்தழகி இணையரின் இளையமகள் செல்வி வே.கண்மணி, எம்.ஏ., பி.எட்., டி.டி.இ.டி., செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம் எண்.42, பாப்பநல்லூர் கிராமம் டி.அர்ச்சுனன்-சாந்தி இணையரின் இளையகுமாரன் அ.செந்தில்முருகன், பி.சி.ஏ., ஆகியோரின் திருமண விழா, 12.07.2020, ஞாயிறு அன்று எண்.42, பாப்பநல்லூர் கிராமம், குளக்கரைத் தெரு, மணமகன் இல்லத்தில் சிறப்பாக நடைபெற்றது. சிந்தனையாளன் வளர்ச்சிக்கு மணமக்கள் சார்பில் ரூ.500/- அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

### ப.எழிலரசன் - ச.ஜோதி



காஞ்சிபுரம் உலகப் பொதுமறை திருக்குறள் பேரவையின் நெறியாளரும் மா.பெ.பொ.கட்சி உறுப்பினர் ப.பஞ்சாட்சரம் மறைந்த தனலட்சுமி இணையரின் இளையகுமாரன் ப.எழிலரசன் (பொறியாளர்) மேற்குத் தாம்பரம், நினைவில் வாழும் சரவணன்-ச.சித்ரகலா இணையரின் மகள் ச.ஜோதி,பி.எஸ்சி., ஆகியோரின் வாழ்க்கைத் துணைநல ஒப்பந்த விழா 18.10.2020 ஞாயிறு அன்று காலை 7.30 மணியளவில் காஞ்சி, நரசிங்கராயர் தெரு, ஸ்ரீ அய்யப்ப ஜெயலட்சுமி நாராயண குரு பூகா மண்டபத்தில், தமிழ் நெறியில், முற்போக்கு சமூக நீதிப் பேரவை நிறுவனர் டாக்டர் விமுனாமூர்த்தி வாழ்த்துரையுடன் இனிதே நடைபெற்றது. விழாவில் நாத்திகம் நாகராசன், காஞ்சி சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்பி.எழிலரசன் காஞ்சி குறளமிழ்தன், சி.நடராசன் ம.கோதண்டபாணி, இரா.இராசசேகர் மற்றும் கட்சித் தோழர்கள் விழாவில் பங்கேற்று சிறப்பித்தனர். சிந்தனையாளன் வளர்ச்சிக்காக ரூ.1000/- மணமக்கள் அன்பளிப்பாக வழங்கினர்.

### மோ. புரட்சித் தமிழன் - ப. ஹேமலதா



இனமானம் காத்திடத் தன்மானம் பாராத பெரியார் பெருந்தொண்டர் வடக்குமாங்குடி அ. பாலகிருட்டிணன் அவர்களின் பேரனும், மா.பெ.பொ.க கடலூர் மாவட்டச் செயலாளர் பா. மோகன் - இராணி இணையரின் அன்பு மகனும் மா.பெ.பொ.க. வின் இளம் செயல்வீரருமான மோ. புரட்சித் தமிழன்; சிதம்பரம் நகரம், வெல்லப் பிறந்தான் நகர், ம. பழனி - ரேணுகா இணையரின் அன்புமகள் ப. ஹேமலதா ஆகியோரின் மணவிழா திருவள்ளுவராண்டு 2051, பெரியாராண்டு 142, துலை (ஐப்பசி) 10-ஆம் நாள் (26-10-2020) திங்கள் கிழமை காலை 10.00 மணிக்கு, வடக்கு மாங்குடி மணமகன் இல்லத்தில் மா.பெ.பொ.க பொதுச்செயலாளர் தோழர் வே. ஆனைமுத்து தலைமையில் மாபெரும் மாநாடு போல் நடைபெற்றது.

மணவிழாத் தலைவர் தோழர் வே. ஆனைமுத்து 25.10.2020 அன்று மாலையே மணமகன் இல்லத்தை அடைந்து அன்று மாலை நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சி களையும், மணவிழா ஏற்பாடுகளையும் பார்வையிட் டார். 26-10-2020 காலை 9.30 மணிக்குத் தொடங்கிய மணவிழா நிகழ்வில் பா.மோகன் வரவேற்புரையாற்றிட முனைவர் முத்தமிழ் விழா நிகழ்ச்சிகளை நெறிப்படுத் தினார்.தோழர் வே. ஆனைமுத்து மணமக்களை உறுதி மொழி ஏற்கவைத்து மணவிழாவினை நடத்திய பிறகு, திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் துரை. சந்திர சேகரன், பா.ம.க துணைத் தலைவர் வி.எம்.எஸ். சந்திர பாண்டியன், தி.மு.க சட்டமன்ற உறுப்பினர் துரை.கி. சரவணன், தமிழுமண் இயக்கம் பேரா. த. செயராமன், த.வா.க. மதியுரைக்குழு உறுப்பினர் மு.பாலகுருசாமி, மா.பெ.பொ.க துணைப்பொதுச்செயலாளர் தி. துரை சித்தார்த்தன், புதுச்சேரி மாநிலச் செயலாளர் இரா. திரு நாவுக்கரசு, மருத்துவர் சா.மா. அன்புமணி, மரு.பொ. தனித்தமிழ்க்கொற்றன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இறுதியாக மரு. எ. செம்மலர் நன்றி கூறினார்.

இவ்விழாவில் வே.ஆனைமுத்து அவர்களின் 'தமிழர் வாழ்வியலும் தன்னுரிமையும்' என்கிற நூலை வெளியிட்டு விருந்தினர் அனைவருக்கும் வழங்கப் பட்டது. மா.பெ.பொ.க தோழர்களும், தோழமை அமைப்புத் தோழர்களும் குடும்பத்தோடு திரளாகப் பங்கேற்றனர்.

## த.அ. தமிழரிமா - இரா. சுபாசினி



பெரியாரியல் அறிஞர், சிந்தனையாளன் இதழ் ஆசிரியர், பெரியார்-நாகம்மை கல்வி அறக்கட்டளைத் தலைவர், மா.பெ.பொ.க பொதுச்செயலாளர் தோழர் வே. ஆனைமுத்து - சுசீலா இணையரின் மகள்வழிப் பேரனும், புதுச்சேரி சீனு. அரிமாப்பாண்டியன் - தமிழ்ச் செல்வி இணையரின் அன்பு மகனுமான தமிழரிமா; புதுச்சேரி ச. இராசேந்திரன் - மீனா இணையரின் அன்பு மகள் இரா. சுபாசினி ஆகியோரின் திருமண விழா, திரு வள்ளுவராண்டு 2051, துலை (ஐப்பசி) 2-ஆம் நாள் (18.10.2020) ஞாயிற்றுக் கிழமை அன்று காலை 8.00 மணியளவில், புதுச்சேரி, ஆனந்தா இன் உணவகத்தின் இரண்டாம் தளக் கூடத்தில் தோழர் வே. ஆனைமுத்து தலைமையில் நடைபெற்றது. புதுச்சேரி மாநில மேனாள் முதலமைச்சரும் என்.ஆர் பேரியக்கத்தின் நிறுவுநருமான மாண்பமை ந. அரங்கசாமி அவர்கள் மங்கலநாண் வழங்கித் திருமணத்தை நடத்தி வைத்தார்.

திருமண விழாவுக்கும், பகல் 11.30 மணிக்கு நடைபெற்ற வரவேற்பு நிகழ்வுக்கும் குடும்பம் குடும்பமாக வந்திருந்து மணமக்களை வாழ்த்திய குடும்ப உறவுகளுக்கும், கொள்கை உறவுகளுக்கும் சீனு. அரிமாப்பாண்டியன் நன்றி கூறினார். மணவிழாவில் பங்கேற்றிட்ட அனைவருக்கும் வே.ஆனைமுத்து அவர்களின் ‘வள்ளுவமே நம் வாழ்வியல் மறை!’, புலவர் செ.இராமலிங்கன் அவர்களின் ‘திருவள்ளுவரின் புரட்சி’, பேரா.கு.பூங்காவனம் அவர்களின் ‘திருக்குறள் தேசிய நூல் ஆகவேண்டுமா?’ ஆகிய நூல்கள் வழங்கப்பட்டன. பகல் விருந்தோடு மணவிழா இனிதே நிறைவுற்றது. திருமண மகிழ்வாக சிந்தனையாளன் வளர்ச்சிக்கு ரூ.2000/- அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

## கி. அன்பரசன் - க. திவ்யா



மா.பெ.பொ.க தாம்பரம் நகரச்செயலாளர் கு.கிருஷ்ண முர்த்தி - ராதா இணையரின் முத்தமகன் அன்பரசன், செங்கற்பட்டு மாவட்டம், தண்டரை கிராமம், கண்ணி யப்பன் - விஜயலட்சுமி இணையரின் மகள் திவ்யா ஆகியோரின் திருமணம் மற்றும் வரவேற்பு விழா, மேற்குத்தாம்பரம், இரும்புலியூர் ஏ.ஜி.எஸ் மண்டபத்தில் 26.10.2020 திங்கள் கிழமை நடைபெற்றது. திருமண வரவேற்பில் மா.பெ.பொ.க. பொதுச்செயலாளர் தோழர் வே.ஆனைமுத்து, மற்றும் தோழர்கள் ஆனை.பன்னீர் செல்வம், தாம்பரம் மா. சுப்பிரமணி, கஸ்தூரி சுப்பிர மணி, முனைவர் முத்தமிழ், உழவர்மகன் வடிவேலு, இரவி, சூரியன், பாலாஜி, இராஜலட்சுமி பாலாஜி கி.சேது ராசன், மகாதேவன், கு.தொல் காப்பியன், ம.தி.மு.க மாநில மாணவர் அணி அமைப்பாளர் துரை.மணிவண்ணன் சிந்தனைக் கூடம் அண்ணாதுரை, இனியன் உட்பட ஏராளமான தோழர்கள் கலந்துக்கொண்டனர். விழா விற்கு வந்திருந்த அனைவருக்கும் புலால் மற்றும் அறுசுவை உணவு வழங்கபட்டது.

தோழர் ஆனைமுத்து அய்யா அவர்கள் தம் 95ஆம் அகவையிலும், 26.10.2020 காலை சிதம்பரம், வடக்கு மாங்குடியிலில் நடைப்பெற்ற கடலூர் மாவட்டச் செய லாளர் பா. மோகன் மகன் திருமணத்தில் பங்கேற்று, உடன் புறப்பட்டு மாலையில் தாம்பரம் வருகைதந்து திருமண வரவேற்பில் பங்கேற்றுச் சிறப்பித்தார். திருமண வரவேற்பு வந்திருந்த அனைவருக்கும் தோழர் கு. கிருஷ்ணன்முர்த்தி நன்றி கூறினார். சிந்தனையாளன் வளர்ச்சிக்கு ரூ.500/- அன்பளிப் பாக வழங்கப்பட்டது.

செய்தி : **தாம்பரம் மா. சுப்பிரமணி**

## ம.அன்பு - ஜெ.காவியா



காஞ்சிபுரம் முற்போக்கு சமூக நீதிப் பேரவை தலைவர் க.கோதண்டன் அவர்களின் பெயரனும், காஞ்சிபுரம் நத்தப்பேட்டை கோ.மனிவர்மா-ந.பூங்கோதை ஆகியோரின் மகன் ம.அன்பு (பொறியாளர்) செய்யாறு பைங்கினர் திரு.க.ஜெகதீசன்-கெ.விசயலட்சுமி அவர்களின் மகள் ஜெ.காவியா, ஆகிய இருவரின் இல்லறம் ஏற்கும் இனிய விழா காஞ்சிபுரம் வரதராச பெருமாள் கோயில் வடக்கு மாடவீதி, ஏ.ஆர்.சி.திருமண மண்டபத்தில் 26.10.2020 திங்கள்கிழமை மாலை 6.00 மணியளவில் முற்போக்கு சமூக நீதிப் பேரவை நிறுவனர் டாக்டர் விமுனாமூர்த்தி தலைமையில் திரு.க.கோதண் டன் தொடக்கவுரையாற்ற திரு.பம்மபல் கை நடராசன் வரவேற்புரையாற்றினார். அனைவருடைய வாழ்த்துரையுடன் மணவிழா இனிதே நடைபெற்றது. மா.பெ.பொ.க. நகரச் செயலாளர் மு.செயப்பிரகாஷ், கா.பொன்னப்பன், காஞ்சி குறளமிழ்தன், சி.நடராசன் மா.கோதண்டபாணி ஆகிய தோழர்கள் விழாவில் பங்கேற்றனர்.

## வழக்கு - வழக்கு

சமூகப் போராளி முகிலனைக் காணவில்லை இவரைக் காவல்துறை கண்டுபிடிக்க வேண்டும் என்று 27.02.2019 பிற்பகல் சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழமை அமைப்புகளுடன் மே 17 இயக்கம் இந்தக் கூட்டத்தை நடத்தியது. பார்வையாளனாகச் சென்ற என்னையும் பேசுமாறு கூட்ட ஏற்பாட்டாளர் கூறினர்.

தோழர் முகிலனைக் கண்டுபிடிக்க வேண்டியது காவல்துறைக் கடமை என்றும்; இப்போதுள்ள சூழலில் அரசியலமைச் சட்டம், இந்துச் சட்டம், அரசு மற்றும் அதிகார வர்க்கத்தின் சர்வாதிகாரம் போக்கில் தமிழ், தமிழன், தமிழ்நாடு, சுதந்தரமாகத் தன்மானத்துடன் வாழ இயலாது என நான் பேசினேன். இதற்கு இந்தியர் தண்டனைச் சட்டம் 153 A (1)(a), 153 A 1 (B), 505(1)(b), 505 (1)(C) ஆகிய நான்கு பிரிவுகளில் சாதி, மத, இன அடிப்படையில் சமூகத்தின் ஒற்றுமைக்கு ஊறு ஏற்படும்படியும், மற்றும் அரசுக்கும் சமூகத்தின் ஒற்றுமைக்கு விரோதமாகவும் நான் பேசியதாக வழக்குகள் பதியப்பட்டுள்ளது.

இதை 28.10.2020இல் சென்னை எழும்பூரில் உள்ள குற்றப் பிரிவு (CID) என்னை விசாரணை செய்தது. காவல் துணைமின் உயர் அலுவலர்களின் ஆய்வுக்கும் பிறகு வழக்குமன்றத்ன் வழக்கு விசாரணைக்கு வரும் எனத் தெரிகிறது.

**- சி.பெரியசாமி**
துணைப் பொதுசெயலாளர், மா.பெ.பொ.க.

## இனியா-இதழ்யா பிறந்தநாள் விழா

மஞ்சக்கொல்லை ஆறு. கலைச்செல்வன் - திலகவதி இணையரின் பெயர்த்திகள் இனியாவிற்கு (பெற்றோர் : அருள்வேந்தன்-சூர்யா) 28.11.2020 அன்று மூன்றாவது பிறந்தநாள் கொண்டாடப்படுவதை முன்னிட்டும், இதழ்யா விற்கு (பெற்றோர் : அகிலன்-ரியாசா) 21.10.2020 அன்று பிறந்தநாள் கொண்டாடியதை முன்னிட்டும் சிந்தனை யாளன் வளர்ச்சி நிதியாக ரூ.500/- மகிழ்வுடன் அளிக்கப் பட்டது. பிறந்தநாள் காணும் மழலைகளுக்குச் சிந்தனை யாளன் ஆசிரியர் குழுவின் சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். **- ஆசிரியர் குழு**

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி - நவம்பர்-2020

| | | |
|---|---|---|
| **இரா.பச்சமலை** | சென்னை | 1250/- |
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **பாவேந்தன்** | அரக்கோணம் | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **மதனகவி** | வாணியம்பாடி | 500/- |
| **சோ.அண்ணாதுரை** | பெங்களூரு | 500/- |
| **இரா.பகுத்தறிவாளன்** | திருப்பத்தூர் | 250/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| **வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - நவம்பர்-2020

| | | | |
|---|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... | 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... | 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... | 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050.
அச்சிட்டோர் : **ஸ்ரீ மூகாம்பிகை ஹை-டெக் பிரிண்ட்ஸ்,** எண்.24, ஆயில் மாங்கர் தெரு (வாணியர் தெரு)
(ஜாம் பஜார் மார்கெட் எதிரில்) திருவல்லிக்கேணி, சென்னை - 600 005. பேசி : 044-28484457

Printed by **SREE MUGAMBIKAI HI-TECH PRINTS** No.24, Oil Monger Street (Vaniyar Street), Opp. Zam Bazaar Market, Triplicane, Chennai - 600 005. Ph : 044-28484457 and Published by V. Anaimuthu on behalf of Marxist Periyarist Communist Party, No.277/2, Chennai-Tiruvallur High Road, Ambattur, Chennai-50. Editor : **V. ANAIMUTHU**